# மணிவாசகர் விழா மலர்

மணிவாசகர் சபை

காரை நகர்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

University of Jaffna
894.81112
MAN
249904(AR; MAIN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# மணிவாசகர் விழா மலர்



894.81112
MAN

AR

894.81112
MAN
R

Donated by
Mr. K. C. KULARATNAM

ARCHIVES

மணிவாசகர் சபை

காரைநகர்

1957

894.81112
MAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்றமணியன்'ஸ்

## பேபி மார்க்




ஸ்பேஷல் பானங்களையே

* அருந்துங்கள் *

| | |
|---|---|
| ஓறஞ் ஸ்பெஷல் | சம்மர் றிங் |
| லங்கா அப்பிள் | கிறேப்புறுட் |
| புறுட் கிறஷ் | ரொனிக்ரோ |

தடிமன், தலையிடி,
காய்ச்சல், வயிற்றுக்கோளாறுகளுக்கு
ஓர் விசேஷ தயாரிப்பு
"ரொனிக்ரோ"

தயாரிப்பாளர் :

சுப்றமணியன்
ஏறட்டர் வாட்டர் மனுபக்ற்றி
வல்வெட்டித்துறை

கிளை :

ராஜு ஸ்ரோர்ஸ்
2/B, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MALAYA CAFE

Prop: **M. K. KATHIRAVELU**

The most up-to-date Vegetarian Cafe Run on very Hygienic Lines, Rice and Curry with Special Additional Dishes Served Daily.

**ORDERS EXECUTED AT SHORT NOTICE**

NOW OFFERS A WONDERFUL RANGE OF
DELICIOUS VARIETIES OF:

**FRESH MILK, SHERBETS, SWEETS ETC.**

The Jaffna Muncipality awarded Shields
in 1952, 53, 54, 55, 56 & 57

36 & 38, Grand Bazaar, :: JAFFNA.

---

*ஏன் யோசனை செய்கிறீர்கள்?*

என்றும் சந்தோஷமாகவும், சுகமாகவும்
திடசக்தியுடனும் இருக்க விரும்பினால்,

- பலவித சிற்றுண்டி, பலகார வகைகளுக்கும்,
- சிறந்த தேனீர், காப்பி, பசும்பால்,
- சுத்த சைவ போசனம்,
- சர்பத், குளிர் பானவகைகளுக்கும்,

மற்றும் விசேஷ நறுமணங் கமழும் சுவையுள்ள

**இந்தியா பரிமள பீடாவுக்கும் சிறந்த இடமும்**

விசேட ஆடர்களும் குறித்த நேரத்தில் தயார்செய்து
கொடுக்கப்படும்.

1952, 53, 54, 55, 56, 57-ம் ஆண்டுகளில்
யாழ்ப்பாண மாநகரசபையினரால் முதல் ஸ்தானத்தில்
மெடல்கள் பெற்ற இடமும்,
'மலாயா கபே' ஒன்றுதான்.

இன்றே விஜயம் செய்து பாருங்கள்!

## "மலாயா கபே"

36, 38, பெரியகடை, :: யாழ்ப்பாணம்.

UNIVERSITY LIBRARY

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donated by:-
Mr. K. C. KULARATNAM

*For*

- ★ HIGH CLASS NOVEL & NEW DESIGN JEWELLERIES
- ★ NEAT WORKMANSHIP
- ★ PROMPT EXECUTION

*Please Visit*

# A. NALLATHAMBY

GOLD, JEWELS & GEM MERCHANT,

**75, KANNATHIDDY : : JAFFNA**

*Telegrams:* "KAMALAM" *Telephone:* 664

நங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக நகைகள்
தரளம் பதித்த தங்க நகைகள்
நலம் பல அளிக்கும் நவரத்தினங்கள்
நம்பிக்கை, நாணயம், நயம் மிக்க நகைகளுக்கு
ஒரு முறை இங்கே விஜயம் செய்யுங்கள்

எங்கே?

# ஆ. நல்லதம்பி

தங்கப்பவுண் நகை இரத்தின வியாபாரம்

**75, கன்னாதிட்டி, : யாழ்ப்பாணம்.**

தந்தி: கமலம் ரெலிபோன்: 664

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V. M. Shanmugam & Bro.

★

General Merchants
Commission Agents
Importers &
Transporting Agents

47, K. K. S. Road, :: JAFFNA

# வி. மு. சண்முகம் அன் பிறதர்

★

பலசரக்கு வியாபாரம்

சகல சாமான்களும்
நிதானமான விலைக்குப்
பெற்றுக் கொள்ளலாம்

47, காங்கேசன்துறை ரேட், :: யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. P. T.

ஞானபண்டிதன்
ஜவுளிக்கடை

புரொப்: K. V. விஸ்வலிங்கம்
228, காங்கேசன்துறை ரோட்,
யாழ்ப்பாணம்

சகலவிதமான
பிடவைத்தினுசுகள்
மலிவாகப்
பெற்றுக்கொள்ளலாம்

Gnanapandithan Textiles

Proprietor: K. V. VISVALINGAM

IMPORTER,
WHOLESALE & RETAIL

TEXTILES
MERCHANT

228, K. K. S. ROAD, — JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமர் பிறதர்ஸ்

யாழ்ப்பாணம்

எல்லாவிதமான

## சாய்ப்புச் சாமான்களும், பள்ளிக்கூடச்சாமான்களும்

நிதானமான விலைக்கு

விற்கப்படும்

# Omer Brothers

JAFFNA

DEALERS IN

## STATIONERY, SUNDRIES ETC. ETC.

OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS

T'phone: **671**

Grams: **"PEARLS"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*T'grams :* **Sangarbros.**

*T'phone :* **308.**

# A. S. Sangarappillai & Bro.

DIRECT IMPORTERS AND EXPORTERS

General Merchants, Commission Agents & Govt. Contractors

*Head Office:*
**4 & 6 Adamally Buildings,**
P. O. Box 802, Colombo.

*Branches :*

| | | | |
|---|---|---|---|
| KARAINAGAR | - Palavodai | KANDY | - 120, Colombo St. |
| COLOMBO | - 35, Kachcheri Rd. | DAMBULLA | - Kandy Rd. |
| GALAHA | - 16, Bazaar Srreet. | KILINOCHCHI | - Kandy Rd. |

**STOCKISTS**

**SUN FLAME COOKER, OVEN**
**& REFORM FOUNTAIN] PENS**

WHOLESALE & RETAIL DEALERS IN:

# Oilmans & Provisions

**"ELEPHANT BRAND"**
**AERATED WATERS**
AVAILABLE

'யானை மார்க்' குளிர்ந்த பானங்கள் எங்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

**162, 164 & 166, Hospital Road,**
**Grand Bazaar, JAFFNA.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ESTD. **1929** TELE: **"ROHINI"**

# S. R. S.

# ஜவுளிக்கடை

வட இலங்கையில் உள்ள முதன்மையான

## ஜவுளி ஸ்தாபனம்

1929-ம் ஆண்டு தொடக்கம்

வாடிக்கையாளர்களின் ஆதரவைப்பெற்றது

உயர்ந்த ரக துணிகளுக்கு

பிரசித்திபெற்ற இடம்

**மணி புரிசேலை**

**நயிலோன் பிறின்றசேலை**

எல்லாவித ஜவுளிகளும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

N. B.—மொத்த வியாபாரிகளுக்கும், சங்கக்கடைகளுக்கும் தகுந்த கமிஷன் உண்டு

## எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன் துறை ரோட், :: யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHELL BRAND

ஷெல் மார்க்

GUARANTEED PURE ALUMINIUM WARES

MADE IN CEYLON

## அலுமினியப் பாத்திரங்கள்

உத்தரவாதமுள்ள சுத்தமான இங்கிலிஷ்
அலுமினியத்தில் இலங்கையில்
தயாரிக்கப்பெற்றது

உங்கள் தேவைக்கு எப்பொழுதும்

## ஷெல் மார்க்

அலுமினியப் பாத்திரங்களை வாங்குங்கள்

ஷெல் மார்க் அலுமினியப் பாத்திரங்களும் மற்றும் விளையாட்டுப் போட்டி பரிசளிப்புச் சாமான்களும் சகலவிதமான எவர்சில்வர், பித்தளை, செப்புப் பாத்திரங்களும், அன்பளிப்புச் சாமான்களும் எம்மிடம் மலிவான விலைக்கு

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

# சி. வி. பாட் (C. V. Bhatt)

218, 220, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

தலைமை ஸ்தாபனம் : கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# மணிவாசகர் விழா மலர்

894.81112
MAN
A/R

ஏவிளம்பி ஆண்டு மார்கழித் திங்கள்

249904

249904

மணிவாசகர் சபை வெளியீடு


காரைநகர் : யாழ்ப்பாணம்

University of Jaffna
249904
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணிக்கக் கூத்தனை வன்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப் பொற் கூத்தனை யாருரைப்பாரே.

—திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முன்னுரை

வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்டமுழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கரியோய்நீ வேண்டிஎன்னைப் பணிகோண்டாய்
வேண்டிநீயா தருள்செய்தாய் யானும்அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும்பரிசோன் றுண்டேன்னில் அதுவும் உன்றன்விருப்பன்றே

ஓரறிவுள்ள புல் முதல் ஆறறிவுள்ள மனிதன்வரை எல்லா உயிர்களும் தாம்தாம் இருக்கும் நிலையிலிருந்து மேனிலைக்குச் செல்ல முயற்சிக்கின்றன. அதனுலேயே சகல செல்வங்களும் படைத்த ஒருவன் அவ்வளவில் திருப்திப்படாது—நிறைவைக்காணுது மேலும்மேலும் உயர்ச்சியை நோக்கி முயற்சிக்கின்ருன். ஆகவே எப்படிப்பட்டவர் நிலையும் பூரணமாகாது குறைவையுடையதெனை ஒருவாறு ஊகிக்கலாம். ஆனுல், அவர்கள் மேனேக்கிச்செய்யும் முயற்சிகள் தூரவிருந்து பார்ப்பவர்களுக்குப் பின்தள்ளும் செயல்களாகவும் தோன்றலாம், எனினும், அச்செயலைச் செய்யுமவர்கள் மேனேக்கிச் செய்யும் செயலாகவே கருதிச் செய்கின்ருர்கள். ஆகவே, மேனேக்கிச் செல்லுதல்—நிறைவையடைதல் உயிர்களின் இயல்பான தன்மையென்று சொல்லலாம். இதற்காக மனிதன் தனியாயும் முயற்சிக்கின்ருன். கூட்டமாய்ச் சேர்ந்தும் முயற்சிக்கின்ருன். இவ்வாறே நாடுகளும், தேசங்களும் நாள்தோறும் முயற்சித்துகொண்டிருக்கின்றன. தனி மனிதனே, ஒரு கூட்டமோ, நாடோ, தேசமோ, முயற்சித்துக்கொண்டிருக்கும்போது இன்னெருமனிதனே, கூட்டமோ,நாடோ, தேசமோ தடையாய்-குறுக்கே வருதலை நாம் நாள்தோறும் காண்கின்றேம். இதனுலே குழப்பநிலைகளும் இவைகாரணமாக அமைதியின்மையுமுண்டாகின்றன.இவற்றை நீக்க எத்தனையோ மகாநாடுகள் கூட்டப்படுகின்றன.ஆனுல் பயன் ஏதும் கண்டதில்லை, இதற்கு நம்முன்னேர்கள் கண்ட பரிகாரம் தரும விசாரணை. நாம் சிறிது தரும விசாரணை செய்துவந்தால் தன்னுணர்வு உண்டாகும்.

இத்தன்னுணர்வை 'கிளைவ் பெல்' என்பவர் நாகரீகத்தின் சிறந்த இலட்சணம் என்று கூறுகின்ருர். தம்மை நாகரீகம் உள்ளவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்கள், அதற்குக்காரணமான என்னென்ன பண்புகள் தங்களிடம் உண்டெனக் கூறுவார்களோ, அப்பண்புகள் விசேடமாக சில, காட்டுவாசிகளிடத்தும், மிருகம் பறவை முதலியவைகளிடத்திலும் காணப்படுவதால் அவையெல்லாம் நாகரீகமாகாவென்று அவர் காரணம் காட்டி தன்னுணர்வு ஆய்வுமனப்பான்மை என்பனதான் நாகரீகத்தின் இலட்சணங்கள் என்று அறுதியிட்டுக் கூறுகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுணர்வு நானார், என்னுள்ளமார், ஞானங்களார் என்று ஆராயத் தலைப்படும். ஆராய்வு தலைப்படவே புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலகவும், மேலாம் நன்னெறியில் ஒழுகலும் உண்டாகும். அதனால் நவையறு காட்சி கிட்டும். இதை மிகவிரித்து நயம்படச் சொல்லுகிற கந்தபுராணம் 'மேன்மைகொள் சைவநீதி' என்று விதந்து கூறுகின்றது. சைவம் எனினும் நீதி எனினும் ஒக்கும். எங்கு நீதியில்லையோ அங்கு சைவம் இல்லை. "பங்கயத்தயனு மாலறியா நீதியே" என்றழைக்கின்றார் மாணிக்கவாசகப்பெருமான்.

இந்த நீதிநெறியில் வாழ்ந்தவர்கள் சமயாசாரியர்கள் நால்வரும், பெரியபுராணத்திற் பேசப்பெறும் மெய்யடியார்களும். அவர்கள் நீதியைக் கண்டு நீதியை அடைந்தவர்கள். அவர்கள் திருவாக்குகள் ஆன்மாக்கள் நீதியை அறிய உதவுவன. அவர்கள் வாழ்க்கை வரலாறுகள் நீதியை அடைய வழிகாட்டுவன. இந்தச் சைவமாகிய நீதியிலே கொண்ட பற்றினாலே நால்வர் பெருமக்களை—மெய்யடியார்களைப் பின்பற்றுபவர்களாய் உலகர் பலப்பல காரியங்களைச் செய்து வருகின்றார்கள். அவ்வகையில் இற்றைக்குப் பதினேழு வருடங்களுக்குமுன் நம்மவர் ஒருசிலரால் தோற்றுவிக்கப்பட்டதுதான் மணிவாசகர் சபை. காரைநகர் வடக்கிலே, சடையாளி வயிரவர் கோயில் முன்றிலிலே (1-1-40) பிரமாதி வருடம், மார்கழி மாதம் 17-ம் உ திங்கட்கிழமை பிரம்மஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் தலைமையில் ஆரம்பமானது. அவ்வாண்டுத் தலைவர் பிரம்மஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள், காரியதரிசி திரு. ந. அருளையா அவர்கள் தனாதிபர் திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள். அக்காலத்தில் திரு. மு. அம்பலவாணர் அவர்கள் போஷகராய் இருந்து பல உதவிகள் புரிந்தனர். அக்காலமுதற்கொண்டு மாதந்தோறும் கூட்டங்கள் கூடி, சமயசம்பந்தமாகவும், தமிழ்மொழி சம்பந்தமாகவும் கலந்துபேசியும், விரிவுரைகள் நிகழ்த்தியும் ஒருவாறு சிறிய அளவில் வேலைசெய்துவந்தார்கள். அக்காலமுதற்கொண்டே சிறிய வாசிகசாலையும் நடத்தப்பட்டுவந்தது. பின் சிலகாலஞ்செல்ல மாதாந்தக் கூட்டங்களோடு வருடாந்த விழாக்களை இரண்டு மூன்று தினங்கள் சிறப்புற நடத்தியும் வந்தார்கள். 1948-ம் ஆண்டளவில் சபை தனக்கென ஒரு சிறிய கட்டிடத்தை அமைத்துக்கொண்டது. இதில் திரு. த. இராசரத்தினம் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார்கள். ௸ வாசிகசாலைக்கு ஸ்தலஸ்தாபனத்தார் பணவுதவி புரிந்துவந்தார்கள். அரசாங்கத்தாரின் கொள்கைக்கியைய மணிவாசக சனசமூக நிலையம் என பிரத்தியேகமாய் ௸ கட்டிடத்திலேயே நடைபெறலாயிற்று. விரோதி ௵ ஆனி ௴ மகத்தினத்தில் (30-6-49) சமயாசாரியர்கள் நால்வருக்கும் கோயில் அமைக்கவேண்டுமென ஒரு பிரசுரம் வெளியிட்டு, அதற்காகிய முயற்சிகளும் செய்தனர். சிலர் பொருள் தருவதாகவும் வாக்களித்திருந்தனர். அதன்பின் சிலகாலம் சபைமுயற்சிகள் குன்றியிருந்தன. அவ்வாண்டு திரு. வே. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் சபை மிகப் பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலம் அடைந்தது. பலகாரியங்கள் செய்தது. அப்போதுதான் நால்வர் விழா ஒன்று மிக்க சிறப்புடன் நடைபெற்றது. அத்தோஷபரிகாரமாய்த்தான்போலும் மேற்கூறிய நிலை ஏற்பட்டது. அத்தளர்வுநிலை பலகாலம் நீடிக்கவில்லை. அக்காலத்திலும் சனசமூகசபைப் பொறுப்பில் மாணவர்கள் பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றினர். சிலர் தீவுப்பகுதிச் சமாசப் போட்டியிலும், சிலர் யாழ்ப்பாண சமாசப்போட்டியிலும் வெற்றிபெற்று பரிசுகளைப் பெற்றனர். பின்பு 1955-ம் ஆண்டில் சபையார் முயற்சியினுல் மணிவாசகர்விழாவை நடாத்துவதற்காக மணிவாசகர் விழாச்சபை எனப் பலபகுதியிலுள்ளவர்களையும் கூட்டி ஆரம்பிக்கப்பட்டது. மணிவாசகர்சபை முயற்சியினுல் அப்பெயருடன் சனசமூகநிலையமும், விழாச்சபையும் நடைபெற்றுவருகின்றன. சபையின் விழாக்கள், கொண்டாட்டங்கள் காரை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. அதுவிஷயத்தில் கல்லூரி முதல்வர்களின் பெருந்தன்மையைப் போற்றுகின்ருேம். ஆரம்பகால முதற்கொண்டு சபையின் பலநிலைகளிலும், பிரிவுகளிலும் சிறிதும் சலிக்காது மிகமிக முயற்சித்து அரும்பாடுபட்டுவருபவர் பிரம்மஸ்ரீ க. வைத்தீசுவரக்குருக்களவர்களாவர். ஐயா அவர்களது முயற்சிக்கு நம்மவர் செய்யும் கைமாறில்லை. மாணவர்களாயிருக்குங் காலத்திலே சபைக்காக அரும்பாடுபட்ட பலர் இப்போது பெரும்பதவிகளிலே இருக்கின்ருர்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் Dr. கு. தண்டாயுதபாணி அவர்களும், Dr. ந. குணரத்தினம் அவர்களும், திரு. ச. வேலுப்பிள்ளை அவர்களும், திரு வை. செல்வரத்தினம் அவர்களும், திரு. து. விசுவநாதன் B. Sc. அவர்களும், திரு. வே. சிவசுப்பிரமணியமவர்களுமாவர்.

மன்மத வருடம், மார்கழி மாதம் தொடங்கி மணிவாசகர்விழா காரைநகர்த்திண்ணபுரம் கூத்தப்பிரான் ஆலயத்திலே அப்பெருமான் தினங்களாகிய திருவாதிரைக் காலத்திலே மிக உயர்ந்தமுறையில் நடாத்தப்பட்டு வருகின்றது. அக்காலத்திலே கற்றுவல்ல பெரியோர்களைக்கொண்டு திருவாசகம், திருக்கோவையார் என்னும் திருவருட்பாடல்கள் பற்றியும் மணிவாசகர் வாழ்க்கைபற்றியும் பல தலைப்புக்களிலே பிரசங்கம் செயவிக்கப்படுகின்றது. இவ்விழாக்களுக்கு டிை கோயில்ஆதீனகர்த்தர்களாகிய திரு. அ. ஆண்டி ஐயா அவர்களும், திரு. து. முருகேசு அவர்களும் காட்டிவரும் ஒத்துழைப்பும், சிரத்தையும் மிகவும் பாராட்டத்தக்கன. இவ்விழாவைத் தவருது வருடந்தோறும் நடாத்திவருதல் வேண்டும் என்று நம்மவர் கூறுமளவிற்கு வந்துவிட்டனர். எனவே அதன் இன்றியமையாமையை உணர்ந்துவிட்டனர் என்று கூறலாம். தென் இந்தியாவிலுள்ள விசேடமான பல ஆலயங்களிலே, உற்சவகாலங்களிலே இவ்வித பிரசங்கங்கள் நடைபெறுவதை இங்கே விசேடமாய்க் குறிப்பிடவேண்டும். உற்சவங்கள் தோத்திர, சாத்திர, புராண அறிவை மக்களுக்குப் புகட்டுவனவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையவேண்டும். அப்படிப் புகட்டினால்தான் உற்சவங்களின் உண்மையை அறிந்து அநுபவித்து மக்கள் நன்மையடையமுடியும். உற்சவங்கள் வாணம், மேளம் முதலான வேடிக்கைகளுக்காக நடத்தப்படுவன வல்ல என்ற எண்ணம் மக்கள் மனதில் நன்றாகப் பதியவேண்டும். அதற்காக ஆலயங்கள்தோறும் இவ்வித விழாக்களும், போதனைகளும் நல்லமுறையில் அமையவேண்டும். இவ்வித கருமங்கள் நாளும் பெருக கூத்தப்பெருமான் குரைகழல் பணிகுதும்.

இவ்வாண்டு விழாவின் ஒரு அங்கமாக இவ்விழா மலர் வெளியீடும் இடம்பெற்றுள்ளது. இதில் இலங்கையிலும், தென் இந்தியாவிலுமுள்ள சைவத் தமிழ் அறிஞர்கள் மணிவாசகப் பெருமான் அருள்வாக்குப்பற்றிய பல தலைப்புக்களில் பல கட்டுரைகள் எழுதியிருக்கின்றார்கள். கட்டுரை எழுதியுதவிய பெரியோர்கள் எல்லோருக்கும் அவர்கள் பெருந்தன்மையைப் பாராட்டி அவர்களுக்கு வணக்கம் செலுத்துகின்றோம். செய்திகள் உதவி எங்களைக் கௌரவித்த அருளாளர்கள் யாவர்க்கும் எங்கள் பணிவு உரியதாகுக. விளம்பரங்கள் உதவி எங்களை ஊக்கிய அன்பர்கள் யாவர்க்கும் எங்கள் நன்றி என்றென்றும் பொருந்துக. பிரதிமைப்படவுருவங்கள் உதவி மலரைச் சிறப்புறச்செய்த ஈழகேசரிப் பதிப்பகத்தாருக்கு எங்கள் நன்றி உரித்தாகுக. இதனை மிகக் குறுகிய காலத்தில் அச்சிட்டுதவிய ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தாரது முயற்சியைப் போற்றுகின்றோம்.

சைவத்தமிழுலகம் எங்கள் முயற்சியைப்பாராட்டி, இம்மலரைஉவந்து வரவேற்று மேலும் மேலும் இவ்வித சைவத் தமிழ்ப்பணி பெருகவேண்டுமென்று வாழ்த்துமென எதிர்பார்க்கின்றோம்.

என்றும் இன்பம் பெருகுக!

அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் ஆரிங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம்பலக்கூத்தா
மருளார் மனத்தோடுனைப் பிரிந்து வருந்துவேனை வாஎன்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல் செத்தேபோனாற் சிரியாரோ.

இங்ஙனம்
**மணிவாசக சபையார்**

காரைநகர்
20-12-57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


| | | பக்கம். |
|---|---|---|
| முன்னுரை | | |
| வாழ்த்து ... | தென்கோவை பண்டிதர் சி கந்தையா அவர்கள் | 1 |
| | வித்துவான் க. கி. நடராஜன் அவர்கள் B. O. L. | 6 |
| வாழ்த்துரை ... | டாக்டர் சி. சுப்பிரமணியம் அவர்கள் | 8 |
| வாழ்த்துச்செய்திகள் ... | (1) ராஜாஜி அவர்கள் | 9 |
| | (2) சென்னை நிதி, கல்வி மந்திரி சி. சுப்பிரமணியம் அவர்கள் | 10 |
| | (3) திரு. சு. நடேசபிள்ளை B.A,B.L. அவர்கள் | 12 |
| | (4) சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் | 13 |
| திருவாசகம் ... | சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A. | 1 |
| ஆதியுமந்தமு மில்லா அரும்பெருஞ் சோதி | சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் B. A. | 6 |
| மணிவாசகப் பெருமான் மனக்கருத்தின்நிலை | மகாவித்துவான் சி. கணேச ஐயர் அவர்கள் | 11 |
| திருவெம்பாவை—விளக்கவுரை | ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் | 13 |
| திருக்கோவையாரின் செம்பொருள் ... | தமிழ்ப் பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர் | 29 |
| பேதித்து நம்மை வளர்த்தெடுத்தபெய்வளை | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் | 34 |
| "வேண்டத்தக்க தறிவோய்நீ" | திரு. மு. ஞானப்பிரகாசம் B. A., B. Sc. | 37 |
| காணுதலும் பேணுதலும் ... | வித்துவான் க. கார்த்திகேசு B. A. அவர்கள் | 39 |
| ஆளுடையடிகளின் யாக்கையமைப்பு | புலவர்சிவம் கருணாலய பாண்டியனார் அவர்கள் | 45 |
| நடராஜ வடிவம் ... | கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் | 49 |
| தலைவர் மகிழுந் தமிழ் ... | பண்டிதை த. வேதநாயகி அம்மாள் | 53 |
| வேதப்பொருள் ... | சிவ ஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் B. A. | 61 |
| கூத்தப்பெருமான் ... | பண்டிதர் சு. அருளம்பலம் அவர்கள் | 64 |
| திண்ணபுரத் திருப்பதிகம் ... | த. நாகமுத்துப்புலவர் | 68 |
| திருக்கோவையார் உண்மை ... | வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்கள் | 72 |
| திருவாசகத்தின் அன்புநிலை ... | சிவஸ்ரீ கு. பூர்ணாநந்தா B. A. (HONS) | 77 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருவருள் துணை

தென்கோவை, பண்டிதர் ச. கந்தையாபிள்ளை அவர்கள் வழங்கிய

## வாழ்த்துரை.

மணிவாச சபையை வாழ்த்தி மகிழத்
தணிவில் அருளைத் தருமால் — அணியார்
மணக்குளத்து வாழும் மதகளிறு நாயேன்
நிணக்குளத்து நீங்காது நின்று.

## ஆசிரியப்பா

திருவால வாயிற் சிவபரம் பொருளாம்
அங்கயற் கண்ணி பங்குறை இறைவன்
பஞ்சமய கோசுக் கற்பனைப் பண்பாம்
ஐவகை மன்றுதொ ருடிய பரமனும்
மாயையின் உருவாய் மன்னிய பல்வகைக்
குன்றுதொ ருடிய குமர வேளும
கீரன் முதலாம் புலவரும் கெழுமிச்
சங்கத் திருந்து தமிழா ராய்ந்த
மங்கலப் பாண்டி வளநா டதன்கண்
போத மார்திரு வாத வூரினில்
நந்திதன் அம்சமாய் நந்தவப் பயனாய்
வந்தவ தரித்த அந்தணர் திலக!
பைந்தமிழ்ப் பாரக! பண்டித சிகாமணி!
பழம்பதி யாகும் பாண்டிநா டாண்ட
ஈண்டிய பல்புகழ்ப் பாண்டியன் தனது
மந்திரத் தலைமை வகித்திடு சதுர!
தன்னுயிர் போல மன்னுயிர் ஓம்பி
அரசுறு நுகம்பூண் டவனிமுறை காத்தோய்!
இந்திர போகமும் குபேர சம்பத்தும்
எய்தியே இன்பவாழ் வியைந்திடு செல்வ!
அழியும் பவுதிக அசுத்தநிறை யமைந்த
உடனிலை யாமையும் உலக மாயையும்
கண்டே உவர்ப்புக் கொண்டு பற்றற்று
முத்தி வேட்கை முற்றிடும் பெரியோய்!
சீவர்கள் பக்குவச் செல்விக் கேற்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படு முறையின் மேதைகள் பல்லோர்
ஊழிற் கண்ட உவலைச் சமயமும்
ஒவ்வாச்சாத் திரமும் துவ்வா வாக
உண்மை காண்பா னுளமூ சலாட
அம்மை தொருற்றும் சொன்னவினை கூட்டத்
திருவார் பெருந்துறைச சித்து மூர்த்தியாம்
சிவபரம் பொருளின் திருவடி தொழுது
கன்மபே தஞ்சட பேதம் பக்குவ
பேதங் கண்டவ னுரைத்திடு போத
சாதக யோக வேதகட் டங்களை
வழுவறத் தாங்கி யொழுகிய விரத!
ஆதா ரங்களி னரிய மறையும்
மையலாங் கடலிற் பையப் பையக்
கொடுபோந்து பாசக் கொடுந்தா ழுருவி
அன்னவன் கருணையால் அருமறைப் பொருளாம்
மௌன வித்தையாம் மகாரப் பெட்டை
அருளிடப் பெற்றே யுவந்திடு மண்ணல்!
என்புள் ளுருகலால் இருவினை யீடாம்
ஏற்ற மிறக்கம் விடுபடத் துன்பெலாம்
ஒருவிடும் இருவினை யொப்பும் மலபரி
பாகமும் ஞான சக்தி யுடலில்
அணுவணு வாக வமைந்திடும் சத்தி
பாதமும் பெற்றுத் தீதகன் றுயர்ந்தோய்!
ஆக்கையுறு பொருளாம் விந்தின மைந்த
கந்தெனு மசுத்த வழியும் கசடொரீஇ
அருவமாய்ச் சிவமாய் அமைந்திடப் பெற்றோய்!
பூவும் நீருங் காலும் வானும்
ஒரோவொரு புறமாய் விராவி யமைய
நந்தி யொளியா நவமான செஞ்சுடர்
அகத்தும் புறத்துங் கண்டா னந்தம்
உண்டு தன்னிலையே முன்னிலை யாக
முடிந்தமெய் ஞானக் காட்சியின் முற்றி
முன்னிலை தன்னை விவகரிக் கும்பே
றனுபவ முறையா னமைந்திடு மறையாம்
வாசக மாமறை வழங்கிய வள்ளால்!
முன்னிலை கண்டு களித்திடு மூடராய்
படிப்புவல் லபமும் பட்டமும் பெற்ற
எம்ம னோரால் இம்மறை யுண்மை
காணும் பெற்றி பூணுதற் காமோ?
மனமும் மதியு மொன்றுற மருவலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவடி யிரண்டும் வைப்பிடந் தெரிந்தோய்!
மலபரி பாகமாங் கந்தழி பெறலால்
அசுத்தமாந் துப்பு நீங்கி யமலமாய்
விந்தெனும் வித்து மேவிடப் பெற்றோய்!
பிணிமூப்புச் சாக்காடும் பிறவியு முதலாம்
ஊனங்க ளெட்டு மறவே யொழிந்த
ஈனமில் காயமாம் காமக் கிழத்தியை
விமல வல்லியாம் பேரின்பம் விளைக்கும்
பிரமக் கிழத்தியை யமல விளைவால்
கீழ்கடற் கழிதான் மேல்கடல் நுகத்தொளைப்
பெற்றிடு மருமையிற் பேணிக் கண்டே
காமன் வென்றிக் கொடிபோற் கவினும்
சிந்தா மணியைத் தெண்கட லமிர்தே
அந்தா மரையன்ன மேயென வரற்றி
அனுபவக் கோவை யறைந்திடு மன்மத!
உடலுக் குயிருயிராய் உயிருக் குடலுயிராய்
பதிவிரதா தர்மப் பண்பு மேற்கொளீஇ
ஒன்றுறக் கூடிக் குழைந்தோ வாது
காமக்கனல் கதித்து மூழ்கி யெழுந்து
ஊனம் நீங்கி ஒளிமய மான
அமல வுடலம் அமைதரப் பெற்றோய்!
உடலின் மாத்திரை யரையா யுறலால்
தாமத வியக்கமு முயிரின் மாத்திரை
ஒன்றா யுறலாற் றீவிர வியக்கமும்
இயைதலால் இரண்டுஞ் சமமுற வியங்கி
உடலு முயிரு மொன்றுறக் குழைய
அசுத்த வூச லாட்டம் ஒழிய
பொன்னூச லாட்டம் பொலிதரப் பெற்றோய்!
ஊசலாட்டும் உடலுயி ராகிய
இருவினை சமமா யியைந்திடப் பெற்றோய்!
சையொத் திருத்தலால் செய்வன செய்யும்
சதுரப் பாடும் சமைந்திடப் பெற்றோய்!
இறையனா ரகப்பொருட் கிலக்கிய மாய
கோவையின் மாண்பு கூறவும் படுமோ?
அனுபவ முறையே கோவை யாக
நின்போ லமைத்தோர் நீணிலத் துளரோ?
கழறி யுரைத்தலாம் கவியினி லுடருயிர்
அழியா வுண்மை அமைத்தே யருளினை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுக்குறிக் கவியில் மாற்றிப் பிறந்தே
ஈசனை யடையும் இயற்கைநிலை கூறினை!
புகலிட மாகிய ஊரிற் புகுந்து
ஊரனாய் உலகுக் கூதிய மாயினை!
மேலைய நாவில் காலிரண்டு மிட்டு
கதவந் திறந்து மறைக்காடு கண்டே!
அமல நாதங் கேட்டே உடலம்
ஊனம்நீங்கி ஒளி திகழப் பெற்றாய்!
நடனமே அசைவாம் நாதமும் அதுவே
"நடனங் கண்ட போதே யென்றன்
சடலஞ் செய்த பாக்கிய" மென்றே
முத்துத்தாண் டவனும் மொழிந்தன னன்றோ!
தில்லைவா ழந்தணர் திருவா சகப்பொருள்
யாதென வருட்பெருஞ் சோதி யாகி
மன்றினுள் மறைந்த மாணிக்க மணியே!
உண்மை முத்திநிலை இதுவென வுலகோர்
கண்கூ டாகக் கண்டே யறிய
காட்டிய குருவாங் கருணையங் கடலே!
கண்ணுள நினது கழலிணை போற்றுவன்
அருண்மதி பெரும! அருண்மதி பெரும!
பொன்பெய ரதனால் புலவர்நா டுறழும்
தென்பொலி யீழத் திருவமர் நாட்டில்
வேளாண்மை திகழும் தாளாண்மை சிறந்து
மதிப்பொலி வோடு மக்கட்பண் பமைந்து
சைவமுந் தமிழுந் தழைத்திட அருந்தொண்
டாற்றிடு நீர்மை யமைந்திடு தீரராம்
சீரியர் பலர்வாழ் காரைமா நகரில்
ஈழச் சிதம்பரம் என்ன யாவரும்
போற்றி வணங்கும் புராதனத் தலமாம்
சவுந்தர நாயகி சமேத ஞன
சுந்தரே சன்னருள் துலங்கிடு மாலய
மண்டப மதனில் மன்னிடு சபையும்
அன்னதை நடாத்தும் ஆர்வமே யுருவாம்
கழப்பகல் வாய்மை உழப்பு மேற்கொண்ட
அன்ப ரீட்டமும் ஆண்டாண்டு தோறும்
குதூகல மாகக் கொண்டாடும் விழவும்
அறிவான் மிக்க அனுபவ சீலராய்
தலைமை தாங்கும் சால்புநிறை பெரியரும்
படிப்பு மறிவும் தமிழ்ப்பண் பாடும்
அபிமான மாகும் மமகார மிலராய்
உண்மையை நாடும் உத்தம ராகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரை நிகழ்த்தும் வித்துவப் பெரியரும்
விரிஅவைக்கண் விளங்கும் அன்பரும் பிறரும்
அருண்மலி சொல்லினு மரும்பெரும் செயலினும்
மாணிக்க மணியாம் வரதநீ அருளிய
சத்திய நெறியாம் முத்திநெறி காட்டும்
பண்டைச் சைவ பண்புநனி தழீஇ
நிலமிசைக் குலவி நீடுவாழ் கெனவே!

**மணிவாசகன் திருவடிக்குப் பல்லாண்டு!**
**மணிவாசக சபை நீடு வாழ்க!**
**சைவந் தழைக!**

நமப்பார்வதீ பதயே!
அரஹர மஹாதேவா!

உலவாக் காலம் தவம்எய்தி
உறும்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவியேனைப் பணிகொண் டாய்
மலமாக் குரம்பை இதுமாய்க்க
மாட்டேன் மணியே உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன்
என்கொண் டெழுகேன் எம்மானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் மணிவாசகர் சபை

## மலர் வாழ்த்து

வித்துவான் திரு. க. கி. நடராஜன் B. O. L., DIP.-IN-ED.

### வெண்பா

மணிமணியாச் செந்தமிழ்த்தேன் வாசகத்தை வாரி
அணிபெறயா முய்ய வருளும் — மணிமொழியான்
பேரா னியன்ற பெரியசபை வாழியரோ
காரைநகர் வாழி கதித்து

### ஆசிரியப்பா

உலகிரு ளகல இளவள ஞாயிறு
அலகில் பெருங்கடற் ருேன்றி யாங்கு
வாதவூர்த் தோன்றிய வளங்கெழு ஞாயிருய்
அருந்தமிழ்ப் பாண்டியன் அரிமர்த் தனன்செய்
பெருந்தவத் தாலவன் பேரமைச்ச ளுகித்
தென்னவன் பிரம ராயனுத் திகழ்ந்து,
தென்னுடு பெற்ற மன்னவன் என்ன
வாழ்வாங்கு வாழ்ந்து தாழ்வறப் புரந்து,
பெருந்துறை யதனிற் பெம்மான் குருந்த
மரத்தடி வைகி மாணருள் பெருக்கக்
கரைந்திரு கண்ணீர் மழையெனக் கலுழத்
திருந்துசிவ போக மென்னுந் தேறல்
அருந்தித் தேக்கி அரையன் பொருளெலாங்
குருந்தடிக் கிடத்திச் குரவனு ரருளால்
நரியெலாம் பரியா வந்திட நல்கிப்,
பரிமிசை ஈசனுர் பரிக்கக் கண்டும்,
தண்ணீர் மலரணி சடையோன் முடியில்
மண்ணது வேறவும் மாறன் பிரம்படிப்
புண்ணது வேறவுங் கண்டு பொருஉராய்க்
கண்ணீர் பெருக்கிக் கசிந்துநின் றுருகிக்
கறைமிடற் ருேன்றனைப் போற்றிக், கயற்கட்
பிறைவளை மூகையைப் பேசுவித் தருளியும்,
மத்தப் பெருக்கால் வழக்கிட வந்த
புத்தரை வாதிற் புறங்கண் டருளியும்,
பிறைமுடி யண்ணற் பிரானுர் எழுத
மறையெனும் பெற்றியின் வாசகங் கோவை
அறுநூ றும்நா னூறுமா வருளித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனொடு பாலுந் தெய்விக அமுதும்
மானவே யானும் மாந்திப் பிழைக்க
ஊனையு முயிரையும் உருக்கத் தந்தும்,
கற்றைச் சடையோன் கருத்தினைக் குழைத்த
மற்றொப் பிலாத வாதவூ ரண்ணல்
மணிவா சகனார் பெயரினை வழங்கி
அணிபெறு தமிழும் அருளார் சைவமும்
நனிமிக வோங்க நற்பணி புரியுங்
கனிவுடன் ஈழச் சிதம்பரம் என்னும்
காரைச் சிவனார் சீருடைக் கோயில்கொள்
காரை நகருளார் கருதுமென் நண்பினர்
பதினே ழாண்டின்முன் பண்புடன் நிறீஇய
மணிவா சகசபை வாழிய; மற்றதன்
பணிகளும் விழாவும் பார்மிசை சிறக்க;
அணிமிகு மன்னதன் மலரினி தோங்க;
வாழுக பெரிதே வாழுக பெரிதே
ஆழிசூ முலகில் அரனார் அருளால்
வாழுக வாழுக வாழுக பெரிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

டாக்டர் சி. சுப்பிரமணியம்
L. M. S. (CAL.) L. R. C. P. & S. (EDIN.)

சைவம் சிவத்தின் தொடர்புடையது. சைவசமயம் உயிர்களைச் சிவத்தி னேடு தொடர்புபடுத்தும் நெறியாகும். எல்லாவுயிர்களும் இன்பத்தை அடைய விரும்புகின்றன. சிவமே உயிர்கள் இன்பத்தை அடைதற்கு நிலைக்களமாயுள்ள பெரும் பொருளாகும். சிவசம்பந்தமின்றி எவ்வுயிரும், நிலைபேருகிய இன்பத்தை அடையாது. அன்பு நெறியாகிய சைவம் எல்லார்க்கும் பொதுவானது. தென்னு டுடைய சிவனே எந்நாட்டவர்க்கு மிறைவன்.

சைவசமயம் சிறந்தோங்க, முன்னே பல பேரறிஞர்கள் முயன்று வந்தார் கள். இக்காலத்தும் பலர் முயன்று வருகின்ருர்கள். சைவசமயம் வளர்ந்தோங்க இந்நாளில் பல சபைகள் தோன்றிப் பெருந் தொண்டாற்றி வருகின்றன. அவை களுள் ஒன்ருக விளங்குவது காரைநகர் மணிவாசகர் சபையாகும். இச் சபை யாண்டுதோறும் மணிவாசகர் விழாவினைச் சிறப்புற நடாத்தி சைவ சமயத்திற்குப் பெருந் தொண்டாற்றி வருகின்றது. இவ்வாண்டு மணிவாசகர் விழா மலர் எனப் பெயரிய மலரினை வெளியிடுகின்றது. அரிய பெரிய கட்டுரைகள் அடங்கிய இம் மலர் பெரும் பயன் நல்குமென்பது அறிஞர் பலர்க்கும் ஒத்த முடிபாகும். இம் மலரென்றும் நின்று நிலவுக.

மணிவாசகர்சபை இத்தகைய தொண்டுகள் பலவற்றைச் செய்து கண் ணுதற் பெருமான் திருவருளால் என்றும் நின்று நிலவுவதாக.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்திகள்

C. RAJAGOPALACHARI

60, BAZLULLAH ROAD
TYAGARAYANAGAR
MADRAS 17



அரசியல் என்னவாயினும் சரி. தெய்வத்
தையும் தமிழையும் மறவாது போற்றுக. இதைச்
செய்தால் எவரும் மகிழ்ச்சியடைவார்கள்.
இவ்வளவு நல்ல சமயாச்சாரங்களை
நல்வழியில் காத்துவருக.

இதுவே மாணவர்கள் சபைக்கு என்
பணிவான உரை

இராஜகோபாலாச்சாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C. SUBRAMANIAM
MINISTER FOR FINANCE AND EDUCATION

FORT ST. GEORGE
MADRAS

18-12-1957

நாளும் தமிழ் இசையால் இறைவனை வழிபடும் அருட்பண்பு நம் தமிழ் நாட்டிற்கே இயல்பானதொன்று. சங்ககாலம் முதற்கொண்டு இப் பண்பாட்டின் தன்மை சிறிதும் குன்றாமல் இன்றளவும் நிலவி வருகின்றது: திருமுருகாற்றுப்படை, பரிபாடல் முதலியவற்றின் மூலம் தொடங்கிய இத்தெய்வப் பாடல்கள், காலத்தாலும் சூழ்நிலையாலும் சற்றும் மாறாமல் நம் காலத்துக் கவிஞரான தேசிகவிநாயகம்பிள்ளை வரை தொடர்ந்துவந்துள்ளது. மக்கள் உயிர் இம்மாநிலத்தில் உள்ளவரையும் இது தொடர்ந்து நீடிக்கும் என்பதிலே சிறிதளவும் ஐயம் இல்லை.

மனித அறிவால் சாதிக்கமுடியாத அரிய செயல்கள் எதுவுமே இல்லை. "கந்துக மதக்கரியை வெல்லலாம். கரடிவெம்புலி வாயையும் கட்டலாம். ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம். நீர்மேல் நடக்கலாம் கனல் மேல் இருக்கலாம். விண்ணவரை ஏவல் கொள்ளலாம். வேறொருவர் காணாமல் உலகத்தில் உலாவலாம். செயற்கை நிலவையும் செய்து பறக்க விடலாம். இவையெலாம் அரிய செயல்கள் அல்ல. ஆனல் நம்முடைய வாழ்க்கைதான் நம்மால் உணரக்கூடாத பெரும் சிக்கல் உடையதாக இருக்கிறது நம்முடைய சிந்தையைத்தான் நம்மால் அடக்கமுடியாது தவிக்கிறோம். வாழ்க்கைக்கும் நமக்கும் என்ன தொடர்பு? உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவு என்ன? அவை ஏன் ஒருசமயத்தில் ஒன்றாக இருந்து மறு சமயத்தில் பிரியவேண்டும்? பிரிந்து செல்லும் உயிரின் இயல்பு யாது? அது எங்கே செல்கிறது?

இவ்வுண்மைகளை உணர்ந்தவர்தான் வாழ்க்கையை உணர்ந்தவராவர். அவர்கள்தான், வாழ்வுப் பாதையிலே வழியறியாது — ஒளி அறியாது தவிக்கும் உயிருக்கு வழித்துணையாய் இருக்கமுடியும். உயிருள்ள போது பிறருக்குப் பெருந்துணையாய் நின்றதுபோலவே பிற்காலத்தவர்க்கும் அவர்களின் அருள் வாக்குகள் கலங்கரை விளக்கமாய் நின்று, வாழ்வுக் கடலிலே திசை மாறியவர்களை நன்னெறிப்படுத்தும்.

இவ்வகையில்தான் மணிவாசகரால் அருளப்பட்ட திருவாசகம் நம் அனைவருக்கும் தோன்றாத் துணையாய்—பிறவிப்பிணி தீர்க்கும் அரிய மருந்தாய் — இறைவன் அடி சேர்க்கும் இனிய ஆற்றுப்படையாய் நிலவி வருகிறது. கருங்கல் மனத்தையும் கனிவித்துக் கடவுளின்பால் அதனை ஈடுபடுத்தும் பெரும்புணையாக உள்ளது. இதனல்தான் "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்னும் பழமொழியும் நம்மிடையே நிலவி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டி நாட்டில் அமைச்சராக இருந்து பணியாற்றிய வாதவூரடிகள், பொன்னும். பொருளும் நிலையற்றவை எனத் தேர்ந்து விண்ணும் மண்ணும் புகழும் துறவுக்கோலம் பூண்டார். உண்மையான வாழ்வு வாழ்ந்தார். அவருடைய அருந்தமிழ்ப் பாடல்கள், உடலையும் உள்ளத்தையும் ஊனையும் உருக்கும் தன்மை வாய்ந்தவை. இறைவனின் இயல்பை உள்ளவாறு உணர்த்தும் தன்மை நிறைந்தவை. மாந்தரைத் தீ நெறியினின்றும் விலக்கி செந்நெறிப்படுத்தும் நற்றிறம் வாய்ந்தவை. "வான் கலந்த மாணிக்கவாசக" என்னும் பாடலின்மூலம் இராமலிங்க அடிகள் மணிவாசகத்தின் பெருமையினைப்பற்றி கூறியதற்குமேல், வேறுயார் கூற முடியும் ?

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகியான் எனதுஎன்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி,நின் றாயைஎன் சொல்லி வாழ்த்துவனே.

என்னும் ஒரு பாடலின்மூலம் மணிவாசகரின் பெருமையினை நன்கு உணரலாம். இறைவன்தான் எல்லாம் ஆகி நிற்கின்றான். அவன் ஒருவனே உண்மையுமாய் இருக்கிறான். இன்மையுமாய் இருக்கின்றான். அவனது அருள் விளையாடல்களிலே அதுவும் ஒன்று. எனவே, இறைவன் இல்லை என்று கூறுவாரிடமும் அவன் கரந்து உறைகின்றான். அதை அவர்கள் தெரிந்துகொள்ளாவிட்டாலும் ஆண்டவனின் அளப்பரிய ஆற்றலை நம்புபவர்களாவது தெரிந்துகொள்ள வேண்டாமா? மாந்தர் அனைவரிடமும் அன்பு காட்டவேண்டாமா? வெறுப்பையும் பகைமையையும் வளர்க்காமல், அன்பையும், அருளையும் பேணிக் காக்கவேண்டாமா?

வாதவூரடிகள் நமக்கு உணர்த்திச் சென்ற அன்பின் வழியே சென்று அருள் கோவிலுக்குள் நுழைந்து, உண்மை நெறியாகிய இறைவனைக் காண்போமாக!

சி. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைமகன்

உயர்திரு. சு. நடேசபிள்ளை, B. A., B. L.

தலைமகனைக் கருதத்தக்கவனது இலக்கணம் யாது? மணிவாசகப்பெருமான் திருக்கோவையாரின் இறுதிச் செய்யுளில் தலைமகன் இலக்கணம் கூறுகின்றார் அது வருமாறு :—

*காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்*
*சீரணி சிந்தா மணிஅணி தில்லைச் சிவனடிக்குத்*
*தாரணி கொன்றையன் தக்கோர்தம் சங்க நிதிவிதிசேர்*
*ஊருணி உற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே.*

ஆதலின்
அவன் மேகத்தைப் போன்றவன், வேண்டாது கொடுப்பவன் ஆதலின்; கற்றோருக்கு
கற்பக தருவைப்போன்றவன், வேண்டுவதைக் கொடுப்பவன் ஆதலின்; இசை நாடக
உசாத்துணையானவன், கல்விச் செல்வம் படைத்தோன் ஆதலின்; அவரினின்று தன்னைப்
விற்பன்னருக்குச் சுற்றம் போன்றவன், கலையுணர்ச்சியால் சிந்தாமணி போன்றவன், நினைத்த
பிரித்துக் கருதாதவன் ஆதலின்; சீர்பொருந்திய உள்ள சிவபிரான் திரு
வற்றை அளிப்போன் ஆதலின்; அழகிய தில்லையின்கண் தன்னை அர்ப்பணம்
வடிக்குரிய கொன்றைமாலை போன்றவன், திருவருளுக்குத் தொலைவில்லாத சங்கநிதிபோன்
செய்த சிவபக்தன் ஆதலின்; சான்றோர்களுக்குத் விதியைப்போன்றவன், நட்பின
றவன், அவர்களை என்றும் ஆதரிப்போன் ஆதலின்; ஊரிலுள்ள நீரூற்றைப்போன்
ருக்கும் பகைவருக்கும் பயனளிப்போன் ஆதலின்; இவ்வாறு
றவன், தன்னை அடைந்தவர்களுக்குத் தண்ணளி செய்பவன் ஆதலின்;
அவன் யாவர்க்கும் நன்மையைத் தருபவன் ஆவான்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவைப் பூசையும் திருவாதிரையும்

சேர். கந்தையா வைத்தியநாதன்

மார்கழி மாதத் திருவெம்பாவைத் திருநாட்கள் திருவாதிரைத் திருநாள் ஈறாகப் பத்து நாட்களிலும் கொண்டாடப்படும் விழா. இவ்விழா யாழ்ப்பாணத்தில் பரவி இருக்கும் அளவுக்கு தென்னாட்டில் எங்கணும் காணோம். இவ்விழாவைத் திருவெம்பாவைப் பூசையென்று பொதுமக்கள் கூறுவதுமுண்டு. இவ்விழாவைக் கொண்டாடாத ஆலயம் யாழ்ப்பாணத்தில் இல்லையென்றே சொல்லலாம். இதற்குக் காரணம் ஈழத்துச் சைவமக்கள் மணிவாசகருக்கும் திருவாசகத்திற்கும் கொடுக்கும் மதிப்பின் பெருமையே.

திருவெம்பாவைப் பூசையின் தொடர்பு சைவ சமயிகளுக்கும் வைணவர்களுக்கும் பொதுவாகிய மார்கழி மாதம் முழுவதிலும் அனுட்டிக்கப்படும் "மார்கழி நோன்பென்பர்". இதற்கு முந்திய சங்க காலத்தில் வழங்கப்பட்டுள்ள "தைந்நீர்" ஆடுதல் என்ற விரதமும் மார்கழி நோன்பையே குறிக்கும். இது பண்டைக் காலத்தில் பிரசித்தமாகப் பெண்களால் கையாளப்பட்டு வந்தது. தொடர்பு எங்ஙனமிருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் முறை திருவெம்பாவை பத்துத்தினப் பூசையும் மணிவாசகப் பெருமானுக்கமைந்த மாபெருங் குருபூசை நாட்களாகவே இருக்கின்றன. திருவெம்பாவைத் திருப்பதிகம் மட்டுமன்றி, திருவாசகப் பாக்கள் பலவும், திருவாதவூரடிகள் புராண படனமும் இத்தினங்களில் இன்றியமையாதன. "உலகெலாம் உணர்ந்தோதற்கரிய" சிவபெருமானைத் "தென்னாடுடைய சிவன்" என்கின்றது மணிவாசகம். அங்ஙனம் தென் பிரிவிற்குறுகிய யாழ்ப்பாணப் பகுதியில் இது தென்னாட்டிலும் பார்க்கப் பிரதிபலிப்பது நம் பண்டைப் பெருமக்கள் செய்த தவப்பயனே. இம்மாபெரும் பயனை வழுவவிடாது காப்பாற்ற வேண்டியது எம் கடமையாகின்றது.

"பார்விரித்த நூல்எல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதி போதும்."

என்று சிவயோக சாரம் சொல்வதற்கு இணையாக திருவாசகத்தில் அனுபூதிமான்கள் இரண்டுவரி மகா வாக்கியங்கள் பலவற்றைக் கொள்வர். அவையில் ஒன்று எம்மவர்க்கு மூலமந்திரமாகும். காலஞ்சென்ற பெரியார் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் ஒருதடவை "முத்திநெறி அறியாத" என்ற பாட்டில் முதலிரண்டு வரிகளுடன் கண்ணீர் சொரிய நிறுத்திவிட்டார். வேறொரு பெரியார் திருவாசகத்திற்கு முகவுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல பொறிக்கப்பட்டுள்ள சிவபுராணத்தின் முதலிரண்டு வரியின் மேல் அறிவதற்கு ஒன்றில்லையென்றார்.

> "நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க,
> இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க."

அல்லது,

> "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
> தாயிற் சிறந்த தயாவான தத்துவனே."

வேறென்ன வேண்டும்!....

> "கல்லாலி னிழறனி லொருநால் வர்க்குங்
> கடவுணி யுணர்த்துவதுங் கைகாட் டென்றாற்
> சொல்லாலே சொலப்படுமோ."— —தாயுமானவர்.

விஞ்ஞானம்' 'விஞ்ஞானம்; என்று புலம்பி அதை ஒரு புது ஞானமென் பார்க்கு என்சொல்வேன்?

> "இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
> தெழுகின்ற ஞாயிறே போன்று
> நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
> நீயலாற் பிறிதுமற் றின்மை
> சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
> திருப்பெருந் துறையுறை சிவனே.

பூதபேதத்தால் தோன்றும் பிரபஞ்சம் முழுதும் "சென்றுசென்று அணுவாய்" அவ்வணுக்களெல்லாம் தேய்ந்து தேய்ந்து இறுதியில் ஓர் அணுவாய் அதுவும் சத்தியில் மறையும் என்ற உணர்வு எந்த ரசாயன ஆராய்ச்சிச்சாலையில் அணுபிழப்புப் பயிற்சியிற் கண்டார் எங்கள் மணிவாசகர்? அவருக்கு எந்தக் கலாசாலை D. Sc., பட்டம் கொடுத்தது?

"நீருறு தீயே" என்கிறார்! தண்ணீரில் நெருப்பு ஒடுங்கியிருக்கிறதென்ற அறிவு "ஹைட்ரஜன்" வெடிக்குண்டுதான் முதல் தடவையாக 1957-ம் ஆண்டில் சொன்னதா?

சொல்லுதற்கரிய "சோதியாய்த் தோன்றும் உருவமும் அருவாம் ஒருவனே" எம்மையும் ஆட்கொண்டு, "பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி, மெய்ஞ்ஞானமாக" மிளிராயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

திருவாசகம் தமிழ் நூல்களுள் மிகச்சிறந்தது. அது சிவபிரானது திருக்கர அருளைப் பெற்றது; திருச்சிற்றம்பலமென்னும் அவருடைய திருமுத்திரையை உடையது. அதற்கு இணையாகத்தக்கவை வேதம், சிவாகமமாகிய இரண்டுமேயாம். சிலர் அதைத் தமது "இச்சித்த தெய்வ"மாகக் கொண்டு அதற்கு நித்தியபூசைசெய்து வருகின்றனர். அதன் பொருள் நடராசப்பெருமான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சுட்டிக் காட்டியதாற் போலும், அதன் பூசைமுறை அப்பெருமானது பூசையைத் தழுவியுள்ளது.

திருவாசகத்தின் இனிமை பெரியோர், சிறியோர், கற்றோர், கல்லாதோர், சைவர், அசைவராகிய யாவரும் அனுபவிக்கத்தக்கது. அதன் ஓசையிலே சிவபிரானது திருவருள் இசைந்திருத்தலினாலே, அதைக் கேட்ட அளவிலே சிறந்த ஓரின்பம் உண்டாகின்றது. கிறித்த பள்ளிக்கூடத்திலே படித்த பாலர் வகுப்புக் குழந்தையொன்று தன்பாட்டிலிருந்துகொண்டு

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்
[தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே யென்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேல்கொண்
[டென்
உள்ளங் கவர்வரா லன்னே யென்னும்

என்னுந் திருவாசகத்தைப் பாடக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. குழந்தை அதைத் திருப்பித் திருப்பிச் சொல்லி ஆனந்தமடைந்தது. அதைக்கேட்டு நானும் ஆனந்தமடைந்தேன். கிறித்தவர்களுக்கு விலக்கான நூலாயினும் அப்பள்ளிக்கூட ஆசிரியர் அன்னைப்பத்திலுள்ள மூன்று நான்கு பாடல்களைச் சிறுவர்களுக்குப் படிப்பித்துவிட்டார். திருச்சாழலும் சிறுவர்கள் விரும்பும் ஓர் பதிகம். வளர்ந்தவர்களுக்கு யாவும் இனியனவேயாம். ஒருநாள் ஒருவர் சிவபுராணத்தை ஆறுதலாய் அமைதியாய்ப் பாடியதை நான் கேட்கநேர்ந்தது. அதனாலுண்டான இன்பம் பதிதாய்ச், சூக்குமமானதாய்ச், சலனமற்றதாய் மனத்தை நிறைத்து நின்றது.

திருவருட் பாக்களிலுள்ள சிவமணத்தினாலே கவரப்பட்டுச் சைவர்களான புறச்சமயத்தவர் பலர் உளர். மன்னாரிலுள்ள சைவர்கள் சிலர் அநேக ஆண்டுகட்கு முன்னே ஒருமுறை இராமேச்சுரத்துக்குப் போனபோது, அவர்களுடைய நண்பராய் இருந்த கிறித்தவரொருவர் பொழுதுபோக்குக்காக அவர்களோடு கூடிச் சென்று திருக்கோயிலை அடைந்து உட்கோபுரவாயிலுக்கு வெளியே நின்றார். கோபுர வாயிலின் உட்பக்கத்திலே யாரோ ஒருவர் திருப்பாடல் ஒன்றை அன்பு சுரக்கப் பாடினார்.

---

இக்கட்டுரை, காரைநகர் மணிவாசக சபையினர் வெளியிடக்கருதிய தமிழ்மணிக்கெனச் சிவபதமடைந்த சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவரதைக்கேட்டு அதன் இனிமையையும் பத்திமையையும் பொறுக்கலாற்றுதவராய் அப்பாடலுக்கடிமையாகி இராமேச்சுரனை வழிபடுவாராயினர். அதன்மேல் அவர் தம்முடைய பரம்பரைக் கிறித்த சமயத்தை விட்டுச் சைவராகி வேறு சிவத்தலங்களையும் தரிசிப்பவரானர். திருவருட் பாக்களிலுள்ள இனிமைக்கு உயிராயுள்ளது சிவநேசமேயாம். சிவநேசமுள்ளவர்கள் திருவாசகத்தை ஓதுமினிமை "தேனையும் பாலையுங் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து ஊனையும் என்பினையும் உருக்கா"நிற்கும். திருவாசகத்தைத் தொட்டால். அதன் இனிமையானது, பலாக்காய்ப் பால்போலத் தொட்ட இடத்திலே பிடித்துக் கொள்ளும். ஒரு திருப்பாடலைப் பார்த்தற்காகத் திருவாசகச் சுவடியைத் திறந்தால், அப்பாடலை மாத்திரம் பார்த்துவிட்டுப் புத்தகத்தை மூடுதல் இயலாது. அதைப் பார்த்துமுடிய, அதற்கடுத்த பாடல் கண்ணைக்கவரும்; பின்பு அதற்கடுத்த பாடல். இப்படியே பத்துப் பாடல்களையாயினும் பார்த்து முடிந்தபின்பே புத்தகத்தை மூடுதற்கு மனம் ஒருப்படும்.

இனி, திருவாசகத்தின் பொருளோவென்னில்: அதன் மெய்ப்பொருள் எமக்கு எட்டாததாயினும், அதன் சொற்பொருள் பெருங்கடலாயுள்ளது. வேதாகமங்களிலும் ஏனைய நூல்களிலுமுள்ள வாய்மைகள் யாவும் திருவைந்தெழுத்திலமைந்தன என்று உமாபதிசிவம் பாடியருளினர். ஆதலால், இவைகள் யாவும் திருவாசகத்திலுள்ள ஐம்பத்தொரு பதிகங்களிலும் அமைந்திருத்தல் நூதனமன்று. வாய்மைகளேயன்றிச் சைவசாதனங்களும் அதில் நிறைந்துள்ள திருவாசகத்தைப் படிக்க இவைகள் தெள்ளிதிற் புலப்படும். திருவாசகத்திலே ஒரே வாய்மையுடைய இருபாடல்கள் காண்பதரிது. ஐம்பத்தோரெழுத்துக்களும் எழுத்துப் பிரபஞ்சத்தை நிறைப்பதுபோல, திருவாசகத்தில் உள்ள ஐம்பத்தொரு பதிகங்களும் மெய்யறிவுப் பிரபஞ்சத்தை நிறைக்கின்றன. இதிலுள்ள முதலாறு பதிகங்களும் (சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம்) சைவர்கள் யாவராலும் படிக்கப்படவேண்டியவை. சைவனுக்கழகு திருவாசகம் படித்தல். திருவாசகம படித்தவன் இந்தப்பிறவி எடுத்ததைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தப்பிறவி எடுத்ததின் பயனை அவன் பெற்றுவிட்டான். "அரியதாகிய மானுடப் பிறவி எனக்குக் கிடைத்ததே; எழுபது வருஷம் இந்த உடம்போடு வாழ்ந்தேனே. இந்தப் பிறவியிலே, இந்த வயதிலே உயிர்க்கு உறுதியாகிய நான் தேடிய தேட்டம் யாது" என்றொருவன் தன்னை வினவும்போது, அவன் திருவாசகம் படித்தவனாயின், "ஆகா! நான் திருவாசகம் படித்தேனல்லவா! அது இதைப் போன்ற பத்துப் பிறவிகளுக்குப் போதுமே" என்று நினைந்து அவன் பூரணதிருப்தி அடையலாம்.

இதிலுள்ள பொருட்செறிவைக் காட்டுதற்காக ஒரு திருவாசகத்தை எடுக்கின்றேன்:-

அற்புதப்பத்து—அநுபவமாற்ருமை

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து நானெனதெனுமா

யக், கடித்தவாயிலே நின்றுமுன் வினை மிகக் கழறியே திரிவேனைப், பிடித்து முன் னின்றப் பெருமறை தேடிய அரும்பொரு ளடியேனை, அடித் தடித் துவக் காரமுன் றீற்றிய அற்புத மறி யேனே.

இதன் சொற்பொருள்: (இராவ ணனாக நடிப்பவன் தன் செயலும் பேச்சுமின்றி இராவணனது செய லும் பேச்சுமுடையவனாதல் போல) நான் என்செயலும் பேசுமின்றிச் வேறொன்றாக நடித்து, இந்தப் பூமி யிலே பலவகைப்பட்ட பொய்களைச் செய்து, ஆணவமாகிய பாம்பின் கடி வாயிலே அதனாற் செலுத்தப்பட்ட அணுத்தன்மையாகிய விடத்தினால் உண்டான நான் எனது என்பவற்றால் விளையும் வினையானது மிக, அதனால் வருந்துன்பம் அதிகரிக்க; அதைத் தாங்கமாட்டாமல் அலறி வருந்திக் கிடந்த என் வருத்தத்தைத் தீர்த்து, விடமிருந்தபோது நான் வெறுத்து விலக்கிய சர்க்கரையாகிய சிவாநந் தத்தை, அது தீர்ந்தபின்னும் பயிற்சி வசத்தால், உண்ண மறுத்தபோது, அந்தப்பெரிய வேதங்கள் தேடியறி தற்கரிய தாகிய பரம்பொருள் என் முன் நின்று என்னைப்பிடித்து அடித் தடித்து அச்சர்க்கரையைத் தீற்றிய அற்புதத்தை அறியேன் என்பது.

நடித்து—ஒருவன் இராவணனாக நடிக்கும்போது தான் பேசாதவற் றைப் பேசிச் செய்யத் தகாதனவற் றைச் செய்கின்றான். அதுபோல, ஆன்மாவானது தன்னை உடம்பாகப் பாவித்து உடம்புக்குரிய செயல்க ளையே செய்கின்றது. உடம்புக்கு ஊறுவந்தால் அது தனக்கு வந்ததா கக் கொள்கின்றது; உடம்பு கொழுத் துப் பலம் உடையதானால் தானே கொழுத்துப் பலமுடையதாகக் கருது கின்றது. உடம்போடு தொடர்புடைய வர்களாகிய மக்கள் முதலியோரைத் தமராக எண்ணுகின்றது; தன்உடலை யேனும் விவேகத்தையேனும் புகழ் வோரையும் இகழ்வோரையும் தன் னைப் புகழ்வோராயும், இகழ்வோரா யும் நினைக்கின்றது. உடம்போடு தொடர்புடைய பொருள் பண்டம், அதிகாரம், செல்வாக்கு முதலியவற் றைத் தன்னுடையனவாகக் கணிக் கின்றது.

பொய்யினைப் பலசெய்து—கடவு ளுடைய தன்மையை உணராமல், எங் களுக்கு வேண்டியவற்றை அவரறிய மாட்டாதவரென்னும் பொய்க் கொள் கையைக் கொண்டு, உடம்புக்குத் தேவையான வற்றை அவர்பால் யாசிக்கின்றோம். அவர் ஒரு கூலிக் காரர் என்னும் பொய்க் கொள்கை யைக்கொண்டு, "நீ இன்னதுசெய்தால் நான் இன்னது தருவேன்" என்று அவருக்குக் கூறுகின்றோம். பிறர் பாலாரது உடம்புகள் மாயைப் பொருள்களாகிய ஐம்பூதங்களாலாய என்பு, இரத்தம், தசை, தோல் முத லியவற்றின் தொகுதியென்னும் உண் மையைக் கொள்ளாது, அவைகள் பிரத்தியேகமான பொருளென்னும் பொய்யினைக் கொண்டு அவற்றை அடைதற்கு முயன்று, அவை கிட்டா வாயின், ஆற்றவும் வருந்திப் பித்தரு மாகின்றோம். பொறிகள் மாயைப் பொருள்களென்னும் வாய்மையை உணராமல் அவற்றால்வரும் புலன்க ளாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற் றங்களென்னும் பொய்களைப் பெறு தற்கு இடையீடின்றி முயற்சி செய் கின்றோம். அப் பொய்களைப் பெறும் போது இன்புறுதலும், அவற்றைப் பெறமுயலும்போது இடர் செய்வோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரில் வெருளுதலும், அவை கிடையா வாயின் துன்புறுதலும் பொய்த் தொழில்களேயாம்.

நான் எனதெனு மாயக்கடித்த வாயிலே முன்வினைமிக:— ஆணவமாகிய பாம்பு கடித்தவிடத்திலே அது உகுத்த விஷமானது "நான்", "எனது" என்னும் மயக்கத்தை உண்டாக்குவது. ஆன்மா வியாபக அறிவுஉடையதாயினும் ஆணவம் அவ்வறிவை அணுவாக்குதலினலே, ஆன்மா தன்னை உடம்போடு ஐக்கியப்படுத்தி உடம்பை "நான்" என்றும், உடம்போடு தொடர்புடையவற்றை "எனது" என்றும் அபிமானித்து, அவற்றை நிலைநிறுத்தவும் பெருப்பிக்கவும் இடையருது தொழில் செய்கின்றது. இத்தொழில்கள் நல்வினை தீவினை என இருவகைப்படும். நல்வினையின் பயன் இன்பம்; தீவினையின் பயன் துன்பம்; "நான் என்ற முனைப்பின்றிச் செய்யப்படும் தொழில் நல்வினையுமன்று தீவினையுமன்று; அது மலமாகமாட்டாது; "நான்", "எனது" என்ற முனைப்போடு செய்யப்படுவதே மலமாகி அநுபவித்துத் தொலைக்கவேண்டியதாகின்றது. ஆணவம் பாம்பாகவும், அதன் தொழில் பாம்பின் கடியாககவும், அதிலிருந்துவரும் "நான்", "எனது" என்பன கடிக்கும்போது சொரியும் நஞ்சாகவும், முன்வினையானது அந்நஞ்சு கலக்கும் இரத்தமாகவும் கொள்ளப்பட்டனபோலும்.

வினை தோன்றுதல் பின் வருமாறு:— தனிவழியிலே பொற்காப்பணிந்து நின்ற குழந்தையொன்றைக் கள்வனொருவன் காண்பானயின், அப்பொற்காப்பு அவனுடைய மனத்தைக் கவரா, அதை அபகரிக்குமாறு ஏவுவது அவனுடைய ஆணவத் தடையேயாம். அங்ஙனம் அபகரித்தல் தீவினையாம். அங்ஙனம் அபகரித்தற்குத் துணையாயேனும், மாருயேனும் நிற்பது பிராரத்தமாகிய முன்வினை. முன்வினை நல்வினையாயின், அவன் அபகரிப்பதைப் பிறர் அறியமாட்டார். அவன் அதை அபகரித்து, விற்று, தான் விரும்பிய பொருட்களைப் பெற்று, முன்வினைக்கேற்ற இன்பத்தை அநுபவிப்பான். பின்பு அச்செயல் பிராரத்தமாகித் துன்பத்திற்குக் காரணமாகும். முன்வினை தீவினையாயின், அவர் அபகரித்ததைப் பிறர் அறிந்து அவனிடமிருந்து காப்பை வாங்கி அவனை நன்ருகப் புடைப்பாராயின், அந்தப்புடைப்பு முன்வினையின் பயனகும். அவனைப் புடைத்தபின்பு அரசனுக்கு முறையிடுவாராயின், அரசனல் வரும் தண்டனை திருடமுயன்ற தீவினையின் பயனகும். முன்வினைப்பயன் அநுபவியாவிடத்துப் புதுவினைசெய்தல் கூடுமாயினும், முன்வினைப்பயன் அநுபவிக்க வேண்டியவிடத்துப் புதுவினை செய்தல் இன்றியமையாததாம்.

கழறியேதிரிவேனை:—கழறுதலாவது வருந்துதல். தீவினைப்பயன் துன்பமாதலால், தீவினையால் வருந்துதலியல்பேயாம். நல்வினையின் பயனகிய இன்பத்தால் வருந்துதல் எவ்வாரும் எனில்; இன்பமாவது நாம் விரும்பியவற்றைப் பெறுதலால் உண்டாகும் உள்ளக்கிளர்ச்சியேயாம்; கள்ளை விரும்புபவன் கள்ளைப் பெறுதலினல் அவனுள்ளத்தில் இன்பமுண்டாகுமாயினும் அவன் அதைப் பருகுதலினல் வரும் அறிவுகேடும், தீச்செயல்களும் துன்பத்தையே ஆக்குவன. கள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாது தூயவுணவை விரும்புவோன் அதைப்பெறுதலால் உண்டாவது இன்பமேயன்றித் துன்பமாகாதெனின்; பசிதீர்ந்தபின்பு பசியுண்டாம்போது துன்பம் வருகலால், அவ்வின்பம் துன்பத்தோடு தொடர்புடையதேயாம். "பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும், இசைத்து வருவினையின் இன்பம்" என்றார் மெய்கண்டதேவநாயனார். "நான்" "எனது" என்பன இன்றி வினைசெய்யின், கழறித் திரிதல் நோராது.

அப்பெருமறை தேடிய அரும்பொருள் முன்னின்று:— பரமபதியினின்றும் தோன்றிய ஞானமொழியாகிய வேதமும், அறியமாட்டாத அரும்பொருளாகிய அப்பரமபதிகடையவனாகிய நான் அறியத்தக்கதாய் குருவடிவத்தோடு எனக்கு முன்னே நின்ற அற்புதம் அதியற்புதமேயாம்.

பிடித்து:— எனக்கு முன்னே நின்றதோடமையாது என்னைத் தனது திருக்கரத்தாற் பிடித்தது அற்புதத்துளற்புதமாம். முன்னின்று பார்த்தலாகிய நயனதீட்சையினாலே ஆணவமலங் கெடும். பிடித்தலாகிய பரிச தீட்சையினாலே மாயாமலம் கெடும்.

அடித்தடித்து அக்காரந்தீற்றிய அற்புதம்:— சர்க்கரையைக் கண்டவுடனே வாயூறுதல் இயல்பு; அதைத் தின்னுதற்கு விருப்பம் உண்டாகும். அதைத் தீற்றவேண்டியது எதனால்? அடித்தடித்துத் தீற்றவேண்டியதெதனால்? விடம்பொருந்திய உடம்பில் உள்ள நாவுக்கு இனிப்பானவை யாவும் கைக்குமென்பர். அதை ஊட்ட வேண்டுமாயின் அடித்தடித்துத் தீற்ற வேண்டியது அவசியமேயாம். அதுபோல, "நான்" "எனது" என்னும் விடமேறியவர்களுக்குச் சிவாநந்தம் கசக்கும். சிவபிரானது திருநோக்கும் பரிசமும் சேர்ந்தவுடனே விடந்தீர்ந்து மெய்ப்பொருள் இனிக்குமாதலால், அடித்தலுந் தீற்றலும் வேண்டப்படாவெனில்; பழைய வாசனையினாலே அதிற்கொண்ட வெறுப்புச் சிலகாலம் நிலைக்குமாதலால், அடித்தடித்துத் தீற்றல் அவசியமாகின்றது. இந்த நிலைத்தலை விளக்குதற்கு நூல்கள் உவமானமாகச் சொல்லுவன பெருங்காயம் முழுவதும் எடுத்தபின்னும் அது நெடுநாளாயிருந்த பாண்டத்தில் அதன் மணம் நிலைத்திருத்தலும், குயவன் கைவிட்டபின்பும் அவன் சுழற்றிய சக்கரம் சுற்றுதலுமாம்; தீற்றும்போது சர்க்கரை நாவிலே படுதலும் அது இனிக்கும். அதன்மேல், "ஈசன் எந்தை இணையடி நீழலே" என்றும் நிறைந்த இன்பத்தோடிருக்கும் உறைவிடமாகும்.

---

நோய்உற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து
நாய்உற்ற செல்வம்நயந்தறியா வண்ணம் எல்லாம்
தாய்உற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேய்உற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதியுமந்தமு மில்லா அரும்பெருஞ் சோதி

சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார்

இது திருவாசகத்தில் தலைசிறந்த பகுதியாகிய "திருவெம்பாவையின்" தலை சிறந்த முதற் சொற்றொடர். திருவாசகம் சைவ சமயாசாரியர்கள் ஆகிய நால்வர் பெருமக்களுள் தலை சிறந்து விளங்கும் திருவாதவூரடிகள் திருவாக்காகிய ஞானசாத்திரம். திருவாதவூரடிகளார் நால்வர் பெருமக்களுள்ளே காலத்தால் முற்பட்டவர். மூவர் முதலிகளுக்கும் பிற்காலத்தவர் என்று கொள்வோர்களுமுண்டு. திரு. மறைமலையடிகளும் அறிஞர் திரு.கா. சுப்பிரமணியபிள்ளையவர்களும் காலத்தால் முற்பட்டவர் என்று துணிந்து எழுதியுள்ளார்கள். அடியேனும் எனது "மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை" என்னும் நூலில் இவ்வாறே துணிந்து பல காரணங்கள் காட்டி எழுதியுள்ளேன். எனது ஆசிரியர் பண்டிதர். திரு. ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களும் தமது மாணிக்கவாசகர் என்னும் சொற்பொழிவு நூலில் இந்த முடிபையே கொண்டிருக்கிறார்கள். "நரியைக் குதிரை செய்வானும்" என்ற தேவாரம் "நரியைக் குதிரைப் பரியாக்கி" என்னும் திருவாசகப் பகுதியை எடுத்தாண்டதாகக் காண்கிறது. "அணியார் வைகைத் திருக்கோட்டினின்றதோர் திறமும் தோன்றும்" என்னும் தேவாரத் திருவாக்கு அடிகளார்பொருட்டு இறைவனார் வைகைக்கரையில் செய்த மண் சுமந்த திருவிளையாடற் பகுதியைக் குறிப்பதாகும். "குடமுழநந்தீசனை வாசனைக் கொண்டார்" என்ற திருவாக்கு அடிகளார் புராணசரிதப்படி முன்னை வரலாற்றைக் குறிப்பது என்பது அறிஞர்கள் கருத்து. மகாமகோபாத்தியாய ஸ்ரீ ஐயர் அவர்கள் கருத்துமிதுவே. இவற்றால் அடிகளார் திருநாவுக்கரசு நாயனாருக்கு முற்பட்டவர் என்ற துணிவு வலியுறுத்தப் பெறுகின்றது. இனி அடிகளார் சரியை முதலிய நாற்பாதங்களுள் ஞானபாதத்தை விளக்கவந்தவர் என்பது மரபு. "ஞான முதனான்கு மலர்நற்றிரு மந்திரமாலை." (பெரியபுராணம்) "ஞானயோக்கிரியாசையெலாம்" ஞ- ஞானத்தினியல்பு சிவஞானசித்தியார் முதலாகிய சிவாகமங்களுள் விரிக்கப்பட்டுள்ளது. அவ்வியல்பெல்லாம் அடிகளார் ஞான வாழ்க்கையிலும் திருவாக்குகளிலும் பொருந்தி வெளிப்படக் காணலாம். பித்தரைப்போலத் திரிவதும், உலகை மறந்து நிற்பதும், பாலருடனுன்மத்தர் பசாசர் குணமருவுவதும், ஞானிகளினியல்பாமென்பர். வாதவூரடிகளாரை உலகர் பித்தர் என்றுரைத்தனர் என்பது "பித்தனென்றெனை உலகவர் பகர்வதோர் காரணமிது கேளீர்" என்ற திருவாசகத்தாலறியக்கிடக்கின்றது. உலகத்தோடொட்ட ஒழுகாமல் பதார்த்தங்கள் பாராமல் பரமே பார்த்திருந்த பரம ஞானிகள் திருவாதவூரர். ஆதலின் அவர் திருவாக்குத் திருவாசகம் எனப்படுவதாம். பரமசிவனையே (இலக்கியமாக) இலக்காக்கொண்டுள்ளதாகலின் அது திருவாசகமாயிற்றென்பர் சிவப்பிரகாசர். "வாசமே வாசகம் அதற்கு வாச்சியம் தூசகலல்குல் வேய்ந்தோளிடத்தவனே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசக முழுமையும் சிவனருள் வாக்கு அதன் கண்ணுள்ள 51 பகுதி களும் 51 அக்கரங்கள் என்பது மரபு. இதற்குத் "**திருவாசகம்**" என்று பெய ரிட்டார் யாவர் எனின் இறைவர் எழு தியபோது சூட்டியதாகலாம் என்று கருதவும் இடமுண்டு. தமது பாசுரங் களுக்கு அடிகளாரே அப்பெயரிட் டார் என்பது பொருந்தாது. அல் லது பிற்காலத்து பெரியார்களால் இடப்பட்ட பெயராகவுமிருக்கலாம். அடிகளாருக்கு இறைவர் "மாணிக்க வாசகர்" என்றும் பெயர் சூட்டினர் என்ற சரிதவரலாறும் காண்க. திரு வாதவூரர் புராணம்தான் அவர் சரித வரலாற்றுக்குப்பெரிதும் ஆதரவாயுள் ளது. திருவாசகத் திருவாக்கினுல் தெரியும் பகுதிகளால் ஆதரிக்கப்படு வது. இதில் அடிகளார் இன்னின்ன திருவாசகங்களை இன்னின்ன தலங் களில் இன்னின்ன சந்தர்ப்பங்களில் அருளினர் என்று விவரமாய் வர லாறு கூறப்பட்டிருக்கின்றது. இப் போதுள்ள திருவாசகப் பிரதிகளில் அவ்வரிசையில் அமைக்கப்பெற வில்லை; இப்பிரதிகளின் அமைப்பு அதற்கு மாருயிருக்கிறது. அன்றி யும் பகுதிகளின் அளவுக்கேற்றபடி வரிசைப்படுத்தி அமைக்கப்பெற்றதா கத் தோன்றுகிறது. உதாரணமாக முதலில் கலிவெண்பாவாகிய சிவபுரா ணப்பகுதி வைக்கப்பட்டுள்ளது. "சிவ புராணம்" என்னும் பெயர் அடிக ளாராலே அப்பகுதிக்குச் சூட்டப்பட் டது என்பது "சிந்தை மகிழச் சிவப் புராணந்தன்னை முந்தைவினை முழுது மோய உரைப்பனியான்" என்ற திருவாக்கினுற் போதரும். அதனை அடுத்து 3 அகவல்களும் அவற்றை யடுத்து 100 பாசுரங்களையுடைய திருச் சதகமும் அதனையடுத்து 50 பாசுரங் களையுடைய நீத்தல் விண்ணப்பமும் அதனையடுத்து 20 பாசுரங்கள் கொண்ட திருவெம்பாவை திருவம்மா னையும் அதன்பின் 19, 14, 13 என்ற குறைந்த பாடல்களையுடைய பகுதி களுமாக இவ்வாறு 100, 50, 20, 19, 14, 13, 10 என்ற வரிசைப்படி ஒழுங்கு படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அடி களார் அருளிய முறைப்படி அமை யவில்லை என்பது வெளிப்படை. பதி கங்களின் கருத்துக் குறிக்கும், உள் தலைப்புக்களும் அடிகளாரால் தரப் பட்டவையல்ல என்பதும் ஐயப்பாடு. பத்தி வைராக்கிய விசித்திரம், பிர பஞ்ச வைராக்கியம், சகத்தின் உற் பத்தி, சிவனேடு ஐக்கியம், பிரபஞ்ச சுத்தி, ஆத்ம பூரணம், சிவ விளைவு, சிவ உபாதி ஒழிதல் என்பன சைவ சித்தாந்த மரபுக்கு மாறுபட்டவை என்று தோன்றுகிறது. இவை வேறு யாரோ பெரியாரால் தரப்பட்டவை என்று கருத இடமிருக்கிறது. சில பிரதிகளில் அதிகப்படியான சில பாடல்கள் காணப்படுகின்றன. இது காறும் கூறியவற்றுல் திருவாசகப் பிரதிகளில் பிறருடைய கைவேலைப் பாடு தெரிகிறது என்பது புலப்படும். ஆனுல் அடிகளார் சொல்ல இறை வர் தாமே ஒரு பிரதி எழுதிக்கொண் டார் என்ற வரலாறு கேட்கப்படுகின் றமையால் தேவாரங்களில்போல் இதனுள் பாடபேதங்கள் காணப்பட வில்லை.

இனித் திருவாசகம் உரியகாலங்க ளில் எல்லாச் சிவாலயங்களிலும் திரு மடங்களிலும் அடிப்பட்டுவரும் சைவர் வீடுகளிலும் தொன்றுதொட்டு இன்றி யமையாது ஓதப்பட்டு வருகின்றது. திருக்கல்யாணச் சடங்குகளிலும், மார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழியில் திருவெம்பாவைத் திருநாட்களிலும் திருப்பொற்சுண்ணமும் திருவெம்பாவையும் ஐதிகமாக ஓதிவரப் பெறுகின்றன. திருவெம்பாவைத் திருநாட்களில் வேறு திருமுறைகளாவது திருப்பாடல்களாவது ஓதுதல் கூடாதென்னும் மரபுவழக்கமுமுண்டு. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாசகத்தில் திருவெம்பாவைப் பகுதியாகிய 20 பாடல்கள் கொண்ட பதிகத்தின் தலைப்பில் விளங்குவது மேலே கண்ட "ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி" என்னும் அரிய அழகிய சொற்றொடர்.

**திருவெம்பாவை வரலாறு :**

திருவாதவூரடிகளார் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும்போது மார்கழிமாதத்தில் பெண்கள் விடியற் காலையில் எழுந்து ஒருவரை ஒருவர் போய் எழுப்பி ஒன்றுகூடி அனைவரும் சென்று பொய்கையில் நீராடி இறைவரைத் துதித்து வருதலைக் கண்டார். அதனைப் பொருளாகக் கொண்டு இப்பகுதியை அப்பெண்கள் கூற்றாக அருளிச் செய்தார். பெண்கள் விளையாட்டுக்களைப் பார்த்தபோதெல்லாம் அடிகளாருக்கு அவ்வவற்றையே பொருளாக வைத்து இவ்வாறு சொல்லி விளையாடுங்கள் என்று பணிப்பார் போன்று பல பதிகங்களை அருளிச் செய்வது அவர் வழக்கம். திருப்பொன்னூசல், திருத்தோணோக்கம், திருவம்மானை முதலிய பகுதிகள் எல்லாம் இவ்வாறெழுந்தனவேயாம். அந்நாளில் இறைவன் புகழ்களைப் பாடிக் கொண்டே பெண்கள் விளையாடுவது வழக்கம். "தருந்தடக்கை முத்தழலோர் மனைகடோறும் இறைவனது தன்மை பாடி, – கருந்தடங்கண்ணார் கழல்பந்தம்மானைப் பாட்டயருங் கழுமலமே" என்ற ஆளுடைப்பிள்ளையார் திருவாக்கு இவ்வழக்கைப்பற்றி எழுந்தது. அடிகளாரது திருப்பாட்டுக்களைப் பாடிக் கொண்டே பெண்கள் விளையாடும் வழக்கமும் எழுந்திருக்கக்கூடும். இந்நாளில் கும்மி கோலாட்டம் முதலிய விளையாட்டுக்களைப் பெண்கள் பாடல்களைப் பாடிக் கொண்டே செய்வது காணலாம். ஆனல் அவை பெரும்பாலும் பொருளற்ற வெறும் பாடல்களாகவே உள்ளன. அடிகளாரது பாடல்களையும் ஏற்ற தேவாரம் முதலிய அருட்பாடல்களையும் சொல்லி விளையாடினுல் இகத்துக்கும் பரத்துக்கும் நன்மைதரும்.

அடிகளார் மார்கழி மாதத்தில் விடியற் காலையில் பெண்கள் ஒருவரை ஒருவர் தட்டி எழுப்பிக் கொண்டு ஒன்று சேர்ந்துபோய் நீராடி இறைவனைப் பாடிவருவதைக் கண்டார். விடியற்காலை நேரமானது சிருட்டி காரியத் தொடக்கத்தையும் இராக்காலமானது சங்காரத்தின்பின் உயிர்கள் இளைப்பாறி புனருற்பவத்துக்குச் சித்தமாதலையும் குறிக்கும் என்பர். விடியற் காலத்தில் பெண்கள் ஒருவரையொருவர் எழுப்பி ஒன்றுகூடி நீராடச் சென்று நீராடி இறைவரைத் துதித்தல் சங்காரத்தில் ஒடுங்கிய நவசக்திகள் உலகம் புனருற்பவத்தின் பொருட்டு கிளம்பி ஒன்றையொன்று பிரேரேபித்து ஒன்றுகூடித் தொழிற்பட்டு இறைவரது ஐந்தொழிலிற்பட்டு உலகம் நிகழக் காரணமுண்டாக்கு தலைக் குறிப்பில் உணர்த்துவதாகிய உள்ளுறையை வைத்து இப்பகுதியை அருளினுர் என்று ஆன்றோர் கூறுவர். "மார்கழி நீராடேலோரம்பாவாய்" "தங்கள் மலங்கழுவுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்தலினல்" "போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்" என்பவை முதலியன இக்குறிப்புத் தருவன என்பர். சிருட்டியிற்புகும் சக்திகள் இந்த சிருட்டியுட்படும் உயிர்கள் இறைவனது பஞ்சகிருத்தியங்களுட்பட்டு இறைவனை வணங்கி இன்பம் பெறுவனவாக என்று இறைவனது ஐந்தொழிலையும் போற்றி முடிக்கின்ற திறமும் காண்க. "போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம். போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள் போற்றி எல்லாவுயிர்க்கும் ஈருமிணையடிகள், போற்றிமாலுன்முகனும் காணுமலரடிகள், போற்றியாமுய்ய வாட்கொண்டருளும் பொன்மலர்கள்" என்று வருவன ஐந்தொழிலருட்கூத்தைக் குறித்து சிருட்டியின் குறிக்கோளைக் காட்டுவன காண்க.

இந்த முதற்பாசுரத்தின் தூலப் பொருளாவது ஒரு தோழி விடியற் காலைநேரத்தில் மற்றொருதோழியின் கடைவாயிலினின்றுகொண்டு அவளைக்கூவி "நாங்கள் இறைவன் புகழ்களைப் பாடிக்கொண்டு நிற்கிறோம். அவ்வொலி வீதியெல்லாம் கேட்கிறதே, நீ கேட்டுக் கொண்டே படுக்கையிற் படுத்துப் புரண்டு, கதவு திறந்து வராமல் இருக்கின்றாயே! உன் காதுகள் வன்செவியோ! இதுவோ எம்தோழியின் தன்மை" எண்பதாம். இது சங்காரத்தின்போது ஒடுங்கியிருந்து புனருற்பவத்தின் பொருட்டு வெளிப்பட்ட வாமை என்னும் சக்தி சேட்டை என்னும சக்தியைப் பிரேரித்ததென்ற உட்குறிப்பை யுடையதென்பர். இந்த முதற் பாசுரத்தின் தலைப்பில் விளங்குவது "ஆதியுமந்தமு மில்லா அரும்பெருஞ் சோதி" என்ற சொற்றெடர். இதற்குப் பதப் பொருள் முதலும் முடிவுமில்லாத அரியபெரிய ஒளியாயுள்ள இறைவன் என்பதாகும். இது இறைவரது சொரூப லட்சணம் கூறியதாம். இறைவர் ஒளியுருவமானவர் என்று நூல்கள் பேசும். சோதி என்றால் சோதி சொரூபமான பொருளைக் குறிக்கும். ஆதியும் அந்தமும் இல்லா என்பது தொடக்கமும் இறுதியுமில்லாத என்பதாம். இறைவராகிய பராபரன் இன்ன காலத்தில் தோன்றினன், இன்ன காலத்தில் முடிவடைவான் என்பதின்றி, அநாதியாம் நித்தியமாய் அழிவில்லாமல் உள்ள பொருள் என்பதாம். தனக்கு ஆதியும் அந்தமு மில்லாதவனுகையால் மற்ற எல்லாவற்றுக்கும் தொடக்கமும் முடிவுமாய் நிற்பவன் என்பதைக் கடைசிப்பாசுரத்தில் "போற்றியருளுக நின் ஆதியாம் பாதமலர், போற்றியருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்" என்ற அடிகளால் தொடர்புபடுத்துக் கூறியருளினர். நித்தியத்துவம் என்பது பதி இலக்கணங்களுள் ஒன்று.

அரும்பெரும் சோதி என்றதனல் இதுபோன்ற அரிய சோதியும் பெரிய சோதியும் ஒன்றில்லை என்றபடியாம். "அண்டமாரிருளூடு கடந்தும்பர் உண்டுபோலு மொரொண்சுடர்" என்ற அரசுகள் திருவாக்கு இதன் தன்மையை மேலும் விளக்குகின்றது. இங்குக் கூறிய இருள் "மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற பொங்கிய இருள்" இதனலே அந்தச் சோதிச்சுடர் எங்கும் நிறைந்த அருள் ஞானத் தனிச்சுடராம் என்க. "சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே" என்றெல்லாம் பின்னரும் கூறுதல் காண்க. இதனை "அலகில் சோதியன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் பெரியபுராணமுடைய பேராசிரியர். "ஒளியில் ஒளியில் ஒளியன்" என்பது ஞானசாத்திரமாகிய சிவாகமம். இதனை "ஒளியாயொளியதன் ஒளியாயொளியும் தணிதரு மொளியாகி" என்று பொருளினை விரித்துக் கூறினர் கச்சியப்ப முனிவர். "களங்கமற்ற உள்ளமாகிய ஆகாயத்திலே குற்றம் போக்க வல்லதாகிய குற்றமில்லாத சுடருக்கு உதயமும் அத்தமனமும் இல்லாதபடியினுலே" என்று இச்சொற்றொடர்ப் பொருளை "கரவிலுள்ளமாம் விசும்பிடைக் காசறவிளங்கும் பரசிலாச் சுடருக்கு உதயமும் ஈறுமின்மையின்" என்று நன்கு திருவிளையாடற் புராணத்துள் விரித்தருளினர் ஆசிரியர்.


இத் தன்மைத்தாகிய அரும்பெரும் சோதியாகிய பரஞ்சுடர் தன்னை வாழ்த்தி வந்தடைந்தாரையெல்லாம் பாச நீக்கித் தன்வடிவமேயாக்கி அடியார் கூட்டத்துடன் சேர்க்கும் என்பது சிவாகம ஞானநூல்களின் முடிபு. இதனையே அடிகளார் அதிசயப்பத்தில் எடுத்து வகைப்படுத்தி யருளியுள்ளார். "நீக்கிமுன் எனைத்தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து, நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத், தூக்கி முன் செய்த பொய்யறத்துக ளறுத்தெழு தருசுடர்ச்சோதி, ஆக்கியாண்டு தன்னடியருட்கூட்டிய அதிசயங் கண்டாமே" இத் திருப்பாட்டில் இறைவராகிய பரஞ்சுடர் உயிர்களுக்குச் செய்யும் அருள்களைப் படிப்படியாகக் குறிக்கின்ற அருமை பாராட்டத்தக்கதாம். **நோக்கி** என்பது அருட்கண் நோக்கமாகிய சாட்சுஷதீக்கை. **நுண்ணிய நொடியனசெய்தல்** : சீ பஞ்சாக்கரோபதேசம். நொடியன = சிவபோதமாகிய மலசத்திகளை அழிக்கும் தன்மையுடையனவாகிய-நொடித்தல்= அழித்தல் "நொடித்தான்மலை" என்பது காண்க. 8, 9-ம் சூத்திரக் கருத்து. **நுகமின்றி விளாக்கைத்து**-விச்சதின்றியே விளைவுசெய்யும் உழவுசெய்து. **விளா**-உழவு. "பாழ்செய் விளாவி" என்பது காண்க. தூக்கி - இருவினை ஒப்புவரப் பார்த்து - முன் செய்த பொய்யறத் துக ளறுத்து - பாச நீக்கம்செய்து. 10-ம் சூத்திரம். சுடர்ச்சோதியாக்கி= தன்னைப்போலச் செய்தல். சிவத்தன்மை பெறச்செய்தல் சிவப்பேறு பெறுவித்தல் 11-ம் சூத்திரம். : சிவமாக்கி" அடியரிற் கூட்டுதல் 12-ம் சூத்திரக் கருத்து. **"அன்பரொடு மரீஇ"** என்ற கருத்து. இவை அருட்பெருஞ் சோதியின் செயல்களாம். இவற்றை யறிந்து பயன்பட்டுய்வோமாக.

சிவம்.

---

"செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி, நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக் கருளியவாறுர் பெறுவாரச் சோவே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் B. A.

சைவத்துக்காக மிக உழைத்த பெரியார்

Donated by:-
Mr. K C. KULARATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா வித்துவான் சி. கணேசையர் அவர்கள்
தமிழுக்காக மிக உழைக்கும் பெரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகப் பெருமான் மனக்கருத்தின் நிலை

மகாவித்துவான் சி. கணேச ஐயர்

**மா**ணிக்கவாசகப் பெருமான் மனக்கருத்துத் தன் பிறவிப்பிணியை நீக்கவேண்டுமென்பதே. இக்கருத்து அவருக்கு முற்பிறவியின் தொடர்பால் இளமையிலேயே யுண்டாயதென்பது, "தெய்வமென்பதோர் சிந்தையுண்டாகி — முனிவிலாததோர் பொருளது கருதலும் — ஆறுகோடி மாயா சத்திகள் வேறு வேறு மாயைகள் தொடங்கின—ஆத்தமானார் அயலவர் கூடி—நாத்திகம் பேசி, நாத்தழும்பேறினர் ............... தப்பாமே தாம் பிடித்தது சலியா — பசுமரத்தாணி யறைந்ததுபோல ............... மற்றோர் தெய்வங் கனவிலு நினையாது — அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனாகி யருளிய பெருமையைச் — சிறுமையென்றிகழாது" என்னுமடிகளாலறியப்படும். இன்னும் "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்பதனுனும், "யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன் — வானேயும் பெறில் வேண்டேன் மண்ணுள்வான் மதித்துமிரேன் ........ எம்மானே நின்அருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே" என்பதனு மறியப்படும். அவர் மிகத் தெளிவாகக்கூறிய "வாழ்த்துவதும் வானவர்கடாம் வாழ்வான் மனநின்பால் — தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மை யெல்லாந் தொழவேண்டி — சூழ்த்து மதுகரம் முரலுந் தாரோயை நாயடியேன் — பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானுமுனைப் பரவுவனே." என்னுஞ் செய்யுளான் நன்கு அறியப்படும். இச்செய்யுட் கருத்தை நோக்கும்போது இக்காலத்துக் கோயிலை அடைந்து வணங்குபவர்களுடைய மனக்கருத்தின்நிலை மிகச் சிரிப்பைத் தருகின்றது. ஆடவர்கள் வணங்கும்போது தம் பிள்ளைகள் நன்ருக ஆங்கிலம் படித்து உத்தியோகம் பெறல்வேண்டுமென்றும், தாம் உத்தியோகஸ்தர்களாயிருப்பின் மேலும் உயர்ந்த சம்பள உத்தியோக வாழ்வை யடையவேண்டும் என்றும் கருதி வணங்குவார்கள். பெண்களும் அங்ஙனே தம் பிள்ளைகள் ஆங்கில வகுப்புக்களிற் சித்தியடைந்து உத்தியோக வாழ்வையடைய வேண்டும் என்றும் தம் நாயகர்கள் இன்னும் உயர்ந்த உத்தியோக வாழ்வைப் பெறவேண்டுமென்றுங் கருதி வணங்குவார்கள். மக்கட்பேறு இல்லாதவர்கள் மக்கட்பேறு வேண்டுமென்று வணங்குவார்கள். இனியேனும் நாம் பிறந்து வருந்தாமல் இருத்தல் வேண்டுமென்று கருதி வேண்டுதல் செய்து வணங்குபவர்கள் மிக அரியரினும் அரியராயிருப்பார்கள் என்பதே உண்மையாகும். நிற்க,

இனி மாணிக்கவாசக சுவாமிகள், சிவபெருமான் குருவாய் வந்து உபதேசித்து ஆட்கொண்டபின், பல தலங்களுக்கும் சென்று தரிசனஞ் செய்து மணிவாசகம் பாடியபின் திருப்பெருந்துறையிலுள்ள குருந்தமர நிழலில் இருந்து யோகத்தமர்ந்த போது தாம் அடைந்தநிலையை ஒரு வாசகத்தாலறிவிக்கின்ருர். அது வருமாறு:—

"இன்றெனக்கருளி யிருள்கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று, — நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன் நீயலாற் பிறிது மற்றின்மை,—சென்று சென்

றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்
ரூந் திருப்பெருந்துறையுறை சிவனே,
— ஒன்று நீயல்லை யன்றி யொன்
றில்லை யாருன்னை யறியகிற்பாரே."
என்பது.

இதன் பொருள் வருமாறு:—
திருப்பெருந்துறையுறை சிவனே! இப்
பிறப்பில் எனக்கு உபதேசஞ் செய்து
மாயாவிருளை (அஞ்ஞானத்தை) நீக்கி,
அறிவின்கண் எழுகின்ற ஞாயிறு
போலச் சோதிவடிவாய்த் தோன்றி
நின்ற நின்னியல்பை (நினைப்பற்று)
நினையாமல் நினைந்தேன். (என்றது
மௌனமாயிருந்து அறிவாற் பார்த்
தேன் என்றபடி) பார்த்தபோது
நீயாகிய ஒருபொருளை யன்றி, சரா
சரங்களாகிய பிறபொருளொன்று
மில்லாமல் எப்பொருளும் உன்னுள்
ஒடுங்கி ஒடுங்கி அணுவடிவாய்த்
தேய்ந்து தேய்ந்து நீயாகிய ஒருபொ
ருளாய்த் தோன்றும். (வெட்ட வெளி
யாகவே தோன்றும்) அங்ஙனம்
தோன்றினும் ஒருபொருளு நீயல்லை
உன்னையன்றி யொருபொருளுமில்லை
என்றவாறு. உன்னையன்றி யொன்று
மில்லை யென்றது,

"ஊனாகி யுயிராகி உயிர்தோறு
மாகி — வானதியான பொருளாகி மதி
யாகி வெய்யோன் ரூனாகி யாண் பெண்
ணுருவாகி" நின்ற தன்மையை, ஒரு
பொருளுநீயல்லை என்றது, "பெண்
ணாகி யாணயலியாய்ப் பிறங்கொளி
சேர்—விண்ணாகி மண்ணாகி யித்தனை
யும் வேறாகி" நின்ற தன்மையை.
வெட்டவெளி என்றது (சிதாகாச
மாய்=) அறிவொளியாய் நின்ற
வியல்பை. இதனையே "ஒருருவ
மொருநாம மொன்றுமிலார்க்கு —
ஆயிரந்திரு நாமம் பாடி" என்று
திருத்தெள்ளேணத்திற் கூறியதாகும்.

இனி உலகத்தி லொருவர் பிற
வியை நீக்கவேண்டுமாயின் அகப்பற்
றுப் புறப்பற்றுக்களை ஒழித்தல்
வேண்டும். "யானென தென்னுஞ்
செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த
வுலகம்புகும்," என்று திருவள்ளுவர்
கூறுதல் காண்க. மணிவாசகரும்
"வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள்வான் மதித்துமிரேன்"
என்று பற்றற்றுக் கூறுதல் காண்க.
கடவுளை வணங்குங்காலும் துவிதமாக
வைத்துச் சுட்டி வணங்கலாகாது.
அத்துவிதமாக வைத்து தன்னறி
வால் தானாகவே பாவித்து வணங்கல்
வேண்டும். "முன்னிலைச் சுட்டொழி
நெஞ்சே நின்போத முளைக்கிலையோ
— பின்னிலைச் சென்மம் வந்தெய்துங்
கண்டாயிந்தப் பேய்த்தனமேன் —
தன்னிலையே நில்லு தானே தனிச்
சச்சிதானந்தமாம்—நன்னிலை வாய்க்
கும்" என்றார் தாயுமானவரும். தன்
னிலையே நில்லு என்றது சிவோகம்
பாவனையை. இதனையே வேதாந்தம்
"அகம் பிரமாஸ்மி' என்று கூறும்.
அங்ஙனம் பாவித்துப் பின் பாவக
மும் இறந்து நிற்பின் முத்தி சித்திக்
கும் என்க. அப்பொழுதே பேரின்
பத்தை ஒருவன் அடைவான். பிறவி
யும் ஒழிந்து விடும். நிற்க,

மணிவாசகரும் சிவபுராணத்துள்
'வேற்று விகாரவிடக்குடம்பினுட்
கிடப்ப — ஆற்றேற னெம்மையா வர
னேயோ வென்றென்று—போற்றிப்
புழந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
—மீட்டிங்கு வந்து வினைப்பிறவி
சாராமே—கள்ளப்புலக்குரம்பை கட்
டழிக்க வல்லானே" என்று கூறுத
லானே, தம் பிறவிப் பிணியை நீக்க
வேண்டுமென்று கருதி வணங்கிச்
சிவோகம்பாவனை செய்தவர்களே
பொய்யாகிய அஞ்ஞானவுணர்ச்சி
நீங்கி மெய்ப்பொருளுணர்ச்சி
யடைந்து மீள இங்கே வந்து பிறவா
மல் இருப்பார்களென்பது பெறப்ப
டும். பொய் கெட்டு — என்பதற்கு
உடலம் மாற்றமடைந்து என்றும்,
மெய்யானார் என்பதற்கு. — மெய்ப்
பொருளாகிய சிவமானவர் என்றும்
பொருள் கூறலாம் மெய்ப்பொரு
ளென்றது — சச்சிதானந்தப்
பொருளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# திருவெம்பாவை — விளக்கவுரை

ஸ்ரீமத். சி. சுப்பிரமணிய தேசிகர்

## தோற்றுவாய்

திருவாத வூரரருள் திருவெம்பா வையின்விளக்கம்
ஒருவாறு கூறவெனக் குணர்வுதவி அருள்புரியும்
பொருவாத தில்லைநகர்ப் பொதுவில்நடம் எஞ்ஞான்றும்
ஒருவாத திருக்கூத்தன் ஒண்கமலத் திருவடியே.

யாழ்ப்பாணம் காரைநகர் "மணிவாசகமன்ற"த்தார் சைவ சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் பதினைந்து ஆண்டுகளின் மேலாகத் தொண்டு செய்து வருகின்றனர். அதிலும் இப்போது இரண்டு மூன்று ஆண்டுகளாக "மாணிக்கவாசகர்விழா" என ஒரு பெருங் கூட்டத்தினை நடத்தி, அரிய பெரிய அறிஞர்களின் பேருரைகளை நிகழ்வித்து, சைவசமயத்தின் பெருமைகளையும் திருவாசகத்தின் உயர்வையும் மாணிக்கவாசகரின் வாழ்க்கைச் சிறப்பினையும் சமய ஒழுக்க வழக்கங்களையும் சைவ நன்மக்கள் பலரும் நன்ருக அறிந்து உயர்வடையும் வண்ணம் செய்துவருகின்றனர்.

மாணிக்கவாசகர் விழாவினை மன்றத்தார் காரைநகர்த் திண்ணபுரத்துச் சுந்தரேசுவர ஆலயத்தில் மார்கழிமாதத்துத் திருவாதிரை விழாக் காலத்தில் நடத்தி வருகின்றனர். சுந்தரேசுவர ஆலயம் பழமைபொருந்தியது; காலந்தோறும் சைவ நன்னெறிகளில் உயர்ந்தோங்கி வருவது; திருவாதிரைத் திருவிழா, தில்லைச்சிதம்பரத் திருக்கோயிலில் நடப்பதுபோலவே நடத்தப்படுவது; நடராஜப் பெருமான் தேர்த்திருவிழாவில் அங்கு எழுந்தருள்வதுபோலவே இங்கும் எழுந்தருளப்பெறுவது. இவற்ருல் இதனை 'ஈழநாட்டுச் சிதம்பரம்' என்று சொல்லலாம். அரசினரின் கட்டுப்பாடுகளால் எளிதாகத் தில்லைச் சிதம்பரஞ் செல்லமாட்டாத ஈழநாட்டுச் சைவ நன்மக்கள் பலரும் இத்திண்ணபுரத்துச் சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கே திருவாதிரைத் தரிசனத்துக்கு வருகின்றனர்.

மணிவாசக மன்றத்தார் மாணிக்கவாசகர் விழாவினைத் திருவாசகத்தில் திருவெம்பாவைக்குரிய மார்கழித் திருவாதிரை விழாக்காலத்தில் நடத்திவருவது மிகவும் பொருத்தமுடையதாகும். திருவாசகத் திருமுறைக்கே உரியதாகத் திருவெம்பாவைக் காலத்தைப் பெரியோர்கள் கொண்டுள்ளனர். "மார்கழித் திருவாதிரைக்கு முன்னுள்ள ஒன்பது தினங்களிலும் ஆன்மார்த்தம் பரார்த்தம் இரண்டிலும் திருவெம்பாவையே ஓதுதல் வேண்டும்" எனவும் "திருவாதிரையன்று திருவெம்பாவை ஓதியபின் வழக்கம்போலத் தேவாரம் முதலிய திருமுறைகளை ஓதுதல் வேண்டும்" எனவும் நாவலர் அவர்கள் இரண்டாம் சைவவினுவிடையில் குறித்திருப்பதால் திருவெம்பாவைக் காலத்தில் மற்றைய திருமுறைகள் திருக்காப்பிடப்பட்டிருக்குமென்பது அறியவேண்டியது. பல மெய்யடியார்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருத்தொண்டத் தொகை" என்னும் திருப்பதிகத்தை நாள்தோறும் ஓதி வந்தனர். திருவெம்பாவைக் காலத்தில் மற்றைய திருமுறைகள் ஓதக்கூடாமையால், உண்மை நாயன்மார்களின் திருப்பெயர்களை ஓதி மகிழ முடியவில்லையே. இதற்கு யாது செய்யலாம்? எனத் திராவிடமாபாடியகாரர் மாதவச் சிவஞான யோகிகளிடம் விண்ணப்பஞ் செய்தனர். யோகிகள் "திருத்தொண்டர் திருநாமக் கோவை" யினை இயற்றி அதனை ஓதுமாறு பணித்தனர். என்னும் வரலாறும் இவ்வுண்மையை இனிது வலியுறுத்தும்.

மன்றத்தார் விழாமலர் ஒன்று வெளியிட எண்ணியுள்ளனர். அதனால் திருவெம்பாவைக்கு ஒரு விளக்கவுரை தரவேண்டுமென அன்பின் மிகுதியால் வற்புறுத்தினர். அவர்கள் வற்புறுத்தலை மறுக்க முடியாத யான் அருள் திருவும் ஆன்றமைந்த அறிவும் உடைய பெரியோர்கள் செய்துள்ளதும் செய்ய வேண்டியதுமான இதனைத் தொடங்குகின்றேன். எனது தகுதியின்மையை அறியமாட்டாத சிறுமையை என்னென்பேன்.

## திருவெம்பாவை

திருவாசகத்தில் "எம்பாவாய்" என்னும் தொடரினை இறுதியிலுடைய இருபது திருப்பாடல்களைக் கொண்ட பகுதி "திருவெம்பாவை" எனக் காரணப் பெயர் பெற்றது. அது திருவண்ணாமலையில் அருளிச் செய்யப்பட்டது. மாணிக்கவாசக சுவாமிகள் சிவத்தல யாத்திரையாகத் திருவண்ணாமலையில் சென்று தங்கியிருக்கும்போது, திருமணம் நடக்கப்பெறாத கன்னியர்கள் மார்கழிமாதத்தில் திருவாதிரையை இறுதியாகவுடைய பத்துத் தினங்களிலும் இருள் நீங்கும் புலரிக்காலத்தில் தங்கள் தோழிகளான கன்னியர்களை அவர்கள் வீடுகளில் சென்று எழுப்பிக்கொண்டு எல்லோரும் சேர்ந்து நீர்நிலையை அடைந்து நீராடி நியதி முடித்து, தூய மண்ணால் பார்வதி தேவிக்குரிய பாவைத் திருவுருவம் செய்து பலவகை உபசாரங்களோடு வழிபாடு செய்து, தங்களுக்கு நல்ல நாயகர் கிடைக்கவும் மழை வளஞ் சிறந்து உலகம் செழிக்கவும் வேண்டுதல் செய்வதனைக் கண்டார்.

அவர்களது செய்கையைக் கண்ட அடிகள், அவர்கள் கருதும் பொருளும் சைவ உண்மைப் பொருளும் ஒருங்கு அமையுமாறு அவர்கள் கூறுவதுபோலாகத் திருவெம்பாவையை அருளிச் செய்தனர். சைவ உண்மைப் பொருளும் உடையது என்பதை "மலஇருளற் றறங்காமல் மன்னுபரிபாகரருள் — செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை" என்னும் திருப்பெருந்துறைப் புராணத்தால் அறியலாம்.

மணமாகாத மகளிர் பாவை நோன்பு நோற்பதற்கு நூற்பிரமாணம் இல்லையாயினும், அடிகளே அவர்களது ஆசாரத்தை அனுசரித்து அருளிச் செய்தமையால் ஆன்றோர் ஆசாரமே பிரமாணமாகும். இது போலவே, தமக்குத் திருமணம் விரைவில் நடக்க வேண்டுமென விரும்பும் மகளிர் நிலாச்சோறு படைத்துப் பிறைச்சந்திரனுக்கு எரு இட்டு வழிபடும் வழக்கம் ஒன்று உண்டென்பதை, குமரகுருபர சுவாமிகள் இயற்றிய மீநாக்ஷியம்மை பிள்ளைத் தமிழில் காணலாம். சந்திரனும் இறைவியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சமாய் அதிட்டானமாய் இருத்தலும் கருதத்தக்கது.

"சத்தியை வியந்தது" எனத் திருவெம்பாவைக்கு உட்பொருள் குறித்திருத்தலால் அதுவும் பாவை நோன்பாகிய பார்வதி வழிபாட்டுக்கு உறுதுணையாகும். சோதிட நூலார் மார்கழித் திருவாதிரைத் தினத்தில் "திருவாதிரைக்களி" என ஒருவிழாக் குறிக்கின்றனர். அது திருவாதிரையில் பெறும் பெருமகிழ்ச்சியாகிய இன்பம் எனப் பொருள்படுவதால் அதுவும் பாவை நோன்பின் பயனைக் குறிக்கும்.

சங்க நூல்களில் குறிக்கப்படும் தைநீராட்டு வேறு, இந்த மார்கழித் திருவாதிரை நீராட்டு வேறு என்பதை திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிச் செய்த பூம்பாவைத் திருப்பதிகத்தில் காணலாம்.

இனி இத் திருவாதிரைக் காலம் இறைவி முதுக்குறைவு (பக்குவப் படல்) அடைந்திருந்த காலமெனவும், களி எனப்படும் உணவு படைக்க வேண்டுமெனவும், இந்த ருது சம்பந்தமாகவே இறைவிக்குப் பூரகருமம் செய்யப்படுவதெனவும், ஆர்த்ரா என்னும் வடசொல்லுக்கு நனைதல், முழுகுதல் எனப்பொருள் இருத்தலால் ருதுமதியாகிய இறைவியுடன் இறைவர் திருமுழுக்காடும்போது செய்யும் ஆர்த்ராதரிசனம் (மார்கழித் திருமஞ்சன தரிசனம்) சிறப்புடையதெனவும், திருமுழுக்கில் இறைவர் கங்காதேவியின் தொடர்பு பெற்றமையால் இறைவி ஊடல்கொண்டு நமது ஆலயத் திருக்கதவினைத் தாளிட்டரெனவும், அவ்வூடலை நீக்குமாறு இறைவர் தம் தோழராகிய ஆலாலசுந்தரரைத் தூதனுப்பினரெனவும், அவரது தூதினால் இறைவி ஊடல் நீங்கி இறைவரை அணைந்து உயிர்களுக்கு இன்பம் அருளினரெனவும் ஐதிகங்கள் உண்டு. இவையெல்லாம் உலகியல் முறையில் உயிர்கள் போகங்களை அநுபவிக்கவேண்டி, இறைவரிடத்தும் இறைவியிடத்தும் நிகழ்வனவாகப் பெரியோர்கள் அமைத்துக் கொண்டனவாகும். அன்றியும் இறைவர் அருளின்றி உலகில் எவையும் உளவாகா என்னும் உண்மையைப் புலப்படுத்துவனவுமாகும்.

திருச்சிற்றம்பலக் கோவையாருக்கு அரிய சிறந்த உரையினை இயற்றிய ஆத்திரேயன் பேராசியனர் தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் "சிறுபான்மை பாவைப்பாட்டும் அம்மனைப்பாட்டும் முதலாயின நான்கு அடியின் இகந்து வருவனவாயின" எனவும் "சிற்றெல்லையாகிய பத்தடியளவும் பாவைப் பாடலும் அம்மனைப்பாடலும்போலும் தரவு கொச்சகம் வரும்" எனவும் கூறியிருத்தலால் திருவெம்பாவைப் பாடல்கள் எட்டடித்தரவு கொச்சகக் கலிப்பாவாகும். அச்சுப்பிரதிகளில் "தரவிணைக் கொச்சகக்கலிப்பா" எனக் கூறப்பட்டிருக்கின்றதே எனின்; தரவிணைக் கொச்சகக் கலிப்பா தனிச்சொல் சுரிதகம் என்னும் உறுப்புக்களின்றி வருதற்கு விதியில்லாமையாலும் இலக்கியமில்லாமையாலும் அப்படிக் கொள்ளத் தக்கதாயில்லை.

"ஏலோரெம்பாவாய்" என்பதில் ஏல் ஓர் என்பன இனிய ஓசைதரும் அசைநிலையாகும். பொருள் நிலையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக்கொண்டு, ஏற்றுக்கொள் ஆராய் எனப் பொருள் கொள்வதால் பெரிய பயனொன்றும் உண்டாவதில்லை. "எம் பாவாய்" என்பது திருவெம்பாவை என்னும் பெயருக்கே ஏதுவாக உள்ளது; மகளிரின் பாவை நோன்பிற்குரிய பார்வதி தேவியைக் குறிப்பது; "சக்தியை வியந்தது" எனக் குறித்திருக்கும் உட்பொருளுக்கு இயைபுடையது; படர்க்கையில் நீக்கி விளித்து முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது; விளித்தமைக்கு முடிவு கூறப்படவேண்டியது. இங்ஙனம் இருப்பவும் அதனை பாவை நோன்பிற்குரிய பார்வதி தேவியை நினைவு கூர்தற்காக அமைந்த இனிய ஓசையுடைய அடி நிறைவாகிய நன்மொழி எனக் கொண்டு, திருவெம்பாவைக்குப் பொருள் கூறும்போது அசைநிலை போலாகப் பொருள் கூறாது விடுதல் சிறப்பாகத் தோன்றவில்லை. ஆதலால் பாவாய் என விளித்ததற்கு இயைய எவ்வகையிலும் பொருள் கூறி முடிவு செய்யவேண்டியதே முறையாகும்.

இனித் திருவெம்பாவைக்குப் பயன் மகளிர் கணவரைப் பெறுதலும் மழைவளம் சிறத்தலும் என்ற அளவில் அமையாது; மக்களுயிர்க்கு உறுதிப் பயன்களான அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் முறையாகப் பெறுவதே பயனாகும். மாணிக்கவாசக அடிகள் தாம் பெற்றபேறு இவ் வையமெல்லாம் பெறவேண்டுமென்ற பேரருளால் அருளிச் செய்ததாகும். மகளிர் விளையாடல்களான அம்மனை தெள்ளேணம் பூக்கொய்தல் உந்தி தோணோக்கம் ஊசல் முதலியவற்றில் அம்மகளிரை நோக்கி "வறிதுகூறும் கட்டுரையைவிட்டு எம் இறைவனைப் புகழ்ந்து பாடி விளையாடுவீராக" என்று கூறி, அம்மகளிர் கூற்றாகத் தமது அரும் பெரும் சமய உண்மைகளை அமைத்துத் திருவாசகப் பகுதிகளை அருளிச் செய்திருத்தல் இங்கே கருதத்தக்கது.

திருவெம்பாவையில் முதல் எட்டுத் திருப்பாடல்களில் துயில் எழுப்புதல் கூறப்படுவதால் பாவை நோன்பு நோற்கும் கன்னியரில் ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயதுவரை எட்டுப்பிரிவினர் அவற்றில் துயில் எழுப்பப்பட்டவராவர். முதல் திருப்பாட்டில் எழுப்பியவர் பன்னிரண்டு வயதின் மேற்பட்ட கன்னியராவர். அவர் தாமே துயிலெழுந்து பன்னிரண்டு வயதினரை எழுப்பி அவர்களோடு சேர்ந்து பதினொரு வயதினரையும் அவ்வாறே பத்து ஒன்பது எட்டு ஏழு ஆறு ஐந்து வயதுவரையுள்ளவர்களையும் சேர்ந்து துயிலெழுப்பிக் கொண்டு எல்லோரும் ஒருங்கு கூடி நீர்நிலையை அடைந்து நீராடி நியதி முடித்துப் பாவை நோன்பு நோற்பாராயினர்.

மற்றைய திருப்பாடல்கள் பன்னிரண்டிலும் இறைவனிடத்து விண்ணப்பம் செய்தும், கோயிற்பிணைப் பிள்ளைகளிடம் இறைவனைப் பாடும் பரிசு கூறுமாறு வேண்டியும், தம்மைக் காக்குமாறு இறைவனை வேண்டியும். தாங்கள் நீராடுமாறு கூறியும், தாங்கள் நீராடும் பொய்கையை இறைவி இறைவரோடு ஒப்பிட்டுக் கூறியும், இறைவனையும் இறைவியையும் புகழ்ந்துபாடியும், தம்முள் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் பத்தித் திறத்தை வியந்தும், மழையினை வேண்டுதல் செய்தும், இறைவியின் அருள் திறமும் இறைவனின் ஆளுந் திறமுங் கூறியும், இறைவன் அருள் செய்யும் முறைமை கூறியும், தம்மை இறைவனிடத்து அடைக்கலமாக ஒப்புவித்தமை கூறியும், இறைவன் திருவடிகள் தம்மைப் பாதுகாத்தருளுமாறு வேண்டுதல் செய்தும் இவ்விதமாகத் தாங்கள் தொடங்கிய பாவை நோன்பினை அக் கன்னியர்கள் நிறைவேற்றுவாராயினர்.

## திருவெம்பாவை — விளக்கவுரை

திருச்சிற்றம்பலம்

### ஆதியும் அந்தமும் 1

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாளென்னே! என்னே!
ஈதே! எம் தோழி பரிசேலோ ரெம்பாவாய்!

ஒளிபொருந்திய விசாலமான கண்களையுடைய பெண்ணே! முதலும் முடிவும் இல்லாத ஒளி வடிவினராய இறைவரை யாம் புகழ்ந்துபாடக் கேட்டுக்கொண்டும் உறங்குகின்றுயோ? அல்லது உன் காதுகள் செவிடோ? எனக் கேட்டுக்கொண்டு வந்த மகளிர் ஒரு மறுமொழியும் இல்லாமையால் தம்மால் எழுப்பப்பட்டவளது வீட்டினுள்ளே போயினர். இதற்குமுன் இவர்கள் வீதியில் மகாதேவரது நெடிய வீரக்கழல் அணிந்த திருவடிகளைப் புகழ்ந்துபாடிய வாழ்த்துப் பாடலின் ஒலிசென்று கேட்ட அளவிலேயே அப்பெண் பூக்கள் நிறைந்த படுக்கையின்மேலிருந்து புரண்டு எழுந்து தேம்பித்தேம்பி அழுது தன் வசம் இழந்து எதுவும்செய்ய இயலாதவளாக இவ்விதம் கிடந்தனளாக, உள்ளே போன மகளிர் இவள் நிலைமையைக் கண்டு இஃதென்ன ஆச்சரியம்! எங்கள் தோழியின் பக்தி மிகுதி இத்தன்மையுடையதா? எங்கள் வழிபாட்டிற்குரிய பாவையாகிய பார்வதிதேவி! எங்கட்கும் மிகுந்த பத்தித் திறத்தை அருள்வாயாக என்று வேண்டுதல்செய்து, பரவசமுள்ளவளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டனர் என்பதாம். 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசம் பரஞ்சோதி 2

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! நேரிழையீர்?
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடமீதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற்றம் பலத்துள்
ஈசனார்க் கன்பார்?யாம் ஆர்?ஏலோ ரெம்பாவாய்!

*செவ்விய ஆபரணங்களை அணிந்த பெண்ணே! நாம் பேசும்பொழுதெல்லாம் இரவும் பகலும் மேலான ஒளியையுடைய இறைவனிடத்தேயே அன்புடையேன் என்பாய். இறைவனிடத்தன்றி இந்தப் பூக்கள் நிறைந்த படுக்கையிடத்தும் அன்புடையையோ? என்று எழுப்ப வந்தவர் இகழ்ச்சியாகக் கேட்டபோது எழும்பியவள், செவ்விய ஆபரணங்களையணிந்த பெண்களே! சிச்சீ உங்கள் வாயில் இப்படி இகழ்ந்துகூறும் சொற்களும் சிலவுளவோ? விளையாடிக்கொண்டு இகழ்ந்து பேசும் நேரமும் இதுவோ? என்று மறுமாற்றம் உரைத்தலும், எழுப்ப வந்தவர், தேவர்கள் துதித்தற்கு அறிதற்கருமையாலும் கிடைத்தற்கருமையாலும் நாணுதற்கு ஏதுவாகிய செந்தாமரை மலர்போலும் திருவடிகளை அடியோம் துதித்தற்கு வலியவந்து தந்தருளிய ஞானசாரியனும் சிவலோகநாதனும் தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண்ணுள்ள ஈசனும் ஆகிய இறைவனிடத்து அன்புடையார் எவ்வித உயர்வுடையார்! யாம் எவ்வித தாழ்வுடையேம்! எம்பிழை பொறுப்பாயாக என்று நன்மொழி கூறி, எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவி! எங்கட்கும் உயர்ந்த அன்பினைத் தந்தருள்வாயாக என வேண்டுதல்செய்து, தம்மைக் கடிந்து கூறியவளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டனர் என்பதாம்,* 2

## முத்தன்ன வெண்ணகை 3

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன னந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால் பொல்லாதோ?
எத்தோ?நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ? நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்!

*முத்துப்போன்ற வெண்மையான பற்களையுடைய பெண்ணே! நீ இதற்குமுன்னெல்லாம் நித்திரைவிட்டெழுந்து எங்கள் எதிரே வந்துநின்று, என் தந்தை, இன்பவடிவினன், அழிவற்ற இறைவன் என்று வாயூறி இனிக்கப்பாராட்டிப் பேசுவாய்; இன்றே எழுந்துவந்து உன் வீட்டு வாயிற் கதவையேனும் திறக்கின்றாயில்லை. இஃதென்ன என்று*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பவந்தவர் கேட்க, எழுப்பியவள்வந்து கதவைத் திறந்து, பெண்களே! நீவிர் இறை
வனிடத்துப் பேரன்புடையீர்! இறைவனுக்குப் பழமையான தொண்டுடையீர், எனக்கும்
தகுதிமிக்க தோழமையுடையீர், இவ்வித இயல்புடைய நீவிர், என்னைப்போன்ற புதிய
அடியோங்களது குற்றங்களை நீக்கி அடிமைகொண்டால் அது உங்கட்குத் தீதாகுமோ!
என்று வினவுதலும், எழுப்பவந்தவர், உனது அன்புடைமை எத்தன்மையதோ? அதன்
உயர்வை யாம் எல்லோரும் அறியமாட்டோமோ? உன்னைப்போன்ற மனத்தூய்மையுடை
யார் எங்கள் இறைவனைப் புகழ்ந்து பாடாமலிருப்பரோ? உன்னைக் குற்றங் கூறிய எங்
கட்கு நீ புகழ்வதுபோலக் கூறிய இவ்வளவும் கிடைக்கவேண்டியதே; எங்கள் வழிபாட்
டிற்குரிய பாவையாகிய பார்வதிதேவீ! இப்பெண்மணியின் பத்தித்திறத்தை அறிந்திருந்
தும் மறந்து குற்றங்கூறிய எங்கள் பிழையைப் பொறுத்தருள்வாயாக என வேண்டுதல்
செய்து, அப்பெண்ணையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டனர் என்பதாம். 3

## ஒண்ணித்தில நகை 4

ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

ஒளிபொருந்திய முத்துப்போன்ற பற்களையுடைய பெண்ணே! இன்னும் விடிய
வில்லையோ? என எழுப்பவந்தவர் கேட்டலும், எழும்பவேண்டியவள் எழாது படுக்கை
யில் கிடந்தவாறே, அழகிய கிளிமொழிபோன்ற இனிய மொழியுடைய பெண்கள் எல்லா
ரும் வந்துவிட்டனரோ? என்று எதிர்வினு வினவுதலும், எழுப்பவந்தவர், வந்தாரையெல்
லாம் எண்ணிக்கொண்டு உள்ளபடி சொல்லுவோம். ஆனல் அதுவரையும் யாம் தேவர்க
ளுக்கு அழிவைத் தரவந்த ஆலகால விஷத்தை அடக்கி ஒப்பற்ற அருமருந்தாய் அருள்
செய்தவரும், வேதங்களில் ஓதப்படும் மேலான பொருளாயுள்ளவரும், ஆகம அறிவால்
காண்பவரின் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமை செய்பவரும் ஆகிய இறைவரைப் புகழ்
ந்துபாடி மனம் கசிந்து உள்ளுடைந்து நிலைபெற்று உருகமாட்டாதவர்களாவோம். ஆத
லால் கண்களைமூடி உறங்குவதுபோல பாசாங்குசெய்து வீணில் காலத்தைக் கழியாமல்
நீயே எழுந்துவந்து எண்ணிப்பார்த்துக் குறையுமாயின் மீளவும் போய் மெய்மையாக
உறங்குவாயாக; எனக் கூறிவிட்டு, எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவீ!
எங்கள் தோழியின் நிலைமை இரங்கத்தக்கது. அருள் செய்வாயாக என வேண்டுதல்செய்ய
அதுகேட்டு நாணத்தோடு எழுந்தோடிவந்த அப்பெண்ணையும் அழைத்துக்கொண்டு புறப்
பட்டனர் என்பதாம். 4

## மாலறியா 5

மாலறியா நான்முகனும் காணு மலையினைநாம்
போலறிவோம்! என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி! பரிசேலோ ரெம்பாவாய்.

*மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய பெண்ணே! திருமால் அறியாத, நான்முகப் பிரமாவும் காணாத அண்ணாமலை வடிவினராகிய இறைவரை நாமா அறியும் தகுதியுடையோம் என்று பணிவுடைமை தோன்றும்படியாயுள்ள பொய்ம் மொழிகளைப் பேசுகின்ற பாலும்தேனும் ஊறுகின்ற வாயினையுடைய வஞ்சகி! வாயிற் கதவினைத் திறப்பாயாக. மண்ணுலகத்தவரும் வீண்ணுலகத்தவரும் பிற உலகத்தவரும் அறிதற்கரிய இறைவரது திருக்கோலத்தையும், எளியோமாகிய நம்மையும் ஆளாகக் கொண்டருளிப் பாராட்டும் அருட்பண்பினையும் புகழ்ந்துபாடிச் சிவனே சிவனே என்று அடைக்கலம் வேண்டி அரற்றினும் உறக்கம் நீங்கிலை; எங்கள் அரற்றலை அறிந்திலை; உன் தன்மை இதுவோ! எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவீ! எங்கள் தோழிக்கு இரங்கி அருள் செய்க என வேண்டுதல் செய்தலும் எழுந்துவந்த அவளோடும் புறப்பட்டனர் என்பதாம்.*

மானே நீ 6

மானே!நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

*மான் பார்வைபோல மருண்ட பார்வையையுடைய பெண்ணே! நீ நேற்றைய தினம் நானேவந்து நாளையதினம் உங்களைத் துயில் எழுப்புவேன் என்று கூறியிருந்தும் அதனை மறந்து நாணமின்றி நீ போன திசையைக் கூறுதொழிந்தனை. அதுபோவதாக. உனக்கு இன்னும் விடியவில்லையோ? விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் பிறவுலகத்தவரும் அறிதற்கரிய இறைவர் தாமே வலிய எங்கள்பால்வந்து எங்களைப் பாதுகாத்து அடிமைகொண்டருளுகின்ற பெருமை பொருந்திய நீண்ட வீரக் கழலணிந்த திருவடிகளைப் புகழ்ந்துபாடி வந்தவர்களாகிய எங்களுக்கு உனது வாயைத்திறந்து நன்மொழியாவது கூறுகின்றாயில்லை. அன்பினால் உனதுடல் உருகுகின்றாயுமில்லை. உனக்குமட்டுமோ உன்பால் வந்த எங்கட்கும் மற்றைய யாவர்க்கும் தலைவராகிய இறைவரை எங்களுடன் சேர்ந்து புகழ்ந்து பாடுதலாவது செய்வாயாக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதி தேவீ! எங்கள் தோழியாகிய இவளுக்கு எங்களுடன் சேர்ந்துபாடும் பரிசருள்வாயாக என வேண்டுதல்செய்தலும் எழுந்துவந்த அவளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டனர் என்பதாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னே இவையும் 7

அன்னே! இவையும் சிலவோ? பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே! துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

*தாயே! உன்னிடத்து நற்செயல்களன்றித் தீச்செயல்களும் சிலவுளவோ! பல தேவர்களும் நினைத்தற்கும் அரியவரும் ஒப்பற்ற முழுமுதல்வரும் மிகுந்த உண்மை பொருந்திய புகழையுடையவரும் ஆகிய இறைவரைப்பற்றி ஊதப்படும் பலவகை ஊதுகுழல்களின் ஒலி கேட்டமாத்திரத்தில் சிவசிவ என்றே வாயைத்திறந்து கூறுவாய். தென்னாடுடைய சிவனே என்று ஒருவர் சொன்னவுடனே அழலிடைப்பட்ட மெழுகுபோல் உருகுவாய். இத்தன்மையுடைய நீ என் உயிர்த் தலைவராய பசுபதியாயுள்ளவர். என் அரசர் என் இறப்பினை நீக்கும் இனிய அமுதமானவர் என்று யாம் எல்லோமும் தனித்தனியாகவும் கூறினோம். அவற்றைக் கேட்பாயாக. இன்னும் உறங்குகின்றாயோ? இறைவனை நினைந்து உருகுதலில்லாத வலிய நெஞ்சுடைய அறிவில்லாத பேதைப் பெண்கள்போலச் சும்மா கிடக்கின்றாயே! உனது உறக்கத்தின் இயல்புதான் எப்படிப்பட்டது? எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவீ! இவளுக்கு நல்லறிவினைக் கொடுத்தருள வேண்டும் என வேண்டிக்கொள்ளுதலும் எழுந்துவந்த அவளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டனர் என்பதாம்.*

## கோழி சிலம்ப 8

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?
வாழி!யீ தென்ன உறக்கமோ? வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

*கோழிச்சேவல் கூவுதலும் குக்கில் குயில் முதலிய பறவைகள் எவ்விடங்களிலும் ஒலி செய்கின்றன. நாகசின்னம் ஊதப்படுதலும் வெண்மையான சங்குகள் எவ்விடங்களிலும் ஊதப்படுகின்றன. இவ்விதமாக விடியற்காலை தெரிவிக்கப்படுதலும் நாங்கள் எழுந்து ஒப்பில்லாத சிறந்த உண்மைப் புகழ்களையும் பாடிக்கொண்டு வருகின்றோம். நீ அவற்றைக் கேட்கவில்லையோ? வாழ்தலையுடையதோழி! உனது உறக்கம் எத்தன்மையான உறக்கமோ? உன் வாயைத் திறந்து ஒன்றுஞ் சொல்லுகின்றாயில்லையே? சக்கரப் படை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையுடைய திருமால் சிவபெருமானிடத்துப் பேரன்புடையர் என்பர். அவரது அன்புடைமையும் உன்னைப்போல உறங்கிக்கொண்டு வாய்திற வாமல் இருப்பதுதானோ? இனியாவது உலகெலாம் அழியும் மாப்பேரூழிக்குத் தலைவராய் தாம் அழியாது நிற்கும் ஒப்பற்ற வரும் பார்வதிதேவியை இடப்பாகத்திலுடையவரும் ஆகிய இறைவரையே எங்களுடன் சேர்ந்து பாடுவாயாக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவீ! இவளையும் எங்களுடன் சேர்ந்து பாடும்வண்ணம் அருள்செய்வாயாக என வேண்டுதல் செய்தலும் எழுந்துவந்த அவளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டனர் என்பதாம்.

இத்திருப்பாட்டில் "ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?" என்ற குறிப்பினால், இது சேட்டை எனப்படும் சிவசத்தியின் திருவாக்காய், சுத்தமாயையைத் தொழிற்படுத்துகின்ற அனந்ததேவநாயனாரை இடமாகக் கொண்டுள்ள வாமாசத்தியைத் தொழிற்படுத்திக் கீழே பிரகிருதி மாயையின் விகிர்தியாகிய ஆன்மதத்துவம் நடத்தற் பொருட்டு, சிகண்டபரமசிவனார் வாயிலாகத் திருமாலைத் தொழிற்படுத்துகின்ற சிவசத்தியை நோக்கிக் கூறியதெனப் பெரியோர் கூறுவர். எனவே இதில் வாமையும் இதற்கு முன்னுள்ள பாடல்களில் முறையே சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி என்னும் எழுவரும் முன்முன் உள்ளவரால் தொழிற்படுத்தப்பட்டு, உலகத்தில் உயிர்கள் இறைவரால் ஐந்தொழிற்படுத்தப்படுமாறு அருளிச்செய்யப்பட்டது. இறைவரைநீங்காத பராசத்தியால் தூண்டப்பட்டு, மனோன்மனி சத்தியே முதல் திருப்பாட்டில் சர்வபூததமனியைத் தொழிற்படுத்தியராவர்.

## முன்னைப் பழம்பொருள் 9

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன்! நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

மிகப் பழைய பொருள்கள் எல்லாவற்றிற்கும் மிகப் பழைய பொருளாயுள்ளவரே! மிகப் புதிய பொருள்கள் எல்லாவற்றிற்கும் மீட்டும் மிகப் புதிய பொருளாந் தன்மையுடையவரே! எங்கள் தலைவரே! தேவரீரை முழுமுதல்வராக அரிதாகப் பெற்றுக் கொண்டமையால் தேவரீரின் சிறப்புடைய அடியவர்களாகிய நாங்கள், தேவரீரின் அடியவர்களுடைய திருவடிகளையே வணங்குவோம். அவர்களுக்கே உரிமையுடையவராவோம். அவ்வடியவர்களே எங்கள் நாயகராவர். அவ்வடியவர் மனம்மகிழ்ந்து கூறிய கட்டளைப்படியே அவர்க்கு அடிமையாய் நின்று ஏவல்செய்வோம். தேவரீர் எங்களுக்கு இந்தவகையின் எல்லாம் தந்தருள்வீரானால் எவ்வித குறைபாடும் இல்லாதவராவோம். எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவீ! நாங்கள் வேண்டிக்கொண்டவண்ணம் இறைவர் அருள்செய்யுமாறு உனதருள் முதலில் உளதாவதாகவென வேண்டுதல் செய்தனர் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதாளம் ஏழினுங்கீழ் 10

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருண்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்!
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

இறைவருடைய திருவடித்தாமரை மலர்கள் கீழுலகங்கள் ஏழிற்கும் கீழாகச் சென்று சொல்லின் அளவைக் கடந்துள்ளன. பூக்கள் நிறைந்த அழகிய திருமுடியும் மேலேயுள்ள எல்லாப் பொருள்களுக்கும் மேலாகவுள்ளது. இத்தன்மையராயினும் உயிர்களுக்கு அருள்செய்யவேண்டி உமாதேவியை ஒருபாகத்திலுடையர். ஆட்பாலவர்க்கு அருளும்வண்ணம் கொண்டருளும் அளவற்ற திருமேனியை யுடையவர். வேதாகமங்களும் விண்ணவரும் மண்ணவரும் பலவகையாகப் புகழ்ந்து துதித்தாலும் புகழக் குறைவுபடாத பெருமையையுடைய ஒப்பில்லாத தோழராகவுள்ளவர். அன்பால்நினையும் அடியவரது உள்ளக் கமலத்தில் எழுந்தருளியிருப்பவர். இத்தன்மையுடைய இறைவரது திருக்கோயிலில் தொண்டுசெய்யும் குற்றமில்லாத அழகுடைய பெண்மக்களே! அவ்விறைவரது ஊர் யாது? அவர்பெயர் யாது? அவருக்கு உறவினர் யார்? அயலவர் யார்? அவரைப் புகழ்ந்துபாடும் தன்மை யாது? எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவி! இறைவரைப் புகழ்ந்துபாடும் தன்மையை அருள்வாயாக என்று வேண்டுதல் செய்தனர் என்பதாம்.

## மொய்யார் தடம்பொய்கை 11

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா!வெண் ணீருடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா!நீ ஆட்கொண் டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

செறிந்த தீபோலும் செந்நிறமுடையவரே! வெண்மையான திருநீற்றை நிறைய அணிந்தவரே! திருவருட் செல்வரே! சிறிய இடையையும் மை தீட்டிய அகன்ற கண்களையும் உடைய உமையம்மையாருக்கு நாயகரே! எங்கள் தந்தையாக உள்ளவரே! வலிமை பொருந்திய வரம்பினையுடைய இயற்கையான குளத்தில் போய், "முகேர்" என்னும் ஒலிக்குறிப்புண்டாகுமாறு கைகளினால் குடைந்து நீராடி, தேவரீரது திருவடிகளைப் புகழ்ந்து பாடி, வழிவழி அடிமைகளாகிய நாங்கள் நல்வாழ்வு பெற்றோம். தலைவரே! தேவரீர் அடிமைகொண்டருளும் திருவிளையாடலில் உய்வுபெறுபவர்கள் உய்வுபெறும்வகையினெல்லாம் உய்ந்துபோக, நாங்கள்மட்டும் தவிர்ந்துள்ளோம். ஆதலால் எங்களை இளைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாதபடி காத்தருள்வீராக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவீ! எங்களை இறைவர் வருந்தாமல் காக்கும்படி அருள்செய்வாயாகவென வேண்டுதல் செய்தனர் என்பதாம்.

## ஆர்த்த பிறவி 12

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோ ரெம்பாவாய்.

நம்மைப்பற்றியுள்ள பிறவித்துன்பம் நீங்கும்படி நாம் மகிழ்ந்து ஆரவாரம்செய்து முழுகும் தீர்த்தமாகவுள்ளவரும், நல்ல தில்லைச் சிற்றம்பலத்தில் அங்கையில் அனலேந்தி ஆடுகின்ற கூத்தப்பிரானாயுள்ளவரும், இங்கே நாம் அறிகின்ற வான்முதல் மண்ணீறான உயிரல் பொருள்களையும் உயிர்ப்பொருளான நம் எல்லோரையும் படைத்தும் காத்தும் ஒடுக்கியும் திருவிளையாடல் செய்பவரும் ஆகிய இறைவரது திருவைந்தெழுத்தையும் ஓதி, உயிர் உலகங்களைத் தமது உடைமையாக உடைய அவ்விறைவரது சிறந்த திருவடிகளைத் துதிசெய்து, கையில் அணிந்த வளையல்கள் ஒலிக்கவும் இடையில்அணிந்த நீண்ட மேகலைகள்மிக்க பேரொலிசெய்யவும் மலரணிந்த கூந்தலின்மேலுள்ள வண்டுகள் எழுந்து ஆரவாரஞ் செய்யவும் பூக்கள் விளங்குகின்ற பொய்கையிலுள்ள பெரிய சுனைநீரில் கைகளால் துழாவி முழுகுவோமாக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவீ! நீயும் நீராடியருள்வாயாக என்பதாம்.

## பைங்குவளைக் கார்மலர் 13

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

எங்கள் பிராட்டியாரின் திருக்கண்கள்போன்று குளிர்ச்சிபொருந்திய கருங்குவளைப் பூக்களையுடைமையாலும், எங்கள் இறைவரது செவ்விய திருமுகம்போன்று குளிர்ந்த செந்தாமரைப் பூக்களையுடைமையாலும், பிராட்டியார் திருக்கைகளில் அணிந்த வளையல்களாகிய குருகினம்போன்று அங்கே அழகிய நீர்ப்பறவைகளாகிய குருகினத்தை யுடைமையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், மேலும் இறைவர் அணிந்துள்ள பாம்புகள்போன்று நீர்ப்பாம்புகளையுடைமையாலும், தங்களின் ஆணவம் கன்மம் மாயை என்னும் அழுக்குகளை நீக்கிக்கொள்ள விரும்பும் பக்குவமுடையவர் இறைவியையும் இறைவனையும் சார்வதுபோல தங்கள் உடல் அழுக்கினை நீக்கி முழுகுவார் வந்து சேர்தலுடைமையாலும் எங்கள் இறைவியும் இறைவரும்போல அமைந்துள்ள நீர்நிறைந்த குளத்தில் அமுங்குமாறு குதித்துக் குதித்து எங்கள் கைவளைகள் ஒலிக்கவும் காற்சிலம்புகள் அவ்வொலியோடு கலந்தொலிக்கவும் தனங்கள் பொலிவடையவும், முழுகும் நீர் மேலே எழவும், தாமரைப் பூக்களையுடைய நீரில் குதித்து முழுகுவோமாக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவி! நீயும் நீராடியருள்வாயாக என்பதாம்.

## காதார் குழை 14

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்

காதுகளில் அணிந்த தோடுகள் ஆடவும், அழகாக அணிந்த மற்றைய ஆபரணங்கள் ஆடவும், மாலை அணிந்த கூந்தல் ஆடவும், மாலையில் மொய்த்த வண்டுக் கூட்டம் எழுந்து ஆடவும், குளிர்ந்த நீரில் முழுகித் திருச்சிற்றம்பலத்தைப் பாடியும் வேதப்பொருளாயுள்ளவரைப் பாடியும் அப்பொருளாயுள்ளவரைப் பாடியும் அப்பொருளாயுள்ள இறைவரது உண்மையாந்தன்மையைப் பாடியும், ஒளிவடிவாகவுள்ளவரின் வல்லமையைப் பாடியும், சுற்றியணிந்த கொன்றைமலர் மாலையைப் பாடியும், இறைவர் எப்பொருட்கும் ஆதியாயிருக்கும் திறத்தைப் பாடியும், அந்தமாயிருக்கும் திறத்தைப் பாடியும், எங்களை வேறுபடுத்தித் தனுகரண புவனபோகங்களைத்தந்து வளர்த்துப் பாதுகாத்து மேல்நிலையடையச்செய்த வளையலணிந்த கைகளையுடைய இறைவியின் திருவடிச்சிறப்பைப் பாடியும் நீராடுவோமாக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதிதேவி! நீயும் நீராடியருள்வாயாக என்பதாம்,

## ஓரொருகால் 15

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களே! பத்தித்திறம்மிக்க கச்சணிந்த அழகிய ஆபரணமணிந்த தனங்களையுடைய நெடியதாரை ஒரு பெண் தனது மனம் களிப்பு மிகவும், ஒருபோதும் நீங்காத ஆனந்த நீரின் என்றென்று கண்களினின்றும் விடாது பொழியவும், அடிக்கடி எம்பெருமான் எம்பெருமான் பாடிக்கொண்டேயிருப் கூறி, எங்கள் இறைவரது சிறப்புக்களை ஒருபோதும் வாயோயாமல் வணங்கியிருக்க பாள். அப்பெண்மணி பூமியில் வந்து தோன்றி ஒருகாலத்தும் மற்றத்தேவரை மயங் மாட்டாள். தெய்வப் பேரரசராகிய இறைவரிடத்து இவ்விதமாக அன்புமிகுதியால் அடிமைகொள் கிப்பித்தாமாறும் உளதோ! எவர் ஒருவர் இப்பெண்ணை இத்தன்மையாக புகழ்ந்து எத்தக்க திறமையுடையவர் அந்தத்திறமையுடையவரின் திருவடிகளை வாய்நிறையப் முழுகுவோமாக. பாடிக்கொண்டு அழகிய தோற்றத்தையுடைய பொலிவாகிய நீரிலே குதித்து என்பதாம். எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதி தேவீ! நீயும் நீராடியருள்வாயாக

இத்திருப்பாட்டில் ஒருபெண்ணின் பத்தித்திறமும் இயல்பும் இறைவரிடத்துப் பித்தா மாறும், ஓயாமல் இறைவர் புகழ் பாடுதலும், ஆட்கொண்ட இறைவரது திறமும் கூறப்படு கின்றன. நீராடப்போகும் கன்னியர்களுடன் தம்மையும் ஒருத்தியாகச் சேர்த்துக்கொண்டு அவர்கள் கூற்றுகத் திருவெம்பாவையை அருளிச்செய்த அடிகள், "அந்தரர்தம் பதியினிழிந்து அருள்புனை மாத்தியர் குலத்தில் வந்தருளி", இறைவரால் ஆட்கொள்ளப்பட்டு இடையறு அன் புடையராய் எங்கள் பந்தமறத் திருவுள்ளம்பற்றித் திருவாசகம் பாடியருளிய தம்மையே அப் பெண்ணாக வைத்துக் கன்னியொருத்தியின் வாயிலாகக் கூறியருளினரெனலாம். "முன்ன மவனுடைய நாமங்கேட்டாள்" என்னும் திருத்தாண்டகம் இங்கே அறியத்தக்கது.

முன்னிக்கடலை **16**

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை!ஏலோரெம்பாவாய்.

மழைபெய்யும் வான்முகிலே! நீ கடலைச்சார்ந்து, அதன் நீர் குறையும்படி முகந்து விண்ணில் எழுந்து, எம்மையுடைய உமையம்மையாரைப்போல நீல நிறம்பெற்று விளங்கி எம்மை அடிமையாகவுடைய அம்மையாரின் சிறிய இடையைப்போல மின்னுதல் செய்து மிகுந்து பரந்து, எங்கள் இறைவியின் திருவடியில் அணிந்த பொன்னாலாகிய அழகிய சிலம் பைப்போல முழங்கி, பிராட்டியின் அழகிய கட்புருவங்கள்போல வில்லிட்டு, நந்தம்மை ஆளாகவுடைய பிராட்டியை விட்டுப்பிரியாத எம்பெருமானுடைய அன்பர்களுக்கும் எளியோ மாகிய எங்களுக்கும் அப்பிராட்டி முதலில் சார்ந்து இடைவிடாது பொழிகின்ற திருவருளைப் போல மழையைப் பொழிவாயாக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதி தேவீ! மழைவளஞ்சுரக்க அருள்செய்வாயாக என்பதாம்.

செங்கணவன்பால் **17**

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

வாசனை பொருந்திய கரிய கூந்தலையுடைய பிராட்டியார் பாராட்டத்தக்க தகுதியில்லாத எளியோங்களையும் பொருளாகக்கொண்டு பாராட்டிச் சிறப்புச்செய்து, செந்தாமரைப் பூங்கண்ணராகிய திருமாலிடத்தும் நான்குதிசைமுகங்களையுடைய பிரமாவிடத்தும் இந்திரன் முதலிய தேவர்களிடத்தும் மற்று எவ்விடத்துள்ள உயிர்களிடத்தும் இல்லாத ஒப்பற்ற பேரின்பம் நம்மிடத்து உள்ளதாகும்வண்ணம் அருள்செய்தலும், இவ்வுலகில் எங்கள் குடிசைகள்தோறும் எளிதாக எழுந்தருளி வந்து சிவந்த தாமரை மலர்போலும் அழகிய திருவடிகளை எளியோங்களுக்குத் தந்தருளுகின்ற வீரரும், அழகிய அருட்பார்வையுடைய அரசரும், அடியோங்களுக்குக் கிடைத்தற்கரிய அமுதம்போன்றவரும், எங்கள் தலைவராயுள்ளவரும் ஆகிய இறைவரை நன்மைகள் விளங்குமாறு புகழ்ந்துபாடிக்கொண்டு தாமரைப்பூக்களையுடைய பொலிவாகிய நீர் நிறைந்த பொய்கையில் குதித்து முழுகுவோமாக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதி தேவீ! நீயும் முழுகுவாயாக என்பதாம்.

அண்ணு மலையான் 18

அண்ணு மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே!யிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

திருவண்ணாமலையின் வடிவத்தையுடைய இறைவரின் திருவடித்தாமரை மலர்களைச் சேர்ந்து வணங்குகின்ற தேவர்களுடைய முடியின்கணுள்ள இரத்தினத்தொகுதிகள் இறைவர் திருவடியின் பேரொளியால் தம் ஒளி மழுங்கினாற்போல, இறைவரது வலக்கண்ணாகப் பொருந்திய சூரியனது ஒளி வருதலால் இருள் நீங்க, குளிர்ச்சி பொருந்திய ஒளி மழுங்கப்பெற்று நக்ஷத்திரங்கள் மறைந்துபோக அமைந்த விடியற்காலத்தில், பெண்ணாகியும் ஆணாகியும் அலியாகியும் விளங்கும் ஒளிப்பொருள்கள் பொருந்திய ஆகாயமாகியும் நிலமாகியும் இவ்வளவு பொருள்களுக்கும் வேறுபொருளாகியும் ஞானக்கண்ணால் உண்ணும் அமுதமாகியும் எங்கும் நீக்கமறநிற்கின்றசிவபெருமானுடைய வீரக்கழலணிந்த திருவடிகளைப்புகழ்ந்துபாடிக்கொண்டு பெண்ணே! இந்தப் பொலிவாகிய நீரையுடைய பொய்கையில் குதித்து முழுகுவோமாக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதி தேவீ! நீயும் நீராடுவாயாக என்பதாம்.

உங்கையில் பிள்ளை 19

உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்

UNIVERSITY OF JAFFNA SRI LANKA
ARCHIVES
249904
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பெருமான்! உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன்! நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

*எங்கள் தலைவரே! அடைக்கலம் புகுவோர் நாம் உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று கூறும் அவ்விடத்து அப்பழமொழியைப் புதுப்பித்து நாங்களும் கூறு வது தவறாகுமென்று எங்கட்குளதாகும் அச்சத்துடனே. தேவரீருக்கு ஒரு விண்ணப்பம் கூறுகின்றோம், அதனைக் கேட்டருள்க. எங்கள் தனங்கள் தேவரீரது அன்பரல்லாதவர்க ளின் தோள்களைச் சேராதொழிக. எங்கள் கைகள் தேவரீருக்கல்லாமல் வேறுயார்க்கும் எவ்வித தொண்டும் செய்யாதொழிக. எங்கள் கண்கள் இரவும் பகலும் தேவரீரையன்றி வேறொரு பொருளையும் காணாதொழிக. இவ்வுலகில் இவ்வாறே எங்களுக்கு எங்கள் தலைவராகிய தேவ ரீர் தந்தருளுவீரானால், சூரியன் கிழக்கிலன்றி வேறு எத்திசையில் உதித்தாலும் எங்களுக்கு வரக்கடவ தியாது? யாதும் இல்லை. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவையாகிய பார்வதி தேவி! நாங்கள் வேண்டிக்கொண்டவண்ணம் இறைவர் தந்தருளும்படி உனதருள் உண்டாவ தாக என்பதாம்.*

## போற்றி அருளுக 20

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோ ரெம்பாவாய்.

*தலைவரே! எல்லாப்பொருள்களுக்கும் முன்னுள்ள பொருளாகிய தேவரீருடைய திருவடிமலர்கள் எங்களைப் பாதுகாத்தருளுக. எல்லாப்பொருள்களுக்கும் முடிவிலுள்ள பொருளாகிய தேவரீருடைய சிவந்த தளிர்போன்ற திருவடிகள் எங்களைப் பாதுகாத்தருளுக. எல்லாவுயிர்களுக்கும் தோற்றத்தினைச் செய்கின்ற தேவரீருடைய பொன்போன்ற திருவடிகள் எங்களைப் பாதுகாத்தருளுக. எல்லாவுயிர்களுக்கும் போகங்களைக்கொடுத்துக்காக்கும் தேவரீ ருடைய அழகிய வீரக்கழல் அணிந்த திருவடிகள் எங்களைப்பாதுகாத்தருளுக. எல்லாவுயிர்க ளுக்கும் ஒடுக்கத்தினைச் செய்கின்ற தேவரீருடைய இரண்டு திருவடிகளும் எங்களைப் பாதுகாத் தருளுக. திருமாலும் நான்முகப்பிரமாவும் காணமுடியாத தேவரீருடைய செந்தாமரைத் திருவடிகள் எங்களைப் பாதுகாத்தருளுக. நாமெல்லாம் உய்யும்படி அடிமைகொண்டருளிய தேவரீருடைய பொற்பூப்போன்ற திருவடிகள் எங்களைப் பாதுகாத்தருளுக. நாம் ஆடுகின்ற திருவாதிரை மார்கழி நீர் எங்களைப்பாதுகாத்தருளுக. எங்கள் வழிபாட்டுக்குரிய பாவை யாகிய பார்வதி தேவி! எங்களைப் பாதுகாத்தருள்வாயாக என்பதாம்.*

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவையாரின் செம்பொருள்

தமிழ்ப் பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர்

நமது தமிழகம் நற்றவமுடையது. அற்புதமான பொற்புறு பதிகள் அமைந்தன. கற்பனை கூறரும் கங்கை காவிரி கதித்துப் பாய்வதும் நம்நாடே. மக்கள் நானிலங் கண்டு வளமுடன் வாழ்ந்தனர். வீரம், செல்வம், வீறுசேர் மதிப்பு ஆதியன தமிழ் நாட்டில் வாழ்நரிடம் பொலிந்திருந்தன. தமிழ்ச்சங்கம் தழைத்திருந்தது பேருணர்வுடைய புலமையோர் பெட்புறு நூல்கள் யாத்தளித்தனர், ஆலவாய் அவிர்சடைக் கடவுளும் புலவராய் வந்தருளினராயின் தமிழின் மாண்பு சாற்றவும்படுமே! தெய்வத் திருவருள் சைவமாஞ் சமயஞ்சார மக்களும் உய்வகை நாடினர்.

சமய நூல்களும் பல்கின. சாத்திர நூல்கள் பல. தோத்திர நூல்களும் பலப்பல. இப்போது, பதிவாக்கான வேத சிவாகம நெறித்தான பன்னிரு திருமுறைகளும் அவற்றின் செம்பொருள் மாறாத சித்தாந்தப் பெரு நூல்களும் விளங்குகின்றன. சமய குரவர்கள் கூறியவை தேவார திருவாசகங்கள் நாடோறும் பாராயணஞ் செய்யத்தக்கவை. பசுகரணம் நீங்கச் சிவகரணச் செல்வத்துள் மூழ்கி நின்று அருளப்பெற்றவை அருட் பாக்களே! மருட்பாக்களைப் பாடி மகிழ்வாருமுளர். இன்பத் திரு அறியார் கதி என்னகுமோ அறியேம்! மந்திரங்கள் வடமொழியே. குடிலை என்போம். பிரணவம் என்பதே அது. அது வடமொழிதான். வந்த காரியம் வேறு. விவாதம் வீண் பொழுதாகுமல்லவா? அமைக.

பாண்டி நாட்டில் பழமறையோர் குலத்தில் ஒரு ஞானபாநு உதித்தது. திருவாதவூரர் என்று அச்சூரியனைச் சீரியோர் அழைத்தனர். அரிமர்த்தன பாண்டியன் அப்பெரியாரை மந்திரியாக்கினன். முன்னை வினையகல இன்னே இறைவரருள் முகிழ்த்தார். குடமுழா நந்தீசரே திருவாதவூரராக அவதரித்தார். பெருந்துறையில் சிவ பரம்பொருளின் பேரின்ப உபதேசம் மந்திரியாருக்கு எய்தியது. அணிவாசகம அருளும் அவர் மணிவாசகரானார். அவர் அருளியதே திருவாசகம். திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார். கேட்டாரின் கல் நெஞ்சையும் உருக்கும் பேரமிழ்து சொரியும் பாடல்களைப் பாடி மகிழாது சைவர் என்றிருப்பது வெட்கமே! கனம் போப் என்ற மேனாட்டறிஞர் திருவாசகம் பத்திச் சுவை பிலிற்றும் பான்மைத்தெனை உன்னி அச்சுவாகனத்தில் அவற்றை இவரச்செய்தார். நிற்க;

நடராசர், மலரடி நோவ மறையவராய் மானிலம் போந்து, கரமலர் சேப்ப வரைந்த மாட்சி திருவாசகம் திருக்கோவையார் இரண்டற்கும் பொருந்தியதாலல் அவற்றின் செவ்வி கிளத்தலாந் தன்மைத்தா? ஆனலும் பேராராய்ச்சி யுடையோர் சிலசில நயங் காட்டுவர். அவர்தம் பின்செல்லுதற்கு யானும் விழைந்தேன். ஆசை வெட்கமறியாதன்றோ! இஃது ஒருபுறமாக. திருவாசகம் வரைந்த திருச்சிற்றம்பலமுடையார் "தையல் பங்கினரைக் கோவைபாடும்" என்றருளிச்

செய்ய, அவர் திருவாய் மொழிப்படி நந்தமிழ் வாழவந்த மணிவாசகர் அருளியது திருக்கோவையார் என்பதாகும்.

இத் திருக்கோவையாரை, வேத நூல் என்பாரும், யோகநூலென்பாரும், காமநூல் என்பாரும், தர்க்கநூல் என்பாரும், இலக்கண நூல் என்பாரும் ஆகப் பலபடப் பெரியோர் புகல்வர். தலைவன் தலைவி முறையில் அகப் பொருட்டுறைகள் பொதுள யாக்கப் பெற்றுள்ள அரிய நூல் என்பதில் ஐயமின்று. இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், இடந்தலைப்படுதல், மதியுடம்படுதல், முன்னுறவுணர்தல், பகற்குறி, இரவுக்குறி, மணச்சிறப்பு முதலியன ஆங்காங்கே இனிது காணப்படும். காட்சி முதல் ஊதிய மெடுத்து உரைத்து ஊடல்தீர்த்தல் இறுதியாக நானூறு துறைகள் திருக்கோவையாரில் அடங்கியுள்ளன. ஆன்மாவைத் தலைவியாகவும், பதியாகிய இறைவரைத் தலைவனாகவும் வைத்துத் தேவாரத்தினும் அப்பர் பெருமான் அருளியதையும் இங்கே தருவாம்.

திருச்சிற்றம்பலம்

முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையு மத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றுள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே.

திருச்சிற்றம்பலம்

ஆன்மாவினைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் அகத்துறையில் இப்பாசுரம் அருளப்பெற்றது. ஆன்மா பசு பாச சம்பந்தம் நீங்கி, இருவினையொப்பும் மலபரிபாகமும் அடைந்து திருவடிப் பேறு அடையும் என்பதே சித்தாந்தமாகும்.

திருவளர் தாமரை சீர்வளர் காவிக
ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்
கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கியன
நடைவாய்ந்
துருவளர்காமன்றன் வென்றிக்கொடிபோன்
றொளிர்கின்றதே.

இக் காட்சித்துறையில் எல்லா நிலங்களுக்கும் பொருந்திய மலர்களைக் கூறவே நிலமயக்கம் கூறியதாகும். ஒவ்வோர் நிலத்தினரும் அநுபவிக்கும் இன்பங்களைத் தில்லைத் திருப்பதி வாழ்வார் அன்னுழி இருந்தே துய்ப்பர் என்பது புலனும். புலனாகவே இம்மை இன்பத்திற்குப் புலியூரே காரணமாகும் என்பது கருத்தாம். ஈசர் தில்லை எனவே மறுமை இன்பத்திற்கும் அவ்விடத்து அமரும் இறைவரே காரணராவர் என்பதாயிற்று. அமிர்தஸ்ய ஈசாந என்பர் வடநூலார். "எந்தையீசன் எம்மான்" என்றார் பாலறுவாயடிகள். அழகிய ஒரு பொருள் கண்டாரை வசீகரிக்குமன்றோ! திரு என்பது இயற்கை அழகைக் குறித்தது. கண்களுக்கு அழகுதான் விருந்தளிக்கும். "ஊனக்கண் பாசம் உணரா: ஞானக்கண்ணல் நாடு" என்பது எளிதில் காண்டல் ஆன்மாவுக்கு இயலாது என்பதே. அவனருளாலே உள் நாடுஞ் செயல் தோன்றும் என்பது; இனி தாமரை மருத நிலத்துப் பூவாதலால் மருதமும், நெய்தல் நெய்தல் நிலத்துப் பூவாதலால் நெய்தல் நிலமும் குமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைநிலத்துப் பூவாதலால் முல்லையும், கோங்கு பாலைநிலத்துப் பூவாதலால் பாலையும், காந்தள் குறிஞ்சி நிலத்துப் பூவாதலால் குறிஞ்சியும் ஆகிய ஐவகைத் திணையும் ஒருங்கே இக்கவியிற் போதரும்.

"உருவளர் காமன்றன் வென்றிக்கொடி' என்றதனால், அன்பினாலே நிகழ்ந்த காமப் பொருளைக் குறித்தார். யாருங் கேட்போரின்றித் தன் னெஞ்சோடு கிளந்தமையின் கந்தருவ ஒழுக்கத்தைையே ஒத்த களவொழுக்கத்தையே சுட்டினார். ஈசர்தில்லை என்றமையால் வீடுபேற்றின் பயத்தது என்பதாம்.

தில்லைமூதூர்ப் பொதுவினிற் றேன்றி
எல்லையி லானந்த நடம்புரி கின்ற
பரம காரணன் றிருவரு ளதனால்
திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கையிகந் தறிவா யறியாச்
செம்புலச் செல்வ ராயின ராதலின்
அறிவனூற்பொருளுமுலகநூல்வழக்குமென
இருபொருளு நுதலி யெடுத்துக் கொண்ட
ஆங்கன் இரண்டனுள் [னர்.

ஆகம நூல்வழியி னுதலிய ஞான
யோகநுண் பொருளினை யுணர்த்துதற்கரி(து)
உலகநூல் வழியி னுதலிய பொருளெனும்
அலகில் தீம்பாற் பரவைக் கண்ணெம்
புலனெனுங் கொள்கலன் முகந்த வகை
உலையாமரபின் உரைக்கற்பாற்று. [சிறி(து)

எனவே அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருளினும் இன்பத்தை நுதலி இத்திருக்கோவையாரின்க ணுரைக்கின்ற களவியற் பொருளினது பொழிப்பிலக்கணத்தையும் அதற்குறுப்பாகிய கைக்கிளைத் திணையின்கண் முதலிலமைந்த காட்சி என்னும் ஒருதலைக் காமத்தியலையும் உடனிலைச் சிலேடையாக அருளிச் செயப்பெற்றவாறு காணலாம்.

இங்கே சராசரங்களுக்கு முதற் காரணராவர் சிவபெருமானே என் பது பரம காரணர் என்பதனால் விளக்கியது. மாயை முதற் காரணமாகவும், சிவசத்தி துணைக் காரணமாகவும், சிவபெருமான் நிருத்தகாரணராகவும் சொற் பிரபஞ்சமும். பொருட் பிரபஞ்சமும் தோன்றி நின்று நிலவுகின்றமையறிக. [1]ஸ்தாலீபுலாக நியாயம் பற்றிநின்று சில காட்டப்படுமாதலின் விரிவு கூறிற்றிலம். திருக்கோவையாராகிர பெரிய அரிய வீட்டு நெறிப்பாலதாகிய சமுத்திரம் முற்றும் அகஸ்தியருக்கே அடக்கமுடியும். [2]சமுத்திரகலச நியாயம்பற்றிச் சில இன்னும் கூறுவாம், தெய்வத்தை மகிழ்தல்.

வளைபயில் கீழ்கட லின்றிட மேல்கடல்
வா னுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்
தொல் லோனகயிலைக்
கிளைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணி
யைக் கொண்டுதந்த
விளைவையல்லால் வியவே னயவேன் தெய்வ
மிக்கனவே.

புறநூலார்,

'பரவை வெண்டிரைப்படு வடகடலி னடுவ
ணிட்டதோர் தோன்கழி, தென்கடலிட்ட
தோர் நுகத்துளையுட்செறிந்தென"என்
றூர். இது பிறப்பருமை கூறிற்று.

வினையானே யாவும் எய்தல் வீறு சேர் திருவள்ளுவர் கூறுமுகத்தானுமுணரலாம்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்.

1. ஸ்தாலிபுலாக நியாயம் = ஒரு பானை சோற்றில் ஒரு அவிழ்பதம்பார்த்தல் போன்ற நெறி.
2. சமுத்திர கலச நியாயம் = பெருநீர் நிலையில் ஒரு கெண்டியால் சிறிது சிறிதாக மொள்ளுவது போன்ற நெறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தார்க்கு முணர்வரியோன் தம்மையுணர்ந்து தலைவன்றாள் தலைப்படு நிலையினின்றார்க்கும், அவனருள் கூட்டாவழி உணர்தற்கரிய பெருமான் என்றுரைப்பது பொருத்தம். எனவே, உண்மைச் சிவஞானத்தின் வழித்தாகப் பேரின்பு கைகூடும் என்றவாறும். "போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றியுடனுனர்" என்பதனாற் கண்டாம்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னும்செம்பொருள் காண்பதறிவு"

என்பது பொய்யாமொழி.

பாங்கரு வினைதலில் தீந்தமிழ் மாட்சியுங் காணலாம்

"துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்சுவையே"

என்பது குமரகுருபரர் திருவாக்கு.

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்து
மென்சிந்தை யுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலி னய்ந்தவொண்
டீந்தமிழின்
துறைவாய்நுழைந்தனையோ வன்றியேழிசைச்
சூழல்புக்கோ
விறைவா! தடவரைத் தோட்கென் கொலாம்
புகுந்தெய்தியதே."

இங்கே அகமும் புறமுமாகிய பொருட் பாகுபாட்டையே துறை என் என்றார். மதுரையிற் சங்கமிருந்தமையும் இதனல் அறியலாம், ஏழிசை குரல், துத்தம், கைக்கிளை முதலாயின. பண்ணும் பாடலும் பண்டுமுண்டாந் தன்மை சூழல் என்பதனல் அடங்கிற்று. மெய்ப்பாடு அணங்குபற்றி வந்த அச்சம்.

அணங்கே விலங்கே கள்வர் தம்மிறையெனப்
பிணங்கல் சாலா வச்சம் நான்கே.

இது உரையாசிரியர் காட்டிய சூத்திரம்.

பின்வரும் துறைகள் தோறும் இறைவனது வீரட்டங்களும், முழுமுதன்மையும் மிளிர்கின்றன. பல்லோர்க்கும் பரிசில்பல நல்கி ஊரன் உவக்கவைகியதைக் காட்டிச் செம்பொருள் நாடலை நிறைவுசெய்வாம். ஊரன் வேண்டாமைக் கொடுத்தலின் காரோடு நிகர்க்கும்; வேண்டக் கொடுத்தலின் கற்பகத்தோடொக்கும்; நுட்பமான கல்வியுடையனகலின் கற்றவர்க்கு நல்ல உசாத்துணை; இசையுணர்வாலும் கெழுதகைமையினலும் பாணர்க்குச் சுற்றத்தோ டொக்கும்; நினைத்தவைகளைக் கொடுத்தலிற் சிறப்பமை சிந்தாமணியோடொக்கும்; அழகிய தில்லைக்கண் சிவனது திருவடிக்குத் தாராகி அவனல் அணியப்படும் கொன்றைப்பூவின் றன்மையை யுடையன்; சான்றோர்க்குத் தொலையாத நிதியாயிருத்தலின் சங்க நிதியோடொக்கும்; நண்பர்க்கும் பகைவர்க்கும் தப்பாது பயன்படுதலின் விதியோடொக்கும்; சுற்றத்தார்க்கு அவர் வேண்டிய செய்யவிருத்தலின் அண்மையிலுள்ள ஊருணியோடொக்கும் அதனல் வரைவின்றி எல்லார்க்கும் இவன் பெறும் பயன் நயக்கத்தக்கதாம்.

காரணி பற்பகங் கற்றவர் நற்றுணை
பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணிதில்லைச்சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோரதஞ்
சங்கநிதிவிதிசே
ரூருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கு
மூதியமே.

பரம்பொருளையே பாடிய மணிவாசகப் பெருமான் திருவாசகத்தின் ஒப்புயர்வற்ற பெருவாசகப் பொருள் நடராஜப் பெருமானே என்றுரைத்து ஆனி மாமகத்தில் இறைவனுடன் இரண்டறக் கலந்தருளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயத்தையும் செந்தமிழையும் மெய் வழிபாட்டால் பாதுகாத்தவர்கள் சமய குரவர்களே! நாங்களும் (சைவசமயிகளாகிய) எல்லோரும் நால்வர் சொன்னபடி ஒழுகுவதே நன்மையாகும். சைவசமயிகள் என்று திருநீறு இடாதாரும், போலி வேடத்தில் மறைந்து நின்று எல்லாம் ஒன்று என்பாரும் ஒரு காலத்திலும் நற்கதி சேரமாட்டார். சைவசமயம் சிவசம்பந்தமானது. இச் சமயப் பேரை மாற்றி வேறு புனைபெயரிட்டு மாயாவாத நிலையில் நிற்போர்க்கும், பிறந்திறப்போரைப் பெருந்தெய்வமென்போர்க்கும் அஞ்சிச் சிவசன்மார்க்க சீலர்களாக வாழ்வோமாக. மணிவாசக சங்கமும் பல்லாண்டு வாழ்க.

சுபம்.

## செந்தமிழ் சிறந்து வாழ்க!

திருச்சிற்றம்பலம்.

புற்றில் வாளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யுமஞ்சேன்
கற்றைவார் சடையெம்மண்ணல் கண்ணுதல் பாதம்நண்ணி
மற்றுமோர் தெய்வம் உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலாதவரைக் கண்டாலம்ம நாமஞ்சு மாறே.

திருச்சிற்றம்பலம்.

வாழ்த்து

மாணிக்க வாசகப்பேர் மன்னு முயர்சபையும்
பேணி வளர்க்கும் பெரியோரும் — ஆணிப்பொன்
அம்பலவ ராரருளால் பண்பாகப் பல்லாண்டு
இம்பரினில் வாழ்க! இனிது.

சுபம்.

திருவைக் கோவைக்குங் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே யென்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற் கலந்திருந்து அருமைத்திருக்கையா லெழுதினர். அப்பெருமையை நோக்காது சிந்தாமணி சிலப்பதிகாரம்............ முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோ டொன்றுக்குவர்................. தேவாரம் திருவாசகம் ............... முதலிய இலக்கியங்களையும் ஒரு பொருளாக எண்ணுது ................... நளன் கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக வெண்ணி வாணுள் வீணுள் கழிப்பர். அவர் இவைகள் இருக்கவே அவைகளை விரும்புதலென்னெனின் பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலை விரும்பாது வேறுபலவற்றை விரும்புதல்போல அவரதியற்கை யென்க.

ஸ்ரீ சுவாமிநாத தேசிகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை"

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

'வேதநாயகனே போற்றி' என்ற பாடலில், 'மறு சமயங்கள் மாளப் பேதகஞ் செய்வாய் போற்றி' என்று வருகின்றது.

'ஈசுவரன் மறுசமயங்கள் மாளப்' பேதகஞ் செய்பவன். புறமாகிய நெறிகளிலே சென்று வீழாமல், அந்நெறிகளிற் செல்லுஞ் செலவு மாளும்படி, திருவருளினலே நம்மைப் பேதிப்பவன். அவன்

"எத்திறம் நின்ருன் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள்"

ஆகையினலே, ஈசுவரியும் பேதிப்பவள்.

"ஓடிமீள்க என ஆள்தல்பார்த்து இருப்பவன்" அவன். அவன் குறிப்பின் வழி, அதற்குப் பக்குவம் பண்ணிக் கொண்டிருப்பவள் அவள். அந்த ஈசுவரி நமக்குத் தாய்; உலகமாதா அவள். அவளுக்கு மணிவாசகப் பெருமான் வழங்கியதொரு திருநாமம் 'பெய்வளை'. பெய்தல் – அணிதல். வளையலையணிந்த திருக்கரத்தை உடையவள் என்பது பொருள். "நெறியல்லா நெறிதன்னை நெறியாக" நினைந்து, அவைகளை அணைந்து, 'சிறுநெறிகள் சேராமே' நம்மைப்பேதித்து, எடுத்த திருக்கை அவள் கை.

'புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப்
பறவையாய்ப் பாம்பாகி'க்

கிடந்து உழன்ற நம்மை, இந்நிலைக்கு வளர்த்து எடுத்தகை அவள்கை. அதனலே, அவள் 'பாதத் திறம்பாடி' ஆடுதற்கு முன் அவளுடைய அருட்கை விதந்து பேசப்பட்டிருக்கின்றது.

நாமோ மலபந்தர்களாயிருக்கின்ரேம். மலம் – அழுக்கு. அறியாமையாகிய அழுக்கு நம்மைப் பந்தித்து, நம்மை அணுப்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆன்மா சார்ந்ததன் வண்ணம் ஆனது; அருளைச் சார்ந்து அருண்மயமாய் எங்கும் வியாபகமாய், அருளை அநுபவிக்கக்கூடியது. இப்பொழுது இருளாகிய அழுக்கோடு கூடி இருண்மயமாய் இருளை அநுபவித்துக்கொண்டு, 'தானென ஒரு பொருள் உண்டோ' என்ற விசாரமும் இன்றித் தன்னளவில் இல்பொருளாய்க் கிடக்கின்றது. அவள் 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி'. அநுக்கிரகித்தலையே இயல்பாக உடையவள் அவள். அதனலே அவள் 'தருஞ்சத்தி' எனச் சிறப்பிக்கப்படுபவள். தருதல் – அநுக்கிரகித்தல்.

அநுக்கிரகித்தலை இயல்பாக உடைய அன்னை, தன்னைச் சார்ந்தன்றி இயங்குதல் ஆகாத ஆன்மா, அழுக்கோடு கூடி அணுப்பட்டுக் கொண்டிருப்பதை எங்ஙனம் சகிப்பாள்! அவளுடைய சகிக்காமை அலைதாவது அநுக்கிரகியாமலிருக்க முடியாமை, நமது மலபந்தத்தைச் சதா பேதித்துக்கொண்டே இருக்கின்றது. அநுக்கிரகமாகிய அந்தப் பேதிப்பின் இயல்பை உணராது, சிலசமயங்களில் அந்த அருண்மாதாவை நாம் நிந்தித்தலுஞ் செய்து விடுகின்ரேம்.

'நல்ல சிவனுர் நம்மை வருத்துவது
கொல்ல வல்லக் கொல்ல வல்லப்
பொல்லாப் பிணி போக்க'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை மறந்தே விடுகின்றோம்.

'குன்றுமுட்டிய குரீஇப்' போலே, நெறியல்லா நெறியிற் சென்று, முத்தி நெறியறியாத மூர்க்கர்களோடு இணங்கி, மோதிக்கொள்ளாத பிரகாரம் அவள் பேதித்துப் போதிக்கும் பாடங்களை, அந்த அந்தப் பாட நேரத்திற் பயில்கின்றோமில்லை. படு மந்தர்களாய் இருக்கின்றோம்.

ஒரு தாய் தன் குழந்தை நெறியல்லா நெறியில், தன்னைக் கேளாது, சொல்வழி கேளாத பிள்ளையாய்ச் சென்றபோதுங் கைவிடுவது இல்லை. அவனை நல்வழிப் படுத்திச் சொல்வழி கேட்கிறதொரு நல்ல பிள்ளையாக்கும் பொருட்டு, அவன் செல்லுகிற கல்லு வழி முள்ளுவழிகளிலும் அவனைப் பின் தொடர்ந்தே செல்லுவாள். அவனோ சொல்வழி கேளாமல் முன்னே நடப்பான்; தாய் பின்னே தொடர்வாள். தாயை முன்னிட்டுத், தான் அவளைத் தொடர்ந்து பின்னே செல்ல அவன் உடன்படான். தனக்கு வழி தெரிந்தவன்போல, வழி தெரிந்த தாய்க்குமுன்னே நடப்பான் அவன். தான்செய்யும் பிழையை அவன் உணரான்; அழுக்கு உணரவிடாது.

சிருட்டி ஆரம்பந் தொடங்கி ஒரு ஆன்மா, திருவருளாகிய தாயைமறந்து அவள் பின்னே தொடரத் தான் தன் போக்கில் முன்னே சென்ற வழியை இரேகைமூலம் வரைந்து பார்த்தால் வெகு விநோதமாயிருக்கும். மருத்துவ விடுதியில் சுரநோயின் ஏற்றம் இறக்கங் காட்டும் இரேகைபோலே, புல்லிலிருந்து தேவர்வரை, தேவரிலிருந்து புல்லுவரை, நரகத்திலிருந்து சுவர்க்கம்வரை, சுவர்க்கத்திலிருந்து நரகம் வரை நெளிந்தும் வளைந்தும், ஏறியும் இறங்கியும், நீண்டும் சுழன்றும் செல்வதாயிருக்கும் அந்த ஆன்ம ரேகை; அஃதாவது பந்த ஆன்மா தன்போக்கில் சென்ற வழி.

ஒரு நாள் இந்த ஆன்மா போதிய பாடங்கள் படித்து 'என்செயலாவது யாதொன்றும் இல்லை' என்று எண்ணித் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாகித், தன்னைப் பின் தொடருகின்ற – தன்னை வளர்த்தெடுத்த – பெய்வளையாகிய உலகமாதாவைத் திரும்பிப் பார்க்கும்; அப்பொழுது 'எல்லாம் அறிந்த தாய்க்கு முன்னே சொல்வழி கேளாதே நடந்தேனே' என்று நாணம் தலைக்கொள்ளும்; என் நினைந்து என்செய்தேன் என்றழும்; 'உள்ளந் தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகும்'. தாயை முன்னிட்டுத் தான் பின் தொடர முயலும்.

'வேகங் கெடுத்தாண்ட
வேந்தனடி வெல்க' என்கின்ற

நிலையை எய்தும். திருவருளாகிய தாய் ஈசுவரனின் திருவடியாயிருக்கின்றாள். முன்னே செல்ல விரும்புவதாகிய ஆத்ம வேகத்தை மெல்ல மெல்லப் பேதித்து, ஆண்டு அடிமை கொள்வது இறைவன் அடி. அதுதான் 'தனக்குவமை இல்லாதான் தாள்'. அந்தத் தாளே திருவருளாகிய தாய்.

என்றைக்கு ஆத்மா தன் வேகந் தணிந்து, வேந்தனடியை முன்னிட்டுத், தான் பின்தொடரத் துணிகின்றதோ, அன்றைக்கே அது உடன் போக்குக்கு உடம்பட்டதாம். உடன் போக்காவது, களவு நிலையிலிருந்த ஒருத்தி, அது முதிர்ந்து, ஒருவனைத் தொடர்வதாம். ஒருவன் ஆவான், 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனே சர்வலோக நாயன். ஒருத்தி யாவாள் களவு முதிர்ந்த ஆத்மா. களவின் முதிர்வு – கற்பு.

சரியை கிரியை என்ற வரிசையில் உடன் போக்கின் ஆரம்பம் சரியை; அஃதாவது திருவருளைத் தொடர்ந்து நடக்கத்துணிவது. அதுவே, சமயத் தின் தொடக்கம்.

ஒருவன் எப்பொழுது சமயி ஆகின்றானோ, 'வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி' வெல்லுதற்கு உடம்படு கின்றானோ, அந்தப் பொழுதுதான் பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை வென்றி எய்தியபொழுது; ஆத்மா உய்தி கூடிய பொழுது,

'பித்தன் என்றெனை உலகவர்
பகர்வதோர் காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும்
உபாயம தறியாமே
செத்துப் போய் அரு நரகிடை
விழ்வதற் கொருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன்
அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே'.

---

In the deepest sense, therefore, the prayer of the devout soul is God's own prayer; it is the great God praying through the small heart and weak mouth of man; "the tongue itself", says Manikkavachagar "which cries to Thee, nay all the powers of my being which cry to Thee, all are Thine". — *Friedrich Heiler.*

ஆழநோக்கில் கனிந்த உள்ளத்தின் வேட்கையும் இறைஞ் சுதலும் இறையின் இறைஞ்சுதலேயாகும். எல்லாம் கடந்த பரம்பொருள் மனிதனின் எளிய நாவின் வாயிலாகவும் தனது பிரார்த்தனையை நிகழ்த்துவிக்கின்றது.

"கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ" என்று மாணிக்கவாசகர் கூறும் பகுதியினால் தெரிகிறது.

— ஃப்ரேடிறிக் ஹெய்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வேண்டத்தக்க தறிவோய் நீ"

மு. ஞானப்பிரகாசம், B. A., B. Sc.

தமிழ்மக்களுக்கென ஒருஉயர்ந்த தத்துவதரிசனமுண்டு. அது சைவசித்தாந்ததரிசனமெனப்படும். பாசதரிசனம், பசுதரிசனம், சிவதரிசனம் என ஏதுவும் பயனுமாய் நிகழும் மூன்று தரிசனங்களைப்பற்றிக் கூறுதலின் அது 'பதி பசு பாசதரிசனம்' என்று கூறவும்படும். இந்தத் தரிசனங்கள் எங்கள் ஆன்ம அறிவின்கண்ணே நிகழ்வன. அநுபவத்தில் வந்து வாய்ப்பன. பாசதரிசனம்பெற்ற பல்லாயிரம் தத்துவஞானிகளுள் ஒருவரே பசுதரிசனம்பெறும் தகுதி அடைகிறார். அங்ஙனம் பசுதரிசனம்பெற்ற பல்லாயிரவருள் ஒருவரே சிவதரிசனம் பெறும் தகுதி அடைகிறார். அங்ஙனம் சிவதரிசனம் பெற்ற சிவஞானிகள் பலருள், தன்போதமுனைப்பெழாது, தன்முதன்மையில் நீங்கி, எல்லாம் சிவன் செயல் எனக்கண்டு, இறைபணியில் வழுவாது நின்று, சிவானந்தத்தில் அழுந்திநின்றவர்கள் எங்கள் மணிவாசக அடிகள். சிவானந்தத்தில் அழுந்திநின்ற அடிகளின் பாடல் எதுவாயினும், அது சிவானந்தத்தேனேயாகும். அடிகள் அருளிய திருப்பாடல் ஒன்று வருமாறு.

"வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்டமுழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கரியோய் நீ,
வேண்டி என்னைப் பணிகொண்டாய்,
வேண்டி நீயாதருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்,
வேண்டும்பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே"

**கருத்துரை:-** அடிகளின் கருவிகரணங்களெல்லாம் சிவகரணங்களாகமாறித் திகழ்கின்றன. அக்கருவிகரணங்கள் வாயிலாகத் தொழிற்பட்ட அடிகளின் பண்டைய இச்சாசக்தி இப்பொழுது ஈசன்பால் முதிர்ந்த அன்பாய்ப் பிரவாகித்துப் பாய்கின்றது. இந்த நிலையின்கண் அடிகளின் அன்புநிறைந்த உள்ளத்தில்—ஒருணர்வு—ஒரு பேருணர்வு 'எனக்கெனச் செயலில்லை எல்லாம்சிவன்செயல்'எனவெழ, சிவாநுபநுகர்ச்சியில் அழுந்தி, அதன்கண் எழுச்சிமீதூரப் பெற்றாராய் நின்று அடிகள் அருளிச்செய்தருளிய பாடல்இது.

**உரை:-**

வேண்டத் தக்கனவற்றை யெல்லாம் அறிந்து அருள் செய்பவரும், வேண்டுதல்செய்யும் அடியவர்களுக்கு அவர்கள் வேண்டியவற்றை எல்லாம் தந்து நிற்பவரும், அடிமைத்திறன் என்பதின்றி வேண்டுதல் செய்யும் அயன் திருமால் என்பவர்க்கு அரிதாயிருப்பவருமாகிய தேவரீர்! நாயினேனை விரும்பி, வலிய வந்து ஆட்கொண்டு அடிமையாக ஏற்றருளினீர். அதனால் தேவரீர் விரும்பி எதனை அருள் செய்கின்றீரோ அதனையே அடிமையாகிய யானும் விருப்பத்துடன் வேண்டுகின்றேன். இவ்வாறின்றி அடிமையாகிய யான் விரும்ப வேண்டியது இயல்புதானே எனில், அதுவும் உண்மையாகவே தேவரீரின் விருப்பமாகுமன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரிவுரை:-**

முதல்வன் உயிர்கள்மீது கொண்ட விருப்பத்தை இச்சாசக்தி என்பர். முதல்வனது ஞானசக்தி, கிரியா சக்தி என்னும் இரு சக்திகளின் தொழிற்பாட்டுக்கு அது நிமித்தமாகலின், அதனை 'துவிநிமித்த ஏகமோஹம்' எனச் சுருதிகூறும். முதல்வன் உயிர்கள்மீதுகொண்ட விருப்பத்தைத் திருவருள் எனக் கூறுதல் சைவத்தமிழ் மரபு. கருவிகரணங்களோடு கூடிவாழும் பந்தநிலையிலும்சரி, கருவிகரணங்களிலிருந்து நீங்கி திருவருட்சார் புணர்ந்து வாழும் முத்திநிலையிலும் சரி, உயிர்களுக்குத் தாரகமாயிருந்து உபகரித்து நிற்பது திருவருளேஎன்ற உண்மையை—'பந்தநிலையில்—வேண்டத்தக்க தறிவோய் நீ' என்றும் 'பந்தம் நீங்கிய நிலையில்—வேண்டமுழுதும் தருவோய் நீ' என்றும் அடிகள் கூறியருளினர். அயன் திருமால் முதலிய பெருந்தேவர்கள் பல்லாற்ருன் முயன்றும் அவர்கள் காட்சியில் அகப்படாத இறைவன், 'என்னை விரும்பித் தேடி வலியவந்து ஆட்கொண்டருளினன். என்னைத் தன்வசப்படுத்தி யான் தனக்கு பணிசெய்யுமாறும் வைத்தனன். யான் செய்த பணியை உவந்து ஏற்றும் அருளினன்' என்பவை எல்லாம் தோன்ற 'வேண்டி என்னைப் பணிகொண்டாய்' என்றருளினர். தான் தன் அன்பிறைற் சென்று பற்றுதற்கும் விடுதற்கும் அவரையின்றி ஒன்றுமில்லையென்றும், எல்லாம்அவர்செயலேயென்றும் முதிர்ந்த சிவானுபவ நுகர்ச்சியில் திளைத்தருளாநின்ற அடிகள்

'வேண்டிநீ யாதருள்செய்தாய்
யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே'

எனக்கூறி சைவசித்தாந்த மூலஉண்மையை அறிவுறுத்தியருளினர்.

**முடிவுரை:-**

இந்நாட்டுத்தமிழ்மக்கள் 'ஆத்மநிவேதனம், பயின்று வாழவேண்டிய காலம் இது. மணிவாசக அடிகளின் 'ஆத்மநிவேதன முதிர்ச்சியில் எழுந்த பாடலிதனை, நாமெல்லாம் படித்துச் சிந்தித்துத் தெளிந்து இன்புற்றுவாழ வேண்டும் என்பதே எம் விருப்பமாகும்.

சித்தாந்த சாத்திரக் கருத்துக்களையெல்லாம் அன்பினைந்திணை ஒழுக்கவாயிலாக வெளிப்படுத்துந் தூய தமிழ் மரபு பேணி அடிகள் திருவாசகத்தையுந் திருக்கோவையாரையும் அருளிச் செய்தாரென்பதற்கு நூலுட்பல சான்றுகள் புலனாகின்றன.

பிரமஸ்ரீ க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணுதலும் பேணுதலும்

வித்துவான். க. கார்த்திகேசு, B. A.

## 1. கட்டுரையின் நோக்கம்

சைவ உண்மையைத் தெரிந்து பிறருக்குத் தெரிவிக்குந் தொழிலில் ஈடுபட்ட சைவசமய நாயன்மார் நால்வருள் மாணிக்கவாசக சுவாமிகள் ஒருவர். இவர் பாடியருளியவற்றைத் திருவாசகம் என்றும் ஏனைய மூவர் தமிழைத் தேவாரம் என்றும் சொல்லுகிறோம். குரவர் என நாம் கொண்டாடத்தக்க முறையில் மணிவாசகப் பெருமான் தமிழ் மக்களாகிய நமக்குச் சைவத்தைப் பற்றிப் படிப்பிக்கும் உண்மைகளுள் இரண்டொன்றை ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கம். கற்றறிந்த சிலருக்குப் பயன்பட எழுதவேண்டுமென்பது என் நோக்கம் அல்ல. கல்வியறிவில்லாதவரும் அற்ப கல்வியுடையவரும் சைவ சமயத்தின் பரும்படியான உண்மைகளைக் காணவேண்டும்; கண்டு தம் வாழ்நாளில் அவற்றைப் பேணவேண்டும் என்பதே என் அவா.

## 2. காணுதல்—அறிதல்

ஒருவரைப்பற்றி அல்லது ஒரு பொருளைப்பற்றி நன்றாய்த் தெரிந்த ஒருவர் தெரியாத ஒருவரோடு பேசும் போது, "கண்டியே, பார்த்தியே, கேட்டியே" எனத் தொடங்கிப் பேசுதல் வழக்கம். காணலும் கேட்டலும் இங்கே கண்டு அறிதல், கேட்டு அறிதல் எனப் பொருள்படும். திருவள்ளுவர் பல இடங்களில் 'காட்சியவர்' என்னுஞ் சொல்லை 'அறிவுடையோர்' என்னும் பொருளில் ஆண்டிருக்கிறார். இக்கட்டுரையிலும் 'காணல்' என்னுஞ் சொல் 'அறிதல்' என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. சைவ நாயன்மார் தாம் பாடியருளிய தேவார திருவாசகங்களில் உயிரானது தன்னையும் தன்னை உய்விக்கும் ஆண்டவனையும், தன்னைச் சிறுமைப்படுத்தும் மலத்தையும் காணும் (அறியும்) விதத்தை நன்றாய் விளக்கியிருக்கிறார்கள். "காண்பார் ஆர் கண்ணுதலே காட்டாக் காலே," எனத் தேவாரத்துள் விளக்கப்பட்டதுபோல மணிவாசகப் பெருமானும் தமிழ்நாட்டவர்க்கு வற்புறுத்திப்போனதை நாம் நன்றாய் உணரல்வேண்டும்.

## 3 காரைநகரார் தொண்டு போற்றற்குரியது

மேலே கூறிய உண்மையைத் தெளிய உணர்ந்தால்தான் சைவசமயத்தின் உயிர்நிலையைக் கண்டு மகிழலாம். சைவ நாயன்மார் நால்வரும் சைவத்தைப் பரப்பியது புத்தம் சமணம் முதலிய சமயங்கள் தமிழ் நாட்டிலே தலையெடுத்த காலத்துக்குப் பின்னாதலின் அந்தச் சமயக் கொள்கைகள் நன்றாய் ஆராயப்பட்டதையும் அவற்றில் குறைபாடு கண்டதையும் வெளியே சொல்லிப்போயிருக்கிறார்கள். சொல்லிய இடங்களைத் தமிழ் அறிந்தவர்களும் கண்டுபிடிப்பதில்லை, கண்டு பிறருக்குச் சொல்லுவதுமில்லை. இதனாலே சைவத்தின் சிறப்பைத் தமிழராகிய நாம் பல நூற்றாண்டுகளாய் அறியாது வந்திருக்கிறோம். சைவசமய நூல்களைப் படித்தலும் பேசலும். கள் முதலியன குடித்து வெறித்தல்போலும் எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் தமிழ்நாட்டிலும் இந்நாட்டிலும் சொல்லி வருகிறார்கள். இந்நேரத்தில் காரைநகர் மக்கள் விரிவுரைகள் நிகழ்த்துவித்தும் கட்டுரைகள் வெளிப்படுத்தியும் சைவத்தின் மாட்சியைப் பொதுமக்களுக்கு அறிவிக்கப் பாடுபடுவதை நாம் மிகவும் மெச்சுகின்றோம்.

### 4. காணல்—இதைப்பற்றிச் சைவத்தின் கொள்கை

புத்தமும் சமணமும் உயிர் தன் சீலத்தாலும் தவத்தாலுமே உண்மை அறிவு அல்லது மெய்ஞ்ஞானத்தைப் பெறுகின்றதென்ற கொள்கையைத் தம் அடிப்படைக் கொள்கையாக உடையன. இறைவனுடைய உதவியை நாடி நிற்பதின் அவசியத்தை அவை உணரமாட்டா. ஆனால் நம் அருமைச் சைவம் இறைவன் அருளினாலேயே உயிர் மெய்ஞ்ஞானத்தைப் பெறமுடியும் என்பதை அடிப்படைக் கொள்கையாக உடையது. இவ்வாறு யான் கூறுவதினால் புத்தரும் சமணரும் வற்புறுத்திய தவமும் சீலமும் தேவையற்றவை என்று சைவ நாயன்மார் கூறியதாகக் கொள்ளலாகாது. தவமும் சீலமும் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் இறைவன் திருஅருளும் இயைந்த பொழுதே மெய்ஞ்ஞானம் விளையும் என்பது நாயன்மார் கருத்து. உயிர் எவ்வளவு கெட்டித்தனமாய் முயன்றாலும் தன் முயற்சி மாத்திரத்தால் ஈடேறமுடியாமற் கிடந்து திருவருளும் கிடைத்தவழியே உய்ய முடிகின்றதென்ற கருத்தே சைவ நூல்களில் வலியுறுத்தப்படுகின்றது. ஆராய்ந்து பார்த்தால் புத்த மதம் முதலியவற்றின் கொள்கைகள் முழுதையும் கூடாது எனத் தள்ளிவிடுதல் எமக்கு நல்லதல்ல. உயிரின் முயற்சியைப் பெரிதாக ஒரு சமயமும், இறைவன் திருவருளைப் பெரிதாக மற்றதும் கூறுகின்றதென் றுணரவேண்டும். இவ்விரண்டின் இயைபையும் விளக்குதற்கு ஓர் உதாரணமாக வீட்டின் சுவரின் யன்னல் வைப்பதை நோக்குவாம். சுவரில் யன்னல் வைப்பது நம் சொந்த முயற்சியாலாகும். அந்த யன்னல்வழியாகக் காற்று வருவது நஞ்செயல் அல்ல—யன்னல் வைப்பதோடு விஷயம் முடியவில்லை—காற்று வீசும்போதுதான் யன்னலின் பயன் புலப்படும். ஆனபடியால் சைவத்தின் சிறப்பை நாம் போற்றவேண்டும்.

### 5. முதற் காணுதற்கும் இறைவன் அருள் அவசியம்

உயிர் உண்மையைக் காண்பதற்குத் திருவருள் உதவி வேண்டும் என்ற சைவக் கொள்கைகள் நம் சைவ நூல்களில் பல இடங்களில் வருகின்றனவெனினும் நாம் எல்லாம் அதை விளங்கியிருக்கிறோம் என்று சொல்ல முடியாது. விளக்கினால் விளங்கத்தக்கவற்றுள் இது ஒன்று. இப்படிச் சொல்லுவதால் எல்லார்க்கும் எல்லாவற்றையும் விளங்கப்படுத்தலாம் என்பது என் கருத்தல்ல.

மாணிக்கவாசகப் பெருமானுக்கு ஞானம் கைகூடிய விதத்தை உற்று நோக்கின் மேலே கூறிய உண்மை நன்றாய் விளங்கும். முதன் மந்திரியாக விளங்கிய மணிவாசகப் பெருமான் கல்வி கேள்விகளில் ஒப்புயர்வற்றவர் என்பது சொல்லாமலே விளங்கும். அங்ஙனம் விளங்கிய அவர் திருப்பெருந்துறையில் குருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தின்கீழ் எழுந்தருளிய குருவைக் கண்டபின்பே விஷயமெல்லாம் விளங்கியதாகக் கூறியருளுகின்றார். குருவைக் காணுமுன் வாழ்க்கை உள்ளீடு உடையதாயும் கண்டபின் வாழ்க்கையின் மாயமெல்லாம் நன்றாய் விளங்கியதாகவும் கூறுகின்றார். வாழ்க்கையிலுள்ள இன்பங்களை யெல்லாம் ஆழமுகந்து பின் அவை பயனற்றவையென்று தாம் கண்டது தமது அறிவினாலன்றி இறைவனது திருவருளினாலேயே என்று அவர் கூறியதை விளக்கும் திருவாசகம்:

சென்னிப்பத்து

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்திடாவகை நல்கினான்
வேய தோளுமை பங்கன் எங்கள்திருப்
பெருந்துறை மேவினான்
காயத் துள்ளமு தூறஊறக் கண்டுகொள்
என்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக் கண்ணம்
சென்னிமன்னித் திகழுமே.

என்பதாம்.

இப்பாட்டில்மெய்யுடையதென்று வாழ்க்கையைத் தாம் மதித்த அவர் குருவைக் கண்டபின்பு வாழ்வு மாயமுடையதென்று மதியாது நின்றதுக்குக் காரணம் திருப்பெருந்துறையில் பொருந்திய இறைவன் திருவருள் என்றதை 'நல்கினன்' என்னுஞ் சொல்லால் விளங்கவைத்தார். தாம் குருவைக் காணும்முன் மூர்க்கனாயிருந்தது மாத்திரமன்றி முத்திநெறியறியாத மூர்க்கரொடு ஒத்துழைத்ததாகவும் கூறுகின்றார். குருவைக் கண்டபின் மலந்தீர்ந்து சிவத்தோடு ஐக்கியமாம் பேறு தமக்கு இறைவனால் கிடைத்தது தம் தவம் சீலம் முதலியவற்றின் உயர்ச்சியே யென்றும் விளக்கும் திருவாசகம்:

6

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு
முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள்
பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி
எனையாண்ட
அத்தன்எனக் கருளியவாறு ஆர்பெறுவார்
அச்சோவே.

என்பதாம்.

உண்மையைக் காணுவதற்கு இறைவன் திருவருள் உதவியதென்பதை விளக்க இன்னுஞ் சில மேற்கோள்கள் தருகிறேன்.

சிவபுராணம்

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி 1

திருக்கோத்தும்பி

நான்ஆர் என்உள்ளம்ஆர் ஞானங்கள்ஆர்
என்னை ஆர்அறிவார்
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் 2

படைத்தல் காத்தல் முதலிய ஐந்தொழில்களையும் இறைவன் தொழிலென்று நூல்கள் சொல்லும். இவ்வைந்து தொழில்களுள் அருளலும் ஒன்று. பிறப்பதும் இறப்பதும் எங்கள் வசமில்லை. இறைவனாலே நடக்கின்றன என்பதை விளங்குதல்போல மறைத்தல் அருளல் முதலியனவும் அவன்செயல் என்று ஆராய்ந்து உணரவேண்டும்.

வேதம் நான்கையும் நன்றாய்க் கற்றும் உண்மை விளங்காத கவலையினால் இறைவனைக் குறித்துத் தவம் கிடந்த நால்வர் முனிவருக்கு இறைவன் கல்லாலின்கீழ்க் குரு வடிவங்கொண்டு விளக்கிய நுட்பத்தைச் சைவர்கள்விளங்கவேண்டும். பொய்யாகிய வாழ்க்கையைத் திறம்படநடத்துதற்கு இறைவனை வேண்டிக்கொள்கிறோம் நாம். உண்மைச் சைவர்களாய் வாழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினல் நான்கு முனிவர் குருவடிவைக் காண ஆசைப்பட்டதுபோல் நாமும் ஆசைப்பட வேண்டும். நாம் ஆசைப்படும்போது இப்படி ஆசைப்பட வேண்டும் என்று திருஞானசம்பந்த சுவாமிகள் குறிப்பிடும் தேவாரம்:

ஓதி ஆரணம் ஆய நுண்பொருள்
அன்று நால்வர்முன் கேட்க நன்னெறி
நீதிஆல நீழல் உரைக்கின்ற நீர்மையதென்
சோதியே சுடரே சுரும்பமர்
கொன்றையாய் திருநின்றி யூருறை
ஆதியே அரனே ஆமாத்தூர் அம்மானே.

என்பதாம்.

"வேதங்களைப் பலகால் ஓதியும் நுண்பொருள் விளங்கமாட்டாது தத்தளித்த முனிவர் நால்வருக்கும் சிறந்த நெறியாகிய சைவ நீதியைக் கல்லால் நீழலின்கண் அமர்ந்து சொல்லியருளியதென்னையோ? முனிவர் நால்வரும் தாமாக ஒருபோதும் விளங்க மாட்டார் என்று கருதி அல்லவோ நீ அங்ஙன் அருளியது? அப்படியானல் எனக்கும் ஏனைய அடியார்க்கும் அங்ஙனம் குருவடிவாய் எழுந்தருளி உரையாதது ஏனே? ஆமாத்தூரிலும் திருநின்றியூரிலும் கும்பிடுவார்பொருட்டு எழுந்தருளிய ஆதியே, சோதியே சுடரே, சொல்லுவாயாக,"என ஞானத்தின் திருவுருவாக விளங்கிய சம்பந்தப் பெருமான் கும்பிட்டது இந் நினைவோடு என்ருல் நாம் முயலும் வகையும் இப்படி யிருக்கவேண்டும் அல்லவா?

## 6. பலமுறையுங் காண்பதற்குந் திருவருள் இன்றியமையாதது.

உண்மை ஞானம் உயிரின் உள்ளத்தே எப்பொழுதும் பிரகாசித்த படியிராது. இறைவனேடு கூடி இன்புறும் நிலை கிடைத்தாலும் அவ்வின்பத்தை அநுபவிக்கும் ஆற்றல் அதிகமாயிராது இதற்குக் காரணங்கள் பல. கிடைத்த இன்பம் பெரிதென்று நினைத்து அதன் அருமையை அறியும் அநுபவம் இல்லாமை, தானடைந்த பேற்றை மற்றையோரின் பேற்ருேடு ஒப்பிட்டுப் பார்த்துத் தன்னை வியத்தல், நித்திரை, கண்டவரோடு உறவாடுதலால் வரும் மறதி முதலியனவாம். குருவைக் காணும் முன்னுள்ள மனநிலைக்குப் பயிற்சி வயத்தான் இறங்குதலினல் ஒருகால் கண்டவர்க்கும் பன்முறையும் அடுத்தடுத்துக் காணுதல் இயலாதாகும். குருவாய் எழுந்தருளி உதவி செய்தது போலத் தொடர்ந்தும் உதவிகிடைத்தாற்தான் பெரியநிலை கூடும் என்ற எண்ணம் உடையவராய் முயல்பவர்க்கே இறைவனை அணைதல்கூடும். இக்கருத்தை விளக்க இரண்டு திருவாசகங்கள் கீழ் வருகின்றன:

திருச்சதகம்

எய்தலாவ தென்று நின்னை எம்பிரான்
இவ்வஞ்சனேற்கு
உய்தலாவ துண்கண் அன்றி மற்ருெ
ருண்மையின்மையின்
பைதலாவ தென்றுபாது காத்திரங்கு
பாவியேற்கு
ஈதலாது நின்கண்ஒன றும் வண்ணம்
இல்லைஈசனே.

பிரார்த்தனைப்பத்து

கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி ஏசற்றிங்கு
இருத்தல் அழகோ அடிநாயேன்
உடையாய் நீயேஅருளுதி யென்று
உணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்
சுடரார் அருளால் இருள்நீங்கச் [தேன்
சோதி இனித்தான் துணியாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. திருவருளின் துணையின்றிக் காணல் எவர்க்கும் இயலாது

சைவத்திற் பிறந்தும் இறைவன் உதவியின்றி வாழலாம், உண்மை ஞானத்தைப் பெறலாம் என்று நினைத்துச் சமண சமயத்திற் புகுந்து நீண்டகால வாழ்க்கையின்பின் மறுபடி சைவனாய் மாறியவர் திருநாவுக்கரசு சுவாமிகள். சமண சமயத்தின் குறைபாடே சைவத்தின் ஏற்றமாகக் கண்ட சுவாமிகள் பாடியருளிய தேவாரம்:

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி
உழிதந்தென் உள்ளம்விட்டுக்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனே.

என்பதாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் கூறியதுபோல மாணிக்கவாசக சுவாமிகளும் தம் முயற்சியே தம்மை உய்விக்கும் என எண்ணுவார் மெய்ஞ்ஞானத்தைத் தலைப்படார் என்ற உண்மையை வற்புறுத்தியுள்ளார். இதைத் திருவண்டப் பகுதியிற் காணலாம்.

முறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்
[தும்
இத்தந்திரத்திற்காண்டும் என்றிருந்தோர்க்கு
அத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்.

## 8. பேணல்

பொருளைத் தேடி அலைபவர் எல்லாரும் அதனைப் பேணுபவர்கள் அல்ல. தேடும்போதுள்ள ஊக்கம் அதன்பிறகு எங்கேயோ போய்விடுகிறது. அதனாலே பொருள் எல்லாம் விரைவில் தொலைந்துபோக மறுபடியும் ஒருவன் வறியவன் ஆகின்றான். பணத்தைப் பாடுபட்டுத் தேடினதாலும் ஒருபயனும் அவன் அடையவில்லை. பொருளைப் பேணுதல் எவ்வளவு அவசியமோ ஞானத்தைப் பேணுதலும் அவ்வளவு அவசியம். மெய்ஞ்ஞானம் கண்ணப்ப நாயனாரிடத்தேதான் திடீரென ஓங்கி வளர்ந்தது. திருக்காளத்தி நாதரிடத்தே அந்த நாயனாருக்கு உண்டான அன்பு பெருகத் தொடங்கிற்று. ஆர்வம், காதல், வேட்கையாக வளர்ந்தது. அதனாலே அவர் ஆறு நாளில் இறைவனோடு ஒன்றானார். ஆனால் பலரிடத்தே மெய்ஞ்ஞானம் பைய விளையும் பயிரைப்போன்றது. நெல் முளைத்த காலந் தொடக்கம் அறுக்கும் காலம்வரையும் உள்ள காலம் உழவன் விழிப்பாயிருக்க வேண்டியது போல ஞானியும் மெய்ஞ்ஞானம் விளையும் விதத்தை அறிந்து பேண வேண்டியவனாயிருக்கின்றான். பேணுதல் என்பது தானடைந்த இன்பம் தன்னை விட்டு நீங்காதபடி பாதுகாத்தலாம். அவ்வின்பத்தைப் பெருஞ் செல்வமாக மதித்து மேலும் வளர்க்கும் விதத்தையே பேணல் என்று சொல்லப்படும். ஞானத்தைப் பேணும் விதங்களாவன :— ஞான நூல்களை ஓதுதல், அல்லது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் முதலியனவாம். ஓதுதலோடு நின்றுவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார் பேணுபவர் என்று சொல்ல முடியாது. ஒருகால் ஓதியபோதும் என எண்ணி ஞான நூல்களை எடுத்துப் பாராதவர் பேதையர் என்றே சொல்லவேண்டும்.

அப்படிப்பட்டவரோடு கூடி உற வாடலைப்போலப் பழுதானது வேறொன்றுமில்லை. அப்படிப்பட்டவர் ஞானம் எய்தி நின்றவரையும் மனந் திரித்து விடத்தக்கவர். பாம்பினும் கொடியவர். ஆனபடியால் அப்படிப்பட்டவரை ஞானத்தைப் பேணுபவர் அஞ்சவேண்டும், இதனை விளக்குந் திருவாசகம்:

அச்சப்பத்து

புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே.

இதுகாறும் கூறிப்போந்த சைவ உண்மைகள் இரண்டு: ஒன்று, இறைவனைத் தேடும்போது செருக்கு அற்றுத் தேடினால்தான் காணல் கூடும் என்பதாம்; மற்றையது, அவனருளால் கண்ட தன்னியல்பை மறவாது நிற்றலாகிய பேணலாகும். இவையிரண்டும் வந்துள்ள திருவாசகம்:-

எண்ணப்பதிகம்

காணும தொழிந்தேன் நின்திருப்பாதம்
கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றுமதொழிந்
தேனை பின்னையெம் பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்னினைந்துருகுந்
தன்மைஎன் புன்மைகளாற்
காணும தொழிந்தேன் நீஇனிவரிற்
காணவும் நாணுவனே.

மேலே திருவாசகத்துட் கூறிய உண்மை சைவசித்தாந்த சாத்திரங்களான திருவுந்தியாரிலும், திருவுந்தியாருக்கு விரிவுரை போன்ற திருக்களிற்றுப்படியாரிலும் வற்புறுத்தப்பட்டுள்ளன.

திருவுந்தியார்

வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்
பித்தேறி னார்களென்றுந் தீபற
பெறுவதங் கென்பெணே உந்தீபற.

திருக்களிற்றுப்படியார்

வித்தும்அதன் அங்குரமும் போன்றிருக்கும்
மெய்ஞ்ஞானம்
வித்தும்அதன் அங்குரமும் மெய்யுணரில் —
வித்ததனிற்
காணாமையால் அதனைக் கைவிடுவர்;
கண்டவர்கள்
பேணாமையால் அற்றார் பேறு.

---

"திருவார் பெருந்துறைச் செல்வனுகிக்
கருவார் சோதியில் கரந்த கள்ளமும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுடையடிகளின் யாக்கையமைப்பு

புலவர்சிவம், கருணாலய பாண்டியனார்

ஆளுடைய பிள்ளையார் முதலான நாயன்மார் நால்வருடைய புனைத்திருக் கோலம் ஈழத்திலுமாக, இந்தியாவிலு மாக தமிழகமெங்கணுமுள்ள பிஞ்ஞகன் கோயில் பலவற்றில் வைத்து வழி பாடாற்றி வருவதனை நம்பனடியார் பலருமறிவர்.

அவை கற்பொளிவுகளாகவும், செம்பு, வெண்கலம், வெள்ளி முதலிய வற்றின் வார்ப்புக்களாகவுமுள்ளன. இவற்றினின்றும் பின்பு வரையோவியமும், நிழலோவியமும் உண்டாயின. பசைமண்ணாலாக்கிய மண்ணீடுகளாகவும் அவையுள்ளனபோலும்.

ஆனால் ஆளுடை முதலிமார் நால்வர் திருக்கோலக் கைப்பணியெல் லாம் அவ்வப் பெரியார் வாழ்ந்த அவ் வக் காலங்களிலே அவ்வவர் பிழம்பி னைக் கண்கூடாகக் கண்டு நினைவிற் பதியவைத்து ஒப்புச்செய்யப்பட்டன வல்ல. அவ்வருட்செல்வரெல்லாங் கறை மிடற்றண்ணல்கழற் கீழொன்றிய பின்றை ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் கழிந்ததன்பின்னரே யவர்க்குப்புனைத் திருக்கோலம் எழுந்தருளுவிக்கப் பட் டன என்பதனை மறுப்பார் யாரு மிலர்.

எனவே அத்திருக்கோலம் புனைந்த வினைவலாளராகிய புனைவர் அவ்வப் பெருந்தகைகளுடைய பெயரீடுகட்கும், வரலாற்றுக்கும், எளிமைகசும் இறை வன்பாற் சுரந்த பெருங்காதற்குந் தக அவ்வவர்க்குத் திருக்கோல மின்னின வாறு புனைதல் வேண்டுமென ஏதோ தம்முள்ளத்து நினைவெழுந்தவாறு முடித்த புனைக்கோலமே அவை யெனக் கொள்வதல்லது மெய்த்திருக் கோலமெனக் கொள்வதமையாது.

எனினும் அவற்றை அவ்வவர் நினைவடையாளத் தோற்றமென்ற மட்டில் யாம் போற்றிவருவது குற்ற மன்று.

நால்வர் மெய்த் திருக்கோலப் பணிகிடைக்கக்கூடுமாயின் அவையே எல்லாருடைய உள்ளங்களையுமினிது கவருமெழின்மிக்கனவாய் இருக்கும் என்பது சொல்லவேண்டா. அவற்றை இனிப் பெறுவதென்பது இயலாத தொன்றேயாம். அப்பெருமக்களின் அருட்பாக்களுள் எங்கேனும் ஏதே னுங் குறிப்புக் கிடைக்கக்கூடுமானல் அவற்றைப்பற்றி ஒரு சிறிது தெரிந்து நினைவுகொள்ளலாம். அன்ன குறிப் புக்கள் மிகமிகக் குறைந்த அளவில் அங்குமிங்குமாக இல்லாமலுமில்லை. இருப்பினும் அவற்றைக் கொண்டு அவர்களின் முழுக்கோலமும் உள்ள வாறு தெரிந்து படைத்துவிடலா மென்பது முடியாது. அன்றியும் யாரையும் உள்ளவாறு கோலங் காட்டலென்பது காட்சியினலன்றிக் கேள்வியினலாதல் யாண்டு மெஞ் ஞான்றுமில்லை.

வாதவூர்த் திருவாளருடைய உட லமைப்புப்பற்றிய பாடலொன்று திரு வாசகத்திற் காணப்படுகின்றது. அது வருமாறு:

இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெய்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கோருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே.

249304

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கலிவிருத்தம் திருவாசகம் திருச்சதகம் நாற்பத்தொன்றாவது பாடல். இதன்கணுள்ள குறிப்பை யாராயுமுன் இதன் பொருளைத் தெரிவித்துக்கொள்வது தகும்.

இதன் பொருள்: வானத்தில் வீடு பெற்றிருந்தோர்க் கெல்லாம் அவரொடு வேறாகாதொருவனேயா யிருப்பவனே! யான் இரண்டு கையுடைய யானை விலங்குபோன்று கொழுத்துப் பருத்துக் கறுத்துயர்ந்திருந்து (இங்ஙனமென்னைக் கண்டதல்லாமல்) என்னுளிருக்கு மந்தக் கருப்பொருளாகிய நின்னைக் கண்டிலேன்: (இவ்வாறு நின்னைக் காணமல் அவ்வாறென்னைக் கண்டதனல் யான் கண்டது துன்பமே தவிர இன்பஞ் சிறிதுமில்லை. (இப்பற்றுந் துன்பமும் விட்டுப் பேரின்ப மெய்தற்பொருட்டு (நீ என்னை ஊர்போய்ச் சின்னாள் கழித்துப்பெயர்ந்து நின்பால்) வரல்வேண்டுமெனக் கட்டளையிட்டருளினை; நின் கட்டளைப்படி நான் நின்பால் வர முடியாமலிருந்தேன்; எனினும் யான் உடல் கொழுக்க உண்ணுமலிருக்க முடியவில்லை. (இங்ஙன மிருக்கின்ற வெனக்கு முய்தியுண்டாவதெங்ஙனம் என்பது குறிப்பெச்சம். இடையில் வருவித்தனவெல்லாம் சொல்லெச்சம்.

இப்பாட்டில் 'இருகை யானையையொத்திருந்'தென்னுந் தொடர்தான் அடிகளுடைய உடலமைப்பைக் குறிப்பிடுவதென் றெடுத்துக் கொண்டது. இப்பாட்டினல் அடிகள் இருகையானை போலக் கொழுத்துத் தடித்துக் கறுத்துயர்ந்த தோற்றமும், அவ்வமைப்புக் கேற்ற நன்குண வுண்ணும் வழக்கமும் உடையவரென்பது தெரியவரும்.

இதனுள் வானுளோர்க் கொருவனே! யான் இருகை யானையை ஒத்திருந்து என்னுள் அக் கருவைக் கண்டிலேன்; கண்டதெவ்வமே. வருகவென்று பணித்தனை; (வரக்) கிற்றிலேன்; உண்ணகிற்பன் எனச் சொற்கள் கொண்டு கூட்டப்படும்.

என்னுளக்கரு வென்பதனை என்னுள் அக்கருவெனப் பிரியாது என் உள்ளக் கருவெனப் பிரித்துப் பொருள்கூறுவதுமொன்று. ஈண்டு உள்ளமென்பது உயிர். கரு; உயிரொடுங்கித் தோன்றுதற்கிடமான முதற்பொருள். கருவாகிய நின்னையெனப் படர்க்கைச் சொல் முன்னிலைக்கண் வந்தது. ஒத்திருந்து என்னும் வினையெச்சம் கண்டிலேன் என்பதனேடும், கண்டது என்பதனேடும், வரக்கிற்றிலேன் என்பதனேடும், உண்ணகிற்பன் என்பதனேடும் தனித்தனிச் சென்று முடிந்தது. யானை மற்றை விலங்குபோல விரைவில் வர மாட்டாமையும் நிரம்ப வுணவுண்ணுதலு முடையது. அதுபற்றியும் வாதவூரர் தம்மை யானையோடொப்பித்துக் கூறிப் பழித்துக்கொண்டா ரெனக் கொள்க.

இங்ஙனந் தம்மைப்பற்றி அடிகள் வெளியிட்டதி னின்றும் உடல் கொழுக்க வுண்டு பருத்திருத்தல் உள்ளமொடுங்கி உயிர்க் கருவைக் கண் டுய்தற்குத் தடையாகுமென்பது தோன்றும்.

இனி, அடிகள் இங்கு இருகை யானையோ டொப்பித்தது தம்மையன்று தாங் காதலிக்குங் கருவையெனக்கருதி யுரைகூறுவார் பலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் இருகை யானைபோலிருந்தால் அவரைத் தெளிவாகவும் விரைவாகவு மின்னாரென்று கண்டுகொள்ளலாம்; இறைவன் அல்லது ஆசிரியன் இருகை யானைபோலிருந்தும் யான் அவனை யின்னானென்று தெளிவாகவும் விரைவாகவுங் கண்டிலேனெனச் சொல்வது எவ்வளவு நகைக்கிடனாவது. இருகை யானையென யானையை விதந்து கூறும்பொழுது யானையின் உடலமைப்பை யொழிய யானையின் நற்பண்புகளைக் கொள்ளுதற்கு மிடந்தராது. அல்லதூஉம் நீயென்னும் எழுவாயோடினிது பொருள் விளங்கச் சொல்லியதில்லை. கருவையெனப் படர்க்கைச் சொல்லை எளிதிற்பொருள் கொள்ளாவாறு வைத்ததூஉஞ் செவ்விய சொன்னடை யன்று. அல்லதூஉம் நீயென்னும் எழுவாயோடினிது பொருள் விளங்கச் சொல்லியதில்லை. கருவையெனப் படர்க்கைச் சொல்லை எளிதிற் பொருள் கொள்ளாவாறு வைத்ததூஉஞ் செவ்விய சொன்னடையன்று. அல்லதூஉம் அடைமொழியில்லாத கருவென்பது யானை போல்வானைக் கூறுதற் கியைந்த சொன் மரபன்று. அல்லதூஉங் கருவென்பது கட்புலனாகாத நுண்பொருள். யானை கட்புலனாகும் பருஉப்பொருள், இவை தம்முளொப்பாகுமென்றல் அணிவழுவாம். அல்லதூஉம் ஒத்திருந்தும் எனவும்மை விரித்தல் வேண்டும்; இது இவ்வும்மை தொகுக்கு மிடனுமன்று. இனி, ஆசிரியனை எதிர்பெய்து நீ இருகை யானையை யொத்திருந்து கொண்டு என்னை வருகவென்று பணித்தாயென்றால் அது தாம் அவ்வாறு வாராமலிருந்த தன்கொடுமையை மிகைப்படுத்து மாற்ற லுடையதூஉமன்று. அங்ஙனமாக, அவ்வாறு வாளா சிறப்பித்துக் கூறவேண்டியதெற்றுக்கு?

எனவே அடிகள் இருகையானையென்றது தம்மையே யாமெனக் கொள்வ தமைவுடைத்து.

இருகையானை யென்னுமிடத்து விலங்கென்னும் இழித்தற் குறிப்பேயன்றி உயர்த்தற் குறிப்பு நிகழ்ந்திலது. அதனால் அது தற்புகழ்ச்சிக் குற்றமாகாது' அது பின் உண்ணகிற்பனென்பதன் குறிப்பின லினிது பெறப்படும்.

வாதவூரர் இருகை யானையென்று கூறும்படி பருத்துக் கொழுத்துயர்ந் திருக்கு முடல்வளம் இவர் பாண்டியன் முதலமைச்ச ரென்றற்கும் பெரிது மொத்தது.

"அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
சேறிவுடையான் சேல்க வினைக்கு."

என்ற வள்ளுவனர் கூற்றுக் கியைய அறிவும் ஆராய்ந்த கல்வியுமுடையார்க்கு உருவும் உடனமைந்திருத்தல் வேண்டும்.

முதலமைச்சர்க் கென்றால் அது வேண்டுமென்பது சொல்லவேண்டியதில்லை.

"உருவுகண் டெள்ளாமை வேண்டு
முருள்பெருந் தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து."

என்றவாறே சிற்றுருவினரும் உலகுகொண் டுய்க்கும் பேரறிவுடையராதல் கூடுமாயினும் வேற்று நாடு சென்று வினைமுடித்து மீளும் வாதவூரர்போலு மமைச்சர்க்கு உருவளனுமின்றியமையா தென்பது பொருளில் வல்லார் துணிபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களிலும் பிறவற்றிலுங் காணப்படும் வாதவூரரது ஒப்பனைப் பிழம்பு அமைச்சராவார்க்கு வாய்ப்புடைத்தன்று. அக் கோலமெல்லாம் அவர் அடிகளாகி 'ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி'யிருந்த தோற்றமென வைத்துக் கொள்ளலாம் போலும்,

வாதவூருடைய அமைச்சுக்காலத்து யாக்கையமைப்பு "கல்வியிற்பெரியன் கம்பன்" எனவும் "கரியன் கம்பன்" எனவும் எடுத்துக் காட்டப் பெறுஞ் சிறப்பு வாய்ந்த புலவர்பெருமானுடைய யாக்கையமைப்போடொருவாறொத்திருக்கலாம்போலும்.

---

THE psalms of the great Tamil mystic, Manikkavachagar were all written or conceived in the temples of Siva and were produced by the contemplation of the God's sacred image. — *Friedrich Heiler*

"இறையின் கின்னருள் உருவினை இடையறுது எண்ணி எண்ணி அவ்வெண்ணத்துள் ஊறி மூழ்கியதன் உணர்வில் முகிழ்த்தவையே அவர்தம்பாடல்களாம்." —ஃப்ரேடிறிக் ஹெய்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜ வடிவம்

கலைப்புலவர் க. நவரத்தினம்

சைவத் திருவுருவங்கள் எல்லாவற்றினும் கலை அழகினும் சமயக் கருத்திலும் சிறப்பு உடையது நடராஜ வடிவமேயாம். கடவுளை நடராஜ மூர்த்தியாக வழிபடுந் தனிப்பெருமை தமிழ் மக்களுக்கே உரியதாகும். சிவனை இலிங்க உருவத்தில் வழிபடும் முறையானது, இந்திய நாடு முழுவதிலுங் காணப்படுவதாயினும், அவன்தனைக் கூத்தப் பிரானக வணங்கும் வழக்கு பெரும்பான்மையாகத் தமிழ் நாட்டில் மாத்திரமே காணப்படுகிறது.

தமிழ் நாட்டுச் சிவாலயங்களிற் காணப்படும் நடராஜ வடிவங்கள் போன்றன பிறநாட்டு ஆலயங்களில் இல்லை. ஆனல், நடராஜ வடிவத்தைச் சில தன்மைகளில் மாத்திரம் ஒத்திருக்கும், நடனமூர்த்தங்கள் பிற நாட்டு ஆலயங்கள் சிலவற்றிற் காணப்படுகின்றன.

சாளுக்கிய அரசர்களது தலைநகராயிருந்த வாதாபிபுரத்தின் குகைக் கோயிற் சுவரில் 16 கரங்களுடைய ஒரு சிவதாண்டவ மூர்த்தங் காணப்படுகின்றது. இக்குகை அமைக்கப்பட்ட காலம் கி. பி. 577 எனக் கருதப்படுகின்றது. பல்லவ அரசர் காலத்திலே கட்டப்பெற்ற காஞ்சிக் கயிலாசநாதர் கோயிற்சுவரிலும் சிவதாண்டவ வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. ஆரியபுரம் என்னும் சாளுக்கிய நாட்டு நகரிலும் பத்துக் கரங்களுடைய ஒரு வடிவம் உண்டு. எல்லோரா குகைக் கோயில்களிலும் சிவதாண்டவ வடிவங்கள் காணப்படுகின்றன. மேலே கூறப்பட்ட வடிவங்கள் யாவும் கோயிற் சுவர்களில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளனவேயன்றி வழிபாட்டுக் குரியனவன்று.

நடராஜ வழிபாட்டிற் கென்றே சிறப்பாக அமைந்துள்ள தலம் திருச்சிற்றம்பலம் எனும் தில்லைச் சிதம்பரமேயாகும். தில்லைவனம் எனக் கூறப்படும் சிதம்பரம், பதஞ்சலி முனிவர் காலத்துக்கு முன்பே அமைந்த ஓர் ஆலயம் என்பது கோயிற் புராணம் முதலிய நூல்களின் கருத்தாகும். பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிரபாதருக்குந் தரிசனம் அளித்தருளும் பொருட்டே, சிவபெருமான் தில்லையில் திருநடனம் புரிந்தாரென்பது புராணங்களிற் கூறப்படும் வரலாறுகும். பதஞ்சலி முனிவர் நந்தி அருள் பெற்ற சித்தருள் ஒருவர் என்று திருமூலர் திருமந்திரத்தில் கூறுகின்றூர்.

பதஞ்சலி முனிவரே யோக சூத்திரத்தையும், பாணினி வியாகரண பாஷியத்தையும் எழுதியவர். சரகர் வைத்திய நூலுக்கு ஒரு பாஷியமும் எழுதியுள்ளார். இவர் காலம் கி. மு. 150 ஆண்டு என அநுமானிக்கப்படுகின்றது. பதஞ்சலி முனிவர் மகத நாட்டினர் என்பது சரித்திர நூலார் கருத்து. அவர் தவமியற்றிய இடம் சிதம்பரம் என கோயிற் புராணங் கூறுகின்றது. புராண வரலாற்றின்படி பதஞ்சலி முனிவர் தில்லைக்கு வந்தபொழுது, அங்கு ஒரு சிவலிங்கமும், சிவகங்கை எனும் பொற்றாமரை வாவியும் இருந்தன. திருநிருத்த தரிசனம் தில்லைக்கு வந்த நெடு நாட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்குப் பின்னரே அவருக்குக் கிடைத்தது. நாதாந்த நடனமாகிய பஞ்ச கிருத்திய நடனத்தை அவர் இறைவனது அருளால் பெற்றார்.

"எண்ணருங் காதல் கூரும் இருவருங்
காண ஞானக் கண்ணினை நல்க."

எனக் கோயிற் புராணங் கூறுவதிலிருந்து பதஞ்சலியும், வியாக்கிரபாதரும் ஞானக்கண்ணால் திருக்கூத்துத் தரிசனத்தைக் கண்டார்கள் என்பதும் துணிபு.

சிதம்பரம், தில்லைவனம், திருப்புலியூர், கோயில், திருச்சிற்றம்பலம் பொன்னம்பலம் என்னும் பெயர்கள் சிதம்பரத்தையே குறிக்கும். பொன்னால் வேயப்பட்ட ஸ்தலம் என்பதனால் அதற்குப் பொன்னம்பலம் என்னும் பெயர் ஏற்பட்டது. சிதம்பரம் இருமுறை பொன்னால் வேயப்பட்டதென்பது சரித்திர முறையாற் கண்ட உண்மை. கி. பி. 907–953 வரை இருந்த 1-ம் பராந்தக சோழன் சிதம்பரத்துப் பொன் விமானத்தைப் புதுப்பித்தான் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால், அவனுக்கு முன்னரேயே சிதம்பரம் பொன்னால் வேயப்பெற்றிருத்தல் வேண்டும். சிம்மவர்மன் என்னும் ஓர் அரசன் தன்னைப் பிடித்த நோயை நீக்கிக்கொள்ளும்பொருட்டு, சிதம்பரத்தை அடைந்தானெனவும், அங்குள்ள வாவியுள் மூழ்கியதன் பயனாக அவனது நோய் நீங்கிப் பொன்னிறம் அடையப்பெற்றமையால், அவன் இரணியவர்மன் என்னும் பெயரால் அழைக்கப்பட்டான் எனவுங் கோயிற் புராணம் கூறுகின்றது. எனவே, சிம்மவர்மனே முதன்முதல் சிதம்பரத்தைப் பொன்னால் வேய்ந்தவனாவான். சோழ அரசர் பரம்பரையில் சிம்மவர்மன் என்னும் பெயருடனாவது, இரணியவர்மன் என்னும் பெயருடனாவது அரசர்கள் இருந்தாரெனத் தெரியவில்லை. பல்லவ அரச பரம்பரையில் அரசர்கள் சிம்மவர்மன் என்னும் பெயருடனும், இரணியவர்மன் என்னும் பெயருடனும் காணப்படுகின்றனர். கி. பி. 436–ம் ஆண்டில் அரசிருந்த பல்லவ அரசன் சிம்மவர்மன் எனப்படுவான். கி. பி. 710-ம் ஆண்டில் இரணியவர்மன் என்னும் பெயருடன் ஒரு பல்லவ அரசன் இருந்தான் எனச் செப்புப் பட்டயங்கள் கூறுகின்றன. இவ்விரணியவர்மனுக்கு முன் தேவாரங்கள் பாடப் பெற்றன. தேவாரங்களில் பொன்னம்பலம் என்னும் சொற்றொடர் காணப்படுகின்றமையால், இவ்வரசனுக்கு முன்பே சிதம்பரம் பொன்னால் வேயப் பெற்றிருத்தல் வேண்டும். எனவே, கோயிற் புராணங் கூறும் இரணிய வர்மனாகிய சிம்மவர்மனே சிதம்பரத்தைப் பொன்னால் வேய்ந்தவன் ஆதல்வேண்டும். அவன் காலம் கி. பி. 436 ஆகும். நாம் இதுகாறும் கூறியனவற்றிலிருந்து மாணிக்கவாசகர் காலத்தை கி. பி. 436-ம் ஆண்டிற்கு முன்போடுதல் தவறு என்பது பெறப்படும். பொன்னம்பலம் என்னும் சொற்றொடர் திருவாசகத்தில் வருதலாலென்க.

நடராஜவடிவம் சிவபரம்பொருளே சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்து தொழில்களையும் முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐவகை மூர்த்திகளின் வழியாகச் செய்கின்றதென்பதைக் காட்டுவிக்கும். இக்கருத்தினை 'உண்மை விளக்க" நூலாசிரியராகிய திருவதிகை மனவாசகங் கடந்தார் பின்வரும் வெண்பாவினால் விளக்கியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோற்றந் துடியதனிற் தோயுந்திதி யமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
மூன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

இதன் பொருள்: டமருகந் தாங்கிய கையினல் உலக சிருட்டியையும் அபயகரத்தினல் காத்தலையும், அக்கினியேந்திய கையினல் மல சங்காரத்தையும், ஊன்றிய பாதத்தால் ஆன்மாக்களை கன்ம வினைக்கு ஏற்ற சுகதுக்கங்களை அனுபவிக்கப்பண்ணுதலையும். (மறைத்தல்) தூக்கிய பாதத்தினல் முத்தி அருளலையும் காட்டுகின்றதென்பதாம்.

நடராஜ வடிவம், ஸ்ரீபஞ்சாட்சரத்தால் அமைந்திருக்குந் தன்மையை அறிந்து அவ்வாறு அதனைத் தியானிப்பதும், ஞான சாதகர்களுக்குச் சொல்லப்பட்ட சாதனை முறைகளுள் ஒன்று. அது:

"ஆடும்படி கேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியிலே நகரங் — கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமு டியப்பார்"

என்னும் பாட்டால் அறியப்படும்.

இதன் பொருள்: மாணுக்கனே! பொன்னம்பல முடையான் நிருத்தஞ் செய்கிற முறைமையைச் சொல்லுகிரேம் கேள். நின்ற பாதத்திலே நகாரமாகவுந், திருவுந்தியிலே மகாரமாகவுந், திருத்தோளிலே சிகாரமாகவுந், திருமுகத்திலே வகாரமாகவுந், திருமுடியிலே யகாரமாகவுங் கொண்டருளித் திருநிருத்தஞ்செய்வாரென்று அறிக என்பதாம்.

இது தூல பஞ்சாக்கரப் பொருளாகும். இஃதேயன்றி சூக்கும பஞ்சாக்கரப் பொருளாகவும் நடராஜ வடிவம் தியானிக்கப்படுகின்றது. அதனைப் பின்வரும் வெண்பாவில் காண்க:

"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனர்
தங்கு மகர மதுதான்."

இதன் பொருள்: ஒலிக்கின்ற டமருகமேந்திய கரத்திலே சிகரமாகவும், வீசிய கரத்திலே வகாரமாகவும் அமைத்த கரத்திலே யகரமாகவும், அங்கியேந்திய கையில் நகரமாகவும், முயலகனர் தங்கும் அடிக்கீழ் மகாரமாகவும் இறைவன் கொண்டருளித் திருநிருத்தஞ் செய்வான் என்று அறி என்பதாகும்.

இதுகாறும் சிறப்பித்துக் கூறிய நாதாந்த நடனமெனும் ஆனந்தத் திருக்கூத்தால் உலகிற் காணப்படும் அசைவுகள் யாவுஞ் சிவன் அருளாலே நிகழ்கின்றன வென்பதும், அத்தகைய நிகழ்ச்சியானது ஆன்மாக்கள் பந்தத்திலிருந்து நீங்கி முத்தி இன்பத்தைப் பெறும் பொருட்டே என்பதும், அவன் தன் திருக்கூத்து நிகழுமிடந் தூலமாகிய திருச்சிற்றம்பலமேயன்றி உலகமாகிய திருக்கோயிலுஞ், சூக்குமமாகிய அன்பர்களது இருதயகமலமுமாகு மென்பதும் அறியற்பாலதாம். இத்தத்துவஞானக் கருத்துக்களை வடிவுறக் காட்டும் வடிவம், நடராஜ வடிவத்தை விட வேறொன்றுமில்லை. தத்துவ ஞானப் பொருளும், கலைச்சிறப்பும் ஒருங்கே யமைந்து, கடவுள் ஞானம், கடவுள் பக்தி ஆகிய இரண்டினையும் வளர்த்தற்கு ஏற்றதாகிய திருவடிவம் இது ஒன்றேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜ வடிவத்தினைச் சூழ்ந்திருக்கும் வட்டந் திருவாசி எனப்படும். இது ஓங்காரமாகிய பிரணவத்தைக் குறிக்கின்றதென்ப. அன்றியும், இது பிரகிருதிப் பொருளாகிய இயற்கையைச் சுட்டுகின்றதெனக் கொள்வதும் ஒரு கருத்தாகும்.

உண்மைக் கலை இன்பமானது சிவாநுபவ இன்பத்தினது இயல்பு வாய்ந்ததெனக் கூறப்படும் உண்மையை, நடராஜ வடிவத்தின் முன்னின்று அது உணர்த்தும் நாதாந்த நிலையையும், கலை வனப்பையும் ரசிக்கும் ஆற்றல் வாய்ந்த ஒரு ரசிகனே அறிவான். "அழகிய பொருள் ஒன்று எஞ்ஞான்றும் மகிழ்ச்சி யளிப்பதாகும்" என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவதுபோல, பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் இன்பத்தையளிக்கும் பான்மைத்தாகிய திருவுருவம் தமிழ்நாட்டில் நடராஜ வடிவமேயாகும். டாக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் நடராஜ வடிவத்தினைப்பற்றி ஆங்கிலத்தில் கூறியுள்ள ஒரு கருத்தினை இங்கு தமிழில் கூறி இக்கட்டுரையை முடிக்க விரும்புகின்றேன்.

"ஒரு கூட்டத்தார்க்காவது, ஒரு நூற்றாண்டைச் சார்ந்த சிந்தனையாளர்க்காவது ஏற்புடைத்தாகலின்றி எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் உள்ள தத்துவ ஞானிகளாலும் பக்தர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் வண்ணம், தத்துவ ரூபம் காட்டுவதும். மனித வாழ்க்கையில், ஒன்றேடொன்று ஒவ்வாமல் சிக்குண்டுள்ள வியவகாரங்களுக்கு வழிகாட்டும் இயல்பினதும், இயற்கையின் கோட்பாடாய் விளங்குவதுமாகிய இத்தகைய உருவத்தை, முதற்கண் தமது தியானத்தால் தோற்றுவித்த கலைஞான் இருஷிகளின் ஆழ்ந்த சிந்தனை சக்தியும், கருணையூற்றும், என்றிவற்றின் பெருக்கு எத்தனை வியப்பினைத் தருகின்றது. தமது ஞானயோகக் காட்சியை உருவமாகச் செய்ய முயலுவார்க்கெல்லாம், இந்த நடன சொரூபமானது தன்கண் தோற்றும் சக்தி அழிக்குஞ் சக்தி, அருளுஞ் சக்தி என்னும் இவற்றின் விளக்கத்தால் மிக்க மேன்மை யுடையதாகவே தோன்றல் வேண்டும்.

இத்தகைய தத்துவ நிறைவுங் கலைவனப்பும் நடராஜ வடிவத்திற் காணப்பட்டமையா லன்றே அப்பர் சுவாமிகள் :

குனித்த புருவமும் கோவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபோற் பாதமும்
காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநி லத்தே.''

என்று பரவசப்பட்டுப் பாடியுள்ளார்.

---

" ஆங்கது தன்னில் அடியவட்காகப்
பா ங்காய்மண்சுமந் தருளிய பரிசும் ".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் மகிழுந் தமிழ்

பண்டிதை. த. வேதநாயகி அம்மாள்

நமச்சிவாய வாஅழ்க
'நித்த மணாளர் நிரம்ப வழகியர்'

அருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
ஒலி தரு கயிலை உயர்கிழ வோனே.

தலைவன் எல்லா நலமும் பொலிய வீற்றிருக்கின்றான். அவனது நன்மையின் பொலிவு தலைவியின் கண்களைக் குளிர்விக்கின்றது அவள் நெஞ்சம் தளிர்த்துப் பூத்துக் கனிகின்றது. தலைவியின் பணிகள் தலைவனுக்குத் தித்திக்கின்றன. அவன் தலைவிமேலே தலையளி பொழிகின்றான்.

தலைவி தன் மார்பிற் பொலியும் மாங்கல்யத்தை வாழ்த்துகின்றாள். அவள் உள்ளம் முழுதும் மாங்கல்யமே. அதன் வாழ்வே அவள் வாழ்வு. அவள் வேறெதனையுமறியாள், தனனையுமறியாள்.

மணிவாசகராகிய ஆன்ம நாயகியின்
நாயகர், 'நித்தமணாளர்'
'விண்ணை மடங்க விரிநீர் பரந்து
வெற்புக் கரப்ப
மண்ணை மடங்க வருமொரு காலத்து
மன்னி நிற்கும அண்ணல்'
'யாவற்கு மேலா மளவிலாச்
சீருடையான்'
'தீதிலா நன்மை'

அந்தமில்லாதவராகிய ஆன்ம நாயகர் மணிவாசக நாயகியை ஆனந்த வெள்ளத் தழுத்துகின்றவர்.

"தானந்த மில்லான் தனையடைந்த
நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்
தான்"

என்று தலைவனிடம் அழுந்துகின்றுள தலைவி.

இருவரும் இத்தன்மையர்

ஆன்ம நாயகர் தம் நாயகிக்கு மார்பிலணிந்த மாங்கல்யம் "பாதமலர்". நாயகியின் உயிரும் உயிர்ப்பும் அது.

மாங்கல்யம் அணிந்தவரை,
"பன்னாட் பணிந்து பணிசெய்யப்
பாதமலர்
என்னகம் துன்னவைத்த
பெரியோன்"
என்று உருகி யுருகி உணர்கின்றாள்,
'சித்தங் களிப்பத் திகைத்துத்தேறு
கின்றாள் நாயகி

'அவர்' என்னுமளவிலே,
'கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா அன்பு நாடொறுந் தழை'க்
கின்றது.

ஆன்ம நாயகர் பணியாகிய சிவகருமத்துக்கு அவரணிந்த மாங்கல்யமே துணை. பணிந்து பணிசெய்யச் சாட்சியாயுள்ளதும் அதுவே.

'நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள்
வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி
னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன்
றாள்வாழ்க'

என்று இடையறாது வாழ்த்துகின்றாள்.

நாயகர் "பாதமலர்" உபகரித்த கோகழிச் சூழலே அவளது சூழலாயிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க "

' தாயிலாகிய இன்னருள் தந்த
என் தலைவன் ' என்பதே

தலைவியின் மெய்ப்பாடு, அழகு.

' தம்முதல் குருவுமாய்த் தவத்தினி
லுணர்த்தினான்,

அநந்நியமாயினாள்; தலைவன் பாத மலர்க்கீழ் அவளது தலைமை சிறக்கின்றது!

### சிவனென்றே வாய்திறப்பாள்.

மணிவாசக நாயகி தன் நாயகனை ' அவனை ' ' அவரை ' உச்சரிக்கின்றாள்.

1. பாதமலர் என் ஆகம் துன்ன வைத்த பெரியோன்.
2. தாயிலாகிய இன்னருள் புரிந்த என் தலைவன்.
3. சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும் தாயான ஈசன்.
4. என் உடலிடமே மன்னும் உத்தரகோச மங்கைக் கரசு
5. பொருளா வெனைப்புகுந் தாண்டு புரந் தரன் மாலயனபால் இருளாயிருக்கு மொளி.
6. உத்தம னத்த னுடையான்
7. என்பிடைவந் தமிழ்தூற நின்றாடி
8. அணியு மமிழ்துமென னாவியு மாயவன்
9. அச்சந் தவிர்த்த சேவகன்
10. நிச்சலு மீர்த்தாட் கொள்வோன்
11. பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையன்
12. இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான்

' நாத்தழும்பேற உச்சரிக்கின்றாள்!

அவள் ' சிரிய வாயாற குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய் ' என்று செங்கயற்கண் பனிக்கின்றாள். கீதமினிய குயில் கூவுகின்றது ' ஐயா என் ஆருயிரே அம்பலவா '

அவள் ' கோற்றேன் மொழிக் கிள்ளாய் ', ' ஏதமிலா இன்சொல் மரகதமே ' ' ஏழ்பொழிற்கும் நாதன் நமை ஆளுடையான் நாடுரையாய் ' என்று உரை தடுமாறுகின்றாள். அவளது கிளி பெண் திருவே, ' தென்பாண்டி நாடே தெளி ' என்று 'அமுதொடு தேனொடு பால் கட்டி' பொழிகின்றது.

அவள் நெஞ்சம் ' இன்பமே என்னுடையன்பே ' என்றென்று இனிதுயிர்க்கின்றது.

### தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்.

திருவாசகமே, தித்திக்கப் பேசுவாய், உன் கடைதிறந்தால் ஆனந்த வெள்ளம் மடைதிறக்குமே. அன்பே, உன் கடை திறவாய்.

மணிவாசகர் மணிவாய் திறப்பின தில்லைச் சிந்தாமணி சலக்கென்பது சரதம், சரதம்.

' சரதமுடையர் மணிவாய் திறக்கிற்
சலக்கென்ப' தே

'பேசும் பொருளுக் கிலக்கிதமாம்
பேச்சிறந்த மாசின மணியின்
மணிவார்த்தை ' சலக்கென்

பது சரதம் சரதம்!

ஆகாயத்தின் குணமாகிய இசை ஆகாய முள்ள இடமெல்லா முள்ளது. குழலோன் அதனை நமக்குப் புலப்படுத்துகின்றான். இசைவெள்ளம வேய்ங்குழலின் சிறிய துளைகளினூடாக நிறைகின்றது. குழலோனது இசைப்புலமை இருந்தபடி அது!

சிவமென்னும் ஆனந்த வெள்ளம்

அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பு எனப்படும். மணிவாசகருடைய திருவாயிலே தோய்ந்த தமிழ்ச் சொற்களாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு துளைகளினூடாக இன்ப அன்பு ஆகிய சிவமென்னும் வெள்ளம் நிறைந்து உயிர் அனைத்தையும் வாழ்விக்கின்றது!

## ஓத உலவா ஒரு தோழன்.

நீத்தல் விண்ணப்பம் தலைவனை 'பிரியேன் பிரியேன்' என்று அநந்தந் தரம் வலம்வருகின்றது. நீத்தல் விண்ணப்பத்தின் தொடக்கம 'கடையவனேனை' முடிவு 'கடையவனே' முடிவாகிய 'கடையவனே' என்று சொல்லும்பொழுது 'கடையவனேனை' என்பது தானேவரும், வலம் வரும் இவ்வாற்ருன் நீத்தல்விண்ணப்பம் தலைவனை வலம்வந்து கொண்டிருத்தல் காண்க.

நீத்தல் விண்ணப்பம் முழுதும் அந்தாதியாகத் தொடர்தல் அன்பு சுமந்து அடிபெயர்த்தலை உணர்த்துகின்றது.

'முட்டாதிறைஞ்சி' 'நாத்தழும் பேற வாழ்த்தி' 'எந்தாய் எந்தை பெருமானே எனறென்றே பேசிப் பேசி' 'பேசத் திருவார்த்தையிற் பெருநீளம் பெருங்கண்களே' 'பேராசை வாரியனைப பாடுதும்' என வருவனவற்ருல் சிவகீர்த்தியின் நீளமும் அதனை இடையீடின்றித் தொடரும் அன்பின் நீளமும் காண்க.

"வேதமுதல் விண்ணேரும் மண்ணுந்
துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன்
தொண்டருளன்"

## என் உடலிலமே மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே.

திருவாசகம் சிவத்திருமேனி. அதனை ஓதும் ஆன்மா அதனுட் புகுந்து திருவாசக சரீரியாகிவிடும். திருவாசகம் சிவத்திற்குத்திருமேனியாயும் ஆன்மாவுக்கு ஞான சரீரமாயும் நிற்குமாதலினலே சிவத்திற்கும் ஆன்மாவிற்கும் திருவாசகமாகிய திருமண மண்டபத்திலே கலவி நிகழும்.

திருவாசகம் அருள்வடிவாய், சிவத்தைக் காட்டும் சிவஞானமாயிருத்தலினலே, ஆன்மாவின் முத்திநிலையினும் விளங்கும் அழிவில்லாத தமிழாகும்.

சிவயோகிகள் ஆதாரத் தாமரைகளிலே தலைவனைககாண்பராகலானும் பூசை ஓமம் தியானம் என்பவைகளை இருதயம் நாபி புருவமத்தி என்னுந் தானஙகளிற் செய்வராதலானும் தலைவன் உடலிலமே மனனும் என்க.

தலை கை முதலிய உறுப்புக்கள் வாதனை வயத்தானே தலைவன் வழிப்படுவன வாதலையும் ஈண்டுச் சிந்திக்க.

"நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" சுந்தரர் திருவாக்கு

## தானிங்ஙன் சோற்பாலதானவா! தனித்துணை நீ.

மனைவி தாய் தந்தை மக்கள் பற்றுள சுற்ற மெல்லாம நம்மை இகழ்ந்து நீக்கும் பொழுது அவ்விகழ்ச்சிக்கு மகிழும்படி நமக்குத் துணையாவது திருவாசகம். கண் செவி முதலிய கருவிகள் நம்மைக் கைவிட்டபொழுது. உள் நிற்குந் தனித்துணையின் திருமுக நோக்கித் திருவாக்கைக் கேட்டற்குக் கருவியாவது திருவாசகம். சாக்கிரம் சொப்பனமாய், சுழுத்தி துரியம் துரியாதீதமாய் நமது கருவிகள் இருண்டு ஒடுங்கி நீங்கும்பொழுது, நமமை 'அன்பணை'த்து இருள்நீக்கி இன்பஞ்செய்வது திருவாசகம். பரமுத்திவரையுந் தொடர்ந்து ஆங்கேயும் உடன் நிற்கும் அருந்துணை திருவாசகம்.

பாஷாஞானமும கண் முதலிய கருவிகளின் விளக்கமும இளமையும் உள்ள பொழுதே திருவாசகத் துணையைத் தேடிக்கொள்க. திருவாசக வலையை விரித்துப் பரமான்மாவாகிய பறவையை அகப்படுத்துக.

## நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகன்.

'வாசகம மாண டென்னுடைய
செயல் மாண்ட வாபாடி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கூறுநாவே முதலாகக் கூறுங் கரண
மெல்லா நீ'

என வருவன மணிவாசகரது கருவி களை முதல்வன் பற்றி நின்று திருவாசகம் பாடுவித்தான் என்னுமுண்மையைச் சொல்லுகின்றன.

இனி, மணிவாசகர் தில்லையிலே சிவ காமச் சூழலிலேயிருந்தபொழுது தில்லைச் சிந்தாமணி 'தண்ணர் தமிழளிக்கும் தண் பாண்டிநாட்'டு மறையோனுய்ச் சென்று திருவாசகத்தைச் செவிமடுத்து, தித்திக் கப் பேசுவீர், சிற்றம்பலவர் 'திருவடிக் கீழ்'க் கோவை பாடுக என்று கேட்டு கோவை வாசகம் இரண்டையும் எழுதிச் சேமஞ் செய்து கொண்டு மறைந்தருளி, திருச்சிற்றம்பலத்தினுள்ளே புகுந்து திரு வாசகம் திருக்கோவையார் என்னும் இரண்டு தமிழையும் திருச்செவிகளினுலே திருவமுது செய்தருளுகின்ருரெனபது வரலாற்றுண்மை.

"பிழைப்புவாய்ப் பொன்றறியா
நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள்
போற்றி".

**ஆனந்த மாலேற்று மத்தன்.**

'ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ
பாடுகோ'

'வாழ்வற வாழ்வித்த மருந்தே'

'பித்த வுலகிற் பிறப்போ
டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய்
கோத்தும்பீ'

உலகமென்பது யாது! சித்தவிகாரக் கலக்கம். உலக சுகமென்னும் வாழ்வாகிய நோய் அறுக 'வாழ்வற வாழ்வித்த மருந்தே'! வாழ்க.

ஆன்மாவின் இருள்சேர் வினை சண்டமாருதமாய் ஆன்மாவாகிய அணுவை 'நரகொடு சுவர்க்கம் நானில'ங்களிலே தள்ளியும் இழுத்தும் அழுத்தியும் இளைப்பாறவும் சிந்திக்கவும் விடாமல் அலைக்கின்றது. நித்திரையிலும் அது விடுவதில்லை.

தேவருலகினும் இன்பமில்லையே!

'அவமாய தேவர் அவகதியில்
அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டு
கொண்ட பரஞ்சோதி'

'மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே'

'பார்பாடும் பாதாளர்பாடும்
விண்ணேர் தமபாடும்
ஆர்பாடும் சாரா வகையருளி
யாண்டுகொண்ட
நேர்பாடல் பாடி'

மனிதர் தேவர் நாகர் யாருடைய சுகமும் பெருமையும் அடியேற்குக் கிடையாதபடி என் அத்தன் அருளினுன்!

'இணையார் திருவடி என்தலைமேல்
வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந்
துறந்தொழிந்தேன்'

'சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான்
தொல்புகழே' பற்றுக

துணையென்று துன்பத்தையே கொண்டுவருகிற சுற்றங்கள் அவனருளாலன்ரூ எனனை நீங்கின.

'என் வல்வினையின் வாயிற்
பொடியட்டிப்
பூவல்லி கொய்யாமோ'

'நான் கெட்ட வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ'

'நவமாய செஞ்சுடர் நல்குதலும்
நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங்
கொட்டாமோ'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணூர் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டான்.

'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலி
னய்ந்தவொண் டீந்தமிழ்'

தலைவன் தமிழ்தந்தருளின பெருங் கருணையை நூல்கள் கொண்டாடும். அவன் 'களவியல்' என்னும் அகப்பொருள் நூலை அருளினுனென்பது வரலாறு. அகப்பொருள் என்பது தலைவன் தலைவி என்னும் இருவரது காமப்புணர்ச்சியைச் சொல்லுவது.

சமய குரவர் நால்வரும் தலைவியின் அன்பு நிலையை எய்தினமை தேவாரம் திருவாசகம் திருக்கோவையார் என்பவைகளினுலே நிச்சயிக்கப்படும். நாயன்மாருள் ஒருவராகிய திருவள்ளுவர் உபகரித்த திருக்குறளிலே காமப்புணர்ச்சி ஒளிர்கின்றது.

களவியலிலே இரண்டாவது சூத்திரம் சைவ சித்தாந்த வேதாந்த மகாவாக்கியப் பொருளைத் தமிழிலே அதிசயிக்கத் தக்கபடி தெளிவு செய்கின்றது. ஏக சூத்திரம் அத்துவித சூத்திரம் என்று அதனை வழங்குவது தகும் தகும்.

அகப்பொருளிலே வழங்கப்படுவனவாகிய இயற்கைப்புணர்ச்சி காமப்புணர்ச்சி என்னுஞ் சொற்கள் விலைமதிக்கலாகாத ஞானரத்தினங்கள். புணர்ச்சி என்பது பிரியாமை என உரைத்துணரத் தகக்து.

ஆன்மா தலைவனை அறியாத நிலையிலும் தலைவன் அதனைப் பிரியாமல் நிற்பவன். அதனுல் தலைவனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள பிரியாமை இயற்கைப் புணர்ச்சி எனப்படும். தலைவன் ஆன்மாவின் பாசநீக்கத்திலே தோன்றுவதாகிய அன்பே சொரூபமாக வெளிப்படுவன். அன்பு நிலையிலே ஆன்மா தலைவனை அநுபவிப்பது காமப்புணர்ச்சி யாகும்.

சிற்றம்பலம் ஞானுகாயம். சிற்றம்பலவன் ஆனந்த சொரூபன். சிவகாமம் சிவத்தினபால் மீதூரும் இச்சை. சிவகாமி நேயமே திருமேனியாகவுடையவர். சிவகாமம் சிவஞானம் சிவானந்தம் சிவகிருபை என நான்கென்று சொல்லத் தக்கதாய் அதிசயமாய் அநுபவிக்கப்படுகிற ஏகம் திருச்சிற்றம்பல முடையான். இதனுல் காமம் என்பது மிகமேலாகிய அன்பு என அறிக. சிவகாமிநாயகர் திருவடி வாழ்க.

சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணி
கொள்தில்லை கண்டேனே.

'ஞான மன்பே என்றனர்
ஞானமுண்டார்'

என்பது பெரியபுராணம்.

'யாவராயினு மன்ப ரன்றி
அறியொணுமலர்ச் சோதியான்'

என்னுந் திருவாக்கு அன்பே ஞானமுமாகித் தலைவனை அநுபவித்தற்கு உபகாரமாகுமென்பதையுணர்த்தும்.

'மறைய நின்றுளன் மாமணிச்
சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினுல்
முறுக வாங்கிக் கடையமுன்
னிற்குமே'

என்னும் அப்பர் திருவாக்கு அன்பும் ஞானமும் தலைவன் வெளிப்படுதற்கிடமாதலை உணர்த்தும். காமப்புணர்ச்சியை முன்னுறு புணர்ச்சி என்பது முண்டு. மறைய நின்றுளன் முன்னிற்றலின் முன்னுறு புணர்ச்சி எனப்பட்டது போலும்.

களவியல் இரண்டாஞ் சூத்திரம்.

'அதுவே,
தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயி னெத்தல்
என்பது.

'தானே யவளே' என்பது கோகழியாண்ட குருமணியின் திருவாக்காயின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நானிவளாம் பகுதிப் பொற்பாரறிவார்' என்பது மணிவாசகமணியின் மணிவார்த்தையாகும்

உயிர்க்குயிர், உயிர் எனவும், பதி, பசு எனவும் பரமான்மா, ஆன்மா எனவும் மெய்ந்நூல்கள் சொல்லும் பொருள்கள் தான் அவள் என இங்கே பேசப்படுகின்றன

பரமான்மாவும் ஆன்மாவும் ஒன்றும் வேறும் உடனுமாய் நிற்பவை. 'தான் அவள்' வேறுநிற்றல். 'தானே அவள்' ஒன்ருய் நிற்றல். 'தானே அவளே' உடனாய் நிற்றல்.

மற்ெருரு நுண்மை இங்குள்ளது. 'தான் அவளே' என்பது அது.

'தன்னைக்கண்ட என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசன்'
என்னும் பொன்வண்ணத் தந்தாதியும்

'அன்போ டுருகி அகங் குழைவார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண்ணுதே'

என்னுந் திருமந்திரமும் சொல்லும் அநுபவம் இது.

'என்னுனை என்னப்பன் என்பார்கட்கின்னமுதை'

என்னுந் திருவாக்கிலே 'என்னுனை' என்பது 'என்றன்மையானை' எனப் பொருள் காட்டுகின்றது.

'அவனிவ னுன தவனருளாலல்ல
திவனவ னுகானென் றுந்திபற
என்று மிவனேயென் றுந்திபற'

என்பது திருவுந்தியார் என்னும் அற்புத ஞான நூல்.

தலைவனது பெருங்கருணை இருந்தவாறு! ஆன்மாவின் பொருட்டு அவன் எளியனுகின்ருன்! தன்பெருமையை ஆன்மாவின் சிறுமை அநுபவிக்கத்தக்கபடி வரும் வல்லமை வாழ்க!

'அணங்குசா லுயர்நிலை தழீஇப்
பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங்
காட்டி'

என்னுந் திருமுருகாற்றுப்படைப் பகுதி தலைவன் அஞ்சிக் கூசத்தக்கதாகிய தன் பெருமையை அடக்கிக்கொண்டு அநுபவித்தற்கினிய இளநலமுடையனாய வெளிப்படுதலை உணர்த்துகின்றது!

தான் தானே, அவள் அவளே. அவன் ஆளுவான், ஆண்டான், ஆண்மையன், பெரியோன். கருணையன், அவள் அன்பினள், சிறியள், அடிமை, பெண்மையள். அவள் என்னும் பெண்பாற் சொல் ஆன்மாவைக் குறித்தமை சிந்திக்கத்தக்கது.

முத்திநிலையிலும் ஆன்மா அடிமையே என்பதை

'தைவ மென்றுந் தைவமே'

என்று சிவஞானபோதம் கூறும்.

இனி, 'தமியர் காண்' என்னுந் தொடரிலுள்ள இருவரது தனிமையும் காட்சி என்பதும் விசாரிக்கற்பாலன.

அவன்,

'தனை யொப்பாரையில்லாத் தனி'

'ஏகன்'

'அவனே'

யாக நிற்றலுமுரியன்.

அவள் பாசநீக்கம் பெற்ற தனிமையள். அவன் அநாதியே பாசம்பற்ருதவன்.

'சாண்பாரா கண்ணுதலாய்க் காட்டாக்காலே'

'காட்டாதனவெல்லாங் காட்டிச் சிவங்
காட்டி'

என்றபடி அவன் காணுதலாவது அவட்குத் தனனைக் காட்டுதல்.

'என்பொலா முருக நோக்கி அம்பலத்
தாடுகின்ற
என்பொலா மணி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றபடி ஆன்மா உணரத்தக்கதாக அருளுக்கஞ் செய்தலும காணுதலாகும்.

அவள பாசநீக்கம் பெற்றபொழுது காணுதற்கு வேறு பொருள் இல்லாமையினாலே தலைவனைக் காண்பாள், காமிப்பாள், நுகர்வாள்!

'பொருந்தவா கயிலை புகுநெறி
இதுகாண் போதராய்'
'இங்கேவாவென றங்கே கூவு' தலைக்
காண்பாள் புகுவாள்.

முன்னே 'பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்'. முத்தியில் 'பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்'!.

பாசநீங்கியவழி, சிவம் தானே வந்து தலையளி பொழிதலை

'பாசமொருவத் தண்ணிழலாம்பதி'
'அறபுதம்போல்
ஆனுவறிவாயளவிறந்து தோன்றுனே
வானே முதல்களையின வந்து'
எனவரு'ப சிவஞான

போதத்தானறிக.

அத்துவித மகாவாக்கியமாகிய 'பெருப்பெயர்', 'தத்துவமசி' எனப் பொது வகையாகவும் 'சிவத்துவமசி' எனச் சிறப்பு வகையாகவுஞ் சொல்லப்படும். 'நானொழிந்து சிவமானவாபாடி' என்பது சிவத்துவமசி என்னும் பொருள்தருவது. 'நானிவளாம் பகுதிப் பொற்பு' என்பது தத்துவமசி என்னுங் குறிப்புடையது

இருவயினொத்தல் என்பது பெத்த நிலையில் தலைவன் ஆன்மாவின் வழிநின்று உபகரிததலையும் முத்திநிலையில் ஆன்மா தலைவன் வழிநின்று அவனை நுகர்தலையும் உணர்த்திற்று.

'அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனுகி'

என்னுஞ் சிவஞானபோதப் பகுதி இதனை விளக்கும்.

இனி, தலைவனது கருணையும் ஆன்மாவின் ஆசையும் ஒன்றினென்று முறப்பட்டுப் புணர்ச்சியின்பம் விளைதற்குக் காரணமாதலை உணர்த்திற்றெனலுமாம்.

1. i. ஆனந்தமாய் தேனினைச் சொரிந்து
புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே'
ii. யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்
பிடித்தேன்'
2 i. தானேவந் தெம்மைத் தலையளித்
தாட் கொண்டருளும்
வான்வார் கழல்'
'செய்தனவே தவமாக்கும் அத்தன்
'பாதகமே சோறு பற்றியவா'
'மாறிலாதமாக் கருணை வெள்ளமே'
'பிணக்கிலாத பெருந்துறைப் பெரு
மான்'
'உருகிப் பெருகி உளங்குளிர முகந்து
கொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்
கடல்'
'என்னு லறியாப் பதந்தந்தாய்'
ii. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோவிதற்கு நாயகமே'
ஆனந்த வார்கழலே யொப்பாக
வொப்புவித்த உள்ளம்'
'ஒத்துச் சென்றுதன் திருவருட்
கூடிடு முபாயம்'
3. 'தந்ததுன்றன்னைக் கொண்ட
தென்றன்னை'

என்பன காண்க.

'ஆனந்த வெள்ளத் தழுந்துமோராருயிர் ஈருருக்கொண்டானந்த வெள்ளத் திடைத்திளைத்தல்' என்னும ஞானத் தொடர் தலைவன் தலைவி யிருவரதும் அத்துவிதக் கலவியை விளக்கஞ் செய்வது

கலப்பான் ஒன்றுதலின் ஓருயிர் என்றும் பொருட்டன்மையால் வேருதலின் ஈருருவென்றும் நுகர்ச்சிக்கண் உடனுதலின் திளைத்தல் என்றுங் கூறினார்

களவியல் 'தானே அவளே' என ஆன்மாவின் பெண்மையை உணர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்று சிவஞானபோதம் 'அவனே தானே' என்பது பரமான்மாவின் ஆண்மையை உணர்த்திற்று திருக்கோவையார் கூறும் ஓருயிர் ஆன்மாவிற்குப் பரமான்மா உயிராதலையுணர்த்தி அதன் தலைமையை விளக்குகின்றது! ஆருயிர் என்பது பரமான்மா ஆன்மா என்னும் இரண்டையும் உணர்த்தும் அருமையுடையது. தலைவன் அழுந்தாதறிபவன், நுகர்ச்சி வேண்டாதவன என்றும். இயல்பாகவே ஆனந்தன், தன்னைத் தானே நுகர்பவன், அன்பரது அன்பை நுகர்பவன் என்றும் புகழப்படுகின்றான். சிவாநுபவம் சிறிதுமில்லாத கீழ்களாகிய நாம் இவைகளைப்பற்றி யாது சொல்வோம்! சிந்தித்து இயைபு காண முயல்வோம்.

'பாதகமே சோறு பற்றியவா'

என்னுந் திருவாக்கு சண்டேசரது அன்பு தலைவனுக்குத் திருவமுதானமையைப் புகழ்கின்றது. தலைவன் திருமலையினின்றும் சிறுத்தொண்டரது அன்பை நுகர்தற்பொருட்டு வந்தருளினனென்று பெரியபுராணம் கூறுகின்றது

'அன்பு நுகர்ந்தருளுதற்கு விடையவர்தாம் சித்தமகிழ் வயிரவராய்த் திருமலை நின்றணைகின்றான்'
'குவளைக் கண்ணி கூறன் காண்க'
அவளுந் தானு முடனே காண்க'
ஆன்மா தலைவனிடந்துய்ப்பது
'எஙகுமிலாததோரின்பம்'
'புணருந்தொறும் புதிது'
'அந்தமிலா ஆனந்தம்'
'பாதியாய் முற்றுமாய்'

இச்சையுமாய்த் திருப்தியுமாய் நீள்வது.

'இறவாத இன்ப அன்'பைச் சொல்லுதற்கென்று தலைவன் அருளிய வார்த்தையமிர்தம் தமிழ்.

'தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டான்' தானேவந்து தலையளி செய்து.

'கலந்தாண்டான்'

'சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரடோள் கூடுவேன்'.

**மாசின் மணியின் மணிவார்த்தை.**

தலைவன் 'மனவாசகங் கடந்தான்' தலைவி 'வாசகம் மாண்'டாள். தலைவனுந் தலைவியும் அத்துவிதக் கலவி செய்யும் பொழுது எழுந்திசைத்ததும் அதிரகசியமானதும் அத்தியற்புதமானதும் மானிடப்பிறவியினும் எத்தனையோ மடங்கு அருமையுடையதும் 'உறுதோறுயிர்தளிர்ப்பத்தீண்'டிச் சிவாநுபவந் தருவதும் எங்குமிலாததோரின்ப அன்புவடிவாகிய' தமிழென்னும் பெயரதொன்றினால் உணரப்படுவதுமாகிய மணிவார்த்தையின் பெருமையை, இனிமையை, நின்மலத்தன்மையை, தமிழ்ச்சொற்களின் ஆனந்த நடனத்தை உணரவும் சொல்லவும் அழுக்குமனமும் புல்லறிவுமுடைய கீழ்களாகிய நாம் வல்லேமோ!

திருக்கோவையார் என்பதிலுள்ள 'ஆர்' தில்லைச் சிந்தாமணியின் தீந்தமிழ்த் திருக்கரத்தாற் சூட்டப்பட்ட உவகைமலரன்றோ! சிற்றம்பலவன் முன்னிருந்து விரும்பிவிரும்பிக் கேட்ப மணிவாசகர் உருகி உருகி உரைதடுமாறி வாய்மலர்ந்த தமிழின் ஒவ்வோரெழுத்தும் பிறவிநோயையும் மரணத்தையும் மரண பயத்தையும் தீர்க்கும் சிவாமிர்தமன்றோ. 'என்பிடைவந்தமிழ் தூற நின்றுடு' கின்ற சிற்றம்பலவனிடம் ஆனந்த நடனம் பயின்று களிக்கும் தமிழ்ச் சொற்களாகிய கன்னியரது புதுநலம புணருந்தொறும புதிதே! மணிவார்த்தையை நுகர நமக்குப் புண்ணியமிருந்தது நாமும் பெரியேம்! நமக்கும் சிற்றம்பலவனிடம் காமப்புணர்ச்சி வாய்க்கும், அவன் திருச்செவிகளினாலே மணிவார்த்தையை நுகர்வோம். அன்புக்கு எத்தனை வாய்பாடுகள்! தலைவனது சேவடியைத் தீண்டும் அன்புமயமான குறிப்புக்கள் எத்தனை! சிவகீர்த்தி வெள்ளத்திலே திளைப்போம்.

'ஆடுவான் சேவடியே பாடுதும்'!

**திருச்சிற்றம்பலம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதப்பொருள்

சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள்

வேதம் என்பது 'வித்' என்னும் வினையடியிற் பிறந்தது. அறிதற்கருவி எனப் பொருள்படும், மறை, நிகமம், சுருதி, ஆரணம் என்பன இதன் மறுபெயர்கள். வேதம் பரதகண்டத்து ஆஸ்திகர்களாற் கொண்டாடப்படும் சமயநூல். இது கீழைத்தேயத்தவர்களுக்கே சிறப்பாக உரித்தான ஒரு சொல்லெனினும் அதன் சிறப்பு நோக்கி வேற்றுச் சமயத்தவர்களும் மேலைத்தேயத்தோரும் அதனை இன்று தமதாக்கிக்கொண்டதோடு தம்முடைய அகராதிகளிலும் இதைச்சேர்த்துக்கொண்டுவிட்டனர். எனவே விவிலிய வேதம், கோரான்வேதம், திரிபிடகவேதம் என்பன இன்று வழக்காற்றில் இருக்கின்றன.

இன்று உலகப் பிரசித்தமான வேதங்கள் நான்காம். அவை இருக்கு யசுர், சாமம், அதர்வணம் என்பன. வேத உண்மைகளைக் கதைகள் மூலமாகக்கூறுவன புராணங்கள். வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளுகிறவர்கள் சகலரும் இந்துக்கள் என்னும் பொதுப்பெயரால் அழைக்கப்படுகிறார்கள். ஆனால் வேதத்தைப்பொதுநூலாகவும், ஆகமத்தைச் சிறப்புநூலாகவும் கொள்கின்றவர் சைவசமயிகள் எனப்படுவர். இவர்களுக்கு முதனூல்கள் வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம்.

வேதம் இருகாண்டங்களை உடையது. அவை கர்மகாண்டம், ஞானகாண்டம் என்பனவாம். கர்மகாண்டம் மந்திரம், பிராமணம் என இரண்டு விரிவுடைத்து. மந்திரம் தோத்திர ரூபமாயும், பிராமணம் யாகங்களினுடைய விதிகளைக் கூறுவதாய், விதிவாதம், அருத்தவாதம் என இரு பிரிவுடைத்தாயுமிருக்கும். விதிவாதம் என்பது இன்னது செய்தல் வேண்டும் என விதிப்பது அருத்தவாதமாவது விதியை அனுட்டிப்பதனால் வரும் பிரயோசனத்தை உள்ளதினாலும், இல்லதினாலும் வருணித்துச் சொல்வது. ஞானகாண்டம் இறைவனைப்பற்றிக் கூறுவது.

வேதத்தின் உட்பிரிவுகள் பஞ்சிகை, அத்தியாயம், காண்டம், அநுவாகம், பிரச்சினம் என்பனவாம். இதன் ஆறங்கங்கள் சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிடம், கல்பம் என்பன. இதற்கு இராவணன் சந்தமுதலியன வகுத்தான்.

இதனைச் சோமுகன் என்னும் அசுரன் திருடிச் செல்லப்பின் விஷ்ணுமூர்த்தி அன்ன உருவாய்ப் பிரமனுக்கு உபதேசித்தார். இஃது ஒருமுறை முனிவருருவாய்க் கண்ணனை நோக்கி "யார் வணங்கத்தக்கவர்?" என்று வினவியதாம். அப்பொழுது கண்ணபிரான் "சிவமூர்த்தி ஒருவரே" என்றாராம். அங்ஙனமே சிவபிரானை வேதம் வணங்கியது என்பது கூர்மபுராணவரலாறு. இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டே மணிவாசகரும் "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்றார்.

வேதத்தின் முடிபு உபநிடதம் ஆதலின், உபநிடதங்கள் வேதசிரசுகள் எனவும் படுவன. மீமாம்ச சாஸ்திரிகள் வேதம் சிருட்டிக்கப்பட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல என்றும், அவைகள் அநாதி என்றும் கூறுவர். நியாய வேதாந்திகள் ஈவர வாக்கியம் என்பர். கடவுள் வேதங்களைப் பிரமனுக்கு உபதேசித்தார். பிரமன் வேதங்களை இருடிகளுக்கும் இருடிகள் அவற்றைத் தம் சீடருக்கும் உபதேசித்தனர் என்பர்.

இதனைப் பின்னர் வேதவியாசர் நான்காகவகுத்தனர் என்பர். இருக்கு வேதம் பைலருக்கும், யசுர்வேதம் வைசம்பாயனருக்கும், சாமவேதம் ஜைமினிக்கும். அதர்வவேதம் சமந்துவுக்கும் வியாசமுனிவரால் உபதேசிக்கப்பட்டன.

வேதவாக்கியங்கள் சில பல பொருள் கொள்ளத்தக்கனவாயிருத்தலினலே சாங்கியர், மீசாஞ்சகர், ஏகான்மவாதிகள்,. பாஞ்சராத்திரர் என்னும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களாலும் வேதம் எனும் சொல் கைக்கொள்ளப்படுகின்றது.

வேதங்களை மேலாழ்ந்தவாரியாகப் பார்க்கும்பொழுது அக்கினி, வருணன், இந்திரன், வாயு, பிரமன், விட்டுணு முதலிய பல தெய்வ வணக்கம் காணப்படுவதுபோல் தோற்றினும் அங்ஙனம் கொள்ளுதல் தவறும். இருக்குவேதத்திற் கடவுள் ஒருவரேயெனக் கூறப் பட்டிருக்கின்றது. ஆற்று நீரெல்லாம் கடலையே சென்றடையுமாறுபோல, ஒழிந்த தேவர்களுக்குச் செய்யப்பட்ட வணக்கங்கள் எல்லாம் முழுமுதற் கடவுளாகிய சிவபிரானையே சென்று அடையும். சிவபிரான் பொதுநூலாகிய வேதத்தில் ஏனைய கடவுளருடன் பொதுவாக வைத்து எண்ணப்படுவர். சிறப்பு நூலாகிய சிவாகமத்தில் பதிப்பொருளாகவைத்து எண்ணப்படுவர். ஆகலின் ஆகமப்பொருளும் வேதப்பொருளும் ஒன்றேயென்று துணியலாம்.

வேதப் பொருளாகிய இறைவனையே திருஞானசம்பந்தர் முதலிய மூவரும் மணிவாசகப் பெருந்தகையும் போற்றிப் புகழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள் இலக்கியப் பரப்பில் பல்கிக்கிடக்கின்றன. உதாரணமாக அவற்றுட் சிலவற்றைக் காட்டுதும்.

சேக்கிழார் சுவாமிகளும் திருத்தொண்டர் புராணம் பாடத்தொடங்கி பரசமய கோளரியாம் ஞானசம்பந்தப் பெருந்தகையின் திருத்தொண்டினைச் சிறப்பித்துக் கூறுமுகத்தால் "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்று வாய் மலர்ந்தருளினர்.

சிற்றம்பலமாகிய சிதாகாசப் பரவெளியினின்று வேதம் தோன்றிற்று. அவ்வேதத்தினின்று வேதப் பொருளாகிய மெய்யுணர்வும், அம் மெய்யுணர்வில் இறைவன் வெளிப்பாடும் ஏற்பட்டன. அச்சிவஞான சேர்தியானது அறனெடுபடாத பொருள் இன்பங்களை அழித்து வெற்றிபெற்றது. அவ்வெற்றியைக் குறிக்கவே கனகசபையில் ஆனந்த தாண்டவம் செய்தருளும் இறைவன் கொன்றைமாலையைச் சூடியுள்ளான்.

எமது வேதப்பொருள் தில்லைச் சிற்றம்பலத்துளீசனேரேயாவர். ஆதியுமந்தமுமில்லா அரும்பெரும் சோதியாகிய இப்பொருள் வேதத்துக்கு ஆதியந்தமாக விளங்குவது. அது வேத ஒழுக்கத்தானும், பத்தியானும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தானும் பெறப்படுவது. வேதத்தினுள் விதந்தோதப்பட்ட அறனும், பொருளும், இன்பமும் அவற்றின் காரண காரியங்களும், இறைவனே என்பதை யாமுணர்தல் வேண்டும். இவ்வுண்மைகளைப் பின் வரும் செய்யுளில் மணிவாசகனார் வைத்தமைத்தவிதம் படித்து இன்புறற்பாலது.

"காதார் குழையாடப் பைம்பூண் கலனு [டக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
**வேதப் பொருள்பாடி** அப்பொருளா மாபா [டிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார் [பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை [தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்".

இன்னும் அன்னைப்பத்தின்கண்ணே

"வேத மொழியினர் வெண்ணீற்றர் செம் [மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்"

என்று கூறியிருப்பதும் ஆழ்ந்து சிந்திக்கற்பாலது. முழக்கப்படும் நாதமாகிய பறையும், பாடப்படும் சாமவேதமாகிய கீதமும் செவிக்கு இன்பம் பயப்பன. அவரது திருவெண்ணீற்றுப் பூச்சும், அதன்மேல் அந்நீற்றகத்துப் பொலிந்து விளங்கும் அவ்விறைவனது செவ்வண்ணத்து இயல்பும் காட்சிக்கு இன்பம் பயப்பன. இங்ஙனம் மக்கள் விழையும் இருபெரு இன்பங்களாகிய இவ்விரு இன்பங்களையும் ஒருங்கே அளிக்கும் இறைவன் கருணைதான் என்னே! மேலும்,

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்கு
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமாய் இன்பமுமா யினார்க்குப்
பாதியுமாய் முற்றுமா யினார்க்கு
பந்தமுமாய் வீடுமா யினார்க்கு
ஆதியு மந்தமுமா யினார்க்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

என்னும் திருப்பொற்சுண்ணச் செய்யுளால் வேதத்தின் இரு பெரும் பிரிவுகளாகிய கர்மகாண்டம், ஞான காண்டம் என்னும் இரண்டையும் வாதவூரெங்கோன் சந்தேகத்துக்கிடமின்றி விளக்கி வற்புறுத்தியுள்ளார். இதில்வரும் சோடிப்பதங்களை ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாகக் கொள்ளாது ஒன்று மற்றதன் முடிக்கும் பொருளாகவே கொள்ளப்பட வேண்டும். ஒன்றன் சிறப்பு மற்றையதின்கண் தங்கியுள்ளது. மேலும் ஒன்று மற்றையதற்கு இன்றியமையாதது. எனவே எம்பரமபதியானவர் வேதமந்திரமாயுள்ளான். அவற்றின்வழிச் செய்யப்படும் வேள்விகளுமாயுள்ளான். வேதம் வேள்விக்கு இன்றியமையாதது. வேதநெறிப்படி ஒழுகி வேள்விபுரிவோர்க்கு — அது ஞானவேள்வியாயினும் சரி — கர்ம வேள்வியாயினும்சரி — அவற்றால் வரவேண்டிய பயன் வந்தேதீரும்.

---

"உத்தரகோச மங்கை யுள்ளிருந்து
வித்தக வேடங்காட்டிய இயல்பும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூத்தப்பெருமான்

பண்டிதர் S. அருளம்பலம்

கடவுள் எல்லா உலகங்களுக்கும் எல்லா உயிர்களுக்கும் முதல்வனுக விளங்குகிருர். அவர் அறிவும் ஆற்றலும் உள்ளவர். அவருக்குப் பிறப்பு இறப்பு இல்லை. அவர் அநாதியாகவே உள்ளவர். கடவுளைப்போலவே உயிர்களும் அநாதியாக உள்ளன. உயிர்களிடத்தில் ஆணவம் கன்மம் மாயை என்னும் மூவகை மலங்கள் உண்டு. இவை உயிர்களைப் பந்தித்து நிற்பதாற் பாசம் என்றும் சொல்லப்படும்.

## ஐந்தொழில்

உயிர்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பேரின்பத்தை அடையும்பொருட்டு இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்தருளுகிருர். உடம்பு மன முதலிய கருவி உலகம் முதலியவற்றைப் படைத்து உயிர்களை வெளிப்படச் செய்தலும், உயிர்களுக்குக் கொடுக்கப்பட்ட உடம்பு முதலியவற்றை நிலைபெறுத்தலும், உயிர்களுக்குக் கொடுக்கப்பட்ட உடம்பு முதலியவற்றை ஒடுக்கிப் பிறப்பு இறப்புக்களிற் சுழன்று வருந்தும் உயிர்களுக்கு இளைப்பாற்றலும், இருவினைப் பயன்களாகிய போக்கியப் பொருள்களில் அமிழ்த்துதலும், ஆணவம் முதலிய பாசங்களை நீக்கி இன்புறுத்தலுமாகிய ஐம்பெருந் தொழில்களும் இறைவன் உயிர்கள் மேல் வைத்த பேரருளாற் செய்யப் படுவனவாதலின் அருட் செயல்களேயாம்.

"அழிப்பிளைப் பாற்ற லாக்கம்
அவ்வவர் கன்ம மெல்லாம்
கழித்திடல் நுகரச் செய்தல்
காப்பது கன்ம வொப்பில்
தெழித்திடல் மலங்க ளெல்லா
மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு
பார்த்திடி னருளே யெல்லாம்."

எனச் **சிவஞானசித்தியாரில்** வருதல் காண்க. இவ்வைந்து தொழில்களை யும் இறைவன் விளையாட்டாகச் செய் தருளுவார் என்பது "காத்தும் படைத் தும் கரந்தும் விளையாடி" எனத் **திருவாசகத்து** வருதலானும் அறியப்படும். விளையாட்டெனின் சிறு பிள்ளைகள் செய்யும் விளையாட்டைப்போலத் தம் பொருட்டுச் செய்யப்படும் பயனில் செயலோவெனின் அற்றன்று. இவை தம்பொருட் டன்றி உயிர்களாகிய பிறர் பொருட்டுச் செய்யப்படும் பய னுள் செயல்களேயாம். "ஐயாநீ ஆட் கொண்டருளும் விளையாட்டின், உய் வார்கள் உய்யும்வகையெல்லாம் உய்ந் தொழிந்தோம்" என **மாணிக்கவாசக அடிகள்** கூறுதல் காண்க.

## ஆனந்த நடனம்

படைத்தல் முதலிய ஐந்தொழில் களும் இறைவன் செய்யும் ஆனந்த நடனத்தால் நடைபெறுகின்றன. இறைவன் ஞானக்கூத்தன். அவன் திருக்கூத்து அம்பரத்தும் அம்பலத் தும் நிகழ்கின்றது. "அம்பரவா அம் பலத்தெம் பெருமானே" என்ருர் மாணிக்கவாசக அடிகளும். அம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் மொழி ஆகாயம் அல்லது வெளி எனப் பொருள்படும். இருதய கமலத்தில் நுண்ணிய பரவெளி அமைந்திருக்கின்றது. இச் சூக்கும ஞானப் பரவெளியைச் சிதாகாசம் என்றும் தகராகாசம் என்றும் கூறுவர்.

இப் பரவெளியில் சூக்குமமாகத் திருக்கூத்து இயற்றும் இறைவன் புறத்தே தில்லைச் சிற்றம்பலத்தும் திருக்கூத்து இயற்றுகின்றான். வியாக்கிரபாதரும் பதஞ்சலி மகாமுனிவரும் தவஞ்செய்து இறைவன் ஐந்தொழில் இன்பத்தைக் கண்டுகளித்த இடம் தில்லையாகும். இந் நிலவுலகத்திற்குத் தில்லை இருதய கமலம் போன்றது. 'உடம்பும் உலகமும் தம்முள் ஒப்புடையனவாதலின், இடை பிங்கலை சுழுமுனையென உடம்பிலமைந்த நாடிகளிற் சுழுமுனை நாடி உடம்பின் நடுவே ஓடுதல்போல இந்நிலவுலகத்தில் அந்நாடி தில்லைக்கு நேரே போம். உடம்பின் நடுநாடியின் நடுவேயமைந்த இருதய கமலத்திலுள்ள அருள் வெளியிலே இன்பக் கூத்து இயற்றுமாறுபோலப் புறத்தே தில்லைக்கண் மூல இலிங்கத்துக்குத் தெற்கேயுள்ள அம்பலத்தின் கண் திருக்கூத்து இயற்றுவோம்' எனவும் இறைவன் ஆதிசேடனுக்குக் கூறியதாகக் **கோயிற்புராணம்** கூறுகின்றது. தில்லைப் பொதுவின்கண் இறைவன் ஓவாது திருநடம் செய்தல், "தில்லைச் சிற்றம்பலத்துப் பயில்கின்றகூத்தன்" எனத் **திருக்கோவையாரில்** வருதலானுமறிக. அத்திருநடம் அருட்செயல் ஐந்தையும் புலப்படுத்த நிகழ்கின்ற ஆநந்த நடனமாகும் என்பது.

"அரவும் அம்புலியும் பரவும் அருள்தில்லை
அம்பலத்தில் பரவும்
ஆனந்தத் தாண்டவம் செய்வோம்,"

என இறைவன் பார்வதி தேவிக்குக் கூறுவதாகத் **திருப்புத்தூர் புராணத்து** வருதலாலும் அறியப்படும்.

### நடராச வடிவம்

மனம் வாக்குகளுக்கு எட்டாத தன்மையை யுடையவன் இறைவன் "வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே'; (சிவஞான போதம்) எனவும் 'மனம் வாக்கினிற் றட்டாமல் நின்றதெது" (தாயுமானவர்) எனவும் வருவன காண்க. இறைவன் திருவருளே கண்ணாகக் கண்ட மெஞ்ஞானிகள் தாம் கண்ட அவ்விறைவனின் காட்சியை ஏனையோர்க்கு எடுத்துரைத்தனர். அவர்களுடைய அனுபவத்தைத் துணையாகக்கொண்டு இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்றெழுதிக் காட்டொணாத இறைவனுக்குத் திருவுருவங்கள் ஏற்படலாயின.

இறைவனின் ஆனந்த நடனத்தை உணர்த்துவது நடராச வடிவம். நடராசப்பெருமான் திருச்சடையிற் பிறையை அணிந்திருக்கிறார். திருச்சடை இருபுறமும் நீண்டு பரந்து விளங்குகிறது. திருமுகத்தில் நெற்றிக் கண்ணும் புன்முறுவலும் காணப்படுகின்றன. திருக்கரங்களில் ஒன்று துடியை ஏந்தியிருக்கிறது. ஒரு திருக்கரம் அபய முத்திரையாக அமைந்திருக்கிறது. இத் திருக்கரத்தில் ஒரு பாம்பு சுற்றிக்கொண்டு படமெடுத்து ஆடுகிறது. ஒரு திருக்கரம் தீச்சுடரை ஏந்தியிருக்கிறது. மற்றொரு திருக்கரம் தூக்கிய திருவடியைக் காட்டுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றிற் கட்டப்பட்ட உதரபந்தனத்தின் முந்தானை திருநடத்தின் வேகத்தினல் இடப்பக்கமாக அலைகிறது. இடத் திருப்பாதம் தூக்கிய திருவடியாக அமைந்திருக்கிறது. வலத்திருப்பாதம் ஊன்றிய திருவடியாக அமைந்திருக்கிறது. திருவடிகளிற் சிலம்புகள் அமைந்திருக்கின்றன. ஊன்றிய திருவடியின்கீழ் குறுகிய வடிவுடைய முயலகன் குப்புறக் கிடக்கிறன். அவன் தலை கூத்தப்பிரானின் வலப்புறமாகவும், கால்கள் இடப்புறமாகவும் அமைந்திருக்கின்றன. கீழே உள்ள பீடம் தாமரை மலர்போல அமைந்திருக்கிறது. திருவாசி திருவுருவத்தைப் பொருந்தி வட்ட வடிவாக அமைந்திருக்கிறது. திருவாசியில் தீச்சுடர்கள் விளங்குகின்றன. இவ்வாறு நடராச வடிவம் அமைந்திருக்கிறது.

## நடராசவடிவத்தின் தத்துவப்பொருள்

நடராச வடிவத்தில் பல தத்துவப் பொருள்கள் அடங்கியுள்ளன. நடராசப் பெருமான் வலத்திருக்கரத்தில் துடியை ஏந்தியிருக்கிறர். துடி ஒலியின் அறிகுறி, உலகத் தோற்றங்கள் அனைத்துக்கும் ஒலியே காரணம். துடியை எந்திய திருக்கரம் **படைத்தல்** தொழிலின் அடையாளமாகும். வலத் திருக்கரங்களில் ஒன்ருகிய அபயகரம் 'அஞ்சன்மின்' என்ற திருக்குறிப்பைக் காட்டுகிறது. இது **காத்தல் தொழிலின்** அடையாளமாகும். நடராசப் பெருமான் இடத் திருக்கரத்தில் தீச்சுடரை ஏந்தி ஆடுகின்ருர். "அனலேந்தி ஆடுவான்" என்ருர் திருவாசகத்தும் (திருவம்மானை 17) தீச்சுடரை ஏந்திய திருக்கரம் **அழித்தல்** தொழிலைக் குறிக்கிறது. ஊன்றிய திருவடி **மறைத்தல்** தொழிலின் அடையாளமாகும். தூக்கிய திருவடி குஞ்சித பாதமாகும். குஞ்சித பாதம் அருளல் தொழிலைக் குறிக்கிறது. இவற்றை,

"அரன்துடி தோற்றம் அமைப்பில் திதியாம்
அரன் அங்கிதன்னில் அறையில் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமரும் திரோதாயி
அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே."

எனத் **திருமந்திரத்தும்,**

"தோற்றந் துடியதனில்
தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே
சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில்
உற்றதிரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

என **உண்மை விளக்கத்தும்** வருவனவற்ருலுமறிக.

முயலகன் ஆணவத்தின் வடிவம். ஆணவம் செம்பிற் களிம்புபோல உயிர்களோடு இயற்கையாக உடன் நின்று அவற்றின் அறிவையுஞ் செயலையும் மறைத்து நிற்பது. திருவாசகம் முதலான நூல்களில் 'மலம்' என்னும் பெயரினல் வழங்கப்படுவது இதுவேயாம். நடராசப் பெருமான் முயலகனை முதுகு நெரியும்படி மிதித்து ஆடுதல் ஆணவ வலியைத் தன் திருவடிக் கீழ்ப்படுத்துதலைக் காட்டுகிறது. நடராசப்பெருமானின் திருச்சடை திருநடஞ் செய்யும் வேகத்தினல் அவிழ்ந்து புரிசடையாக இருபுறமும் நீண்டு விளங்குகிறது. திருச்சடை ஞானத்தின் அடையாளம். "நுண்சிகை ஞானமாம்" என்பது **திருமந்திரம்.** இறைவன் திருச்சடைமேல் பிறையைத் தாங்கியுள்ளார். அது ஒரு கலைப்பிறையாகும் என்பது, "கலைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு திங்கண் மிலேத்த சிற்றம்பல வன்" என்புழிக் 'கலேச்சிறு திங்கள்— ஒரு சிறு கலேயாகிய சிறிய பிறை' எனவும்,

"தாரென்ன வோங்குஞ் சடைமுடிமேற்
றனித்திங்கள் வைத்த
காரென்ன வாகுங் கறைமிடற் றம்பலவன்."

என்புழித் 'தனித்திங்கள் — ஒரு கலே யாகிய திங்கள்' எனவும் வரும் **திருக் கோவையார்** உரைப்பகுதிகளால் (செய் யுள் 25, 56 உரை) அறியலாம். தக்கன் சாபத்தாற் கலே குறைந்த திங்களேச் சடையிற் றங்கிக் காத்தல் அடைக் கலம் புகுந்தாரைத் தலேயாலே தாங் கிக் காக்கும் இறைவன் பேரருட் குணத்தைப் புலப்படுத்துவதாகும்.

நடராசப் பெருமானுக்குத் திருக் கண்கள் மூன்று உண்டு. "நயனங் கள் மூன்றுடைய நாயகனே" என் றூர் மாணிக்கவாசக அடிகளும். மூன் றுவது கண் நெற்றிக்கண். "நிருத்தம் பயின்றவன் சிற்றம்பலத்து நெற்றித் தனிக்கண் ஒருத்தன்" எனத் திருக் கோவையாரினும் வருதல் காண்க. முக்கண்களேச் சூரியன் சந்திரன் அக்கினி என்பர். "முக்கண் மூன் றொளி" என்பது திருமந்திரம். இறை வன் திருமார்பில் நுண்ணிய பூணூல் அமைந்திருக்கிறது. "மார்பி னலேதே மையில் நுண்ஞாண்" (அகநா. கடவுள்) எனவும் "துண்டப்பிறையான் மறை யான் பெருந்துறையான், கொண்ட புரிநூலான்" (**திருவாசகம்**. திருவம் மானே 9) எனவும் வருவன காண்க. நூல் வேதாந்தத்தைக் குறிக்கிறது. "நூலது வேதாந்தம்" என்பது திரு மந்திரம். அரையிற் பொருந்திய ஞாண் நான்குவேதங்களேயும், கௌபீ னம் மெய்ந்நூலில் நிறைந்துள்ள பொருள்களேயும் குறிக்கும்.

"மன்னுகலே துன்னுபொருள்
மறைநான்கே வான்சரடாத்
தன்னேயே கோவணமாச்
சாத்தினன்காண் சாழலோ."

எனத் திருவாசகத்தும் (திருச்சாழல் 2) வருதல் காண்க. நடராசப்பெருமான் அரையிலும் திருக்கரத்திலும் பாம்பை அணிந்திருக்கிறூர். "அரையாடு நாகம் அசைத்தபிரான்" (திருத்தெள் 6) எனவும், "சிற்றம்பலத்தெங்கள் செல் வம் பாடிக், கட்டிய மாசுணக் கச்சை பாடிக், கவித்த கைம்மேல் இட்டுநின் றுடு மரவம் பாடி" (திருப்பொற். 19) எனவும் வருவன காண்க. இறைவன் பாம்பை அணிந்திருத்தல் குண்டலினி என்னும் சுத்த மாயையைத் தன்னு ளடக்கியிருத்தலாகிய உண்மையைப் புலப்படுத்துகிறது. வட்டவடிவாகிய திருவாசி ஓங்காரத்தைக் குறிக்கிறது. "ஓங்காரமே நல் திருவாசி" என்பது உண்மை விளக்கம். இவ்வாறு பல தத்துவப் பொருள்களேப் புலப்படுத் திப் பேரின்பத்துக்குக் காரணமாய் விளங்குகின்றது நடராச வடிவம்.

நடராசவள்ளலின் திருவடிகள் வாழ்க.

"மாயப்பிறவி உன்வசமே வைத்திட்டிருக்கும் அது
வன்றி — ஆயக்கடவேன் நானேதான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

காரைநகர்த் திண்ணபுர சுந்தரேசர்

# திருப்பதிகம்

காரைநகர் இயற்றமிழ் போதகாசிரியரும் வித்துவானுமாகிய சிவபதமடைந்த
திரு. த. நாகமுத்துப்பிள்ளை பாடியவை

விநாயக வணக்கம்

வெண்பா

செந்திருவாழ் காரைநகர்த் தேவசுந்த ரேசர்தம்மேற்
சந்ததமி ழிற்பதிகஞ் சாற்றவே — புந்தி தருஞ்
சோதி விநாயகனுர் தோன்றல் கயமுகனைக்
காதி விநாயகனுர் காப்பு.

## பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சுந்தர மமைந்தகனி யுமையம்மை பாகமுஞ்
  சுதனுறையு நின்க வானுந்
தூயமுக தாமரையி னழகொழுகு கருணையுந்
  தோமிலா நகை நிலாவுஞ்
சிந்துநீ ரார்சடா மகுடமும் வெண்பொடி
  செறிந்தசெம் பவளவடிவுந்
திகழுசங் கொடுதோடு பூண்டவிரு கன்னமுந்
  தேனிதழி மாலைமார்பும்
சந்தவுப வீதமு மான்மழுத் தீயைத்
  தரித்தசெங் கரமலர்களும்
சரணும் புயங்களுந் தனிவெள்ளை விடையின்மேற்
  றமியனேன் காணவருவாய்
கந்தனைத் தந்தருளு காரணு பூரணு
  கழனிவள நனிபொலிந்த
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
  கதிசுந்த ரேசபதியே.

பூமேவு வேதனும் பொன்மேவு மார்பனும்
  போற்றுமடி முடிகடெரியாப்
போதனே வேதனே நாதனே நீதனே
  புகழ்மறையின் முடியின் மணியே
பாமேவு கவிஞருரை பாக்களைக் கேட்டுருகு
  பரமகல்யாண குணனே
பாராதி யண்டங்கள் யாவையுந் தந்தவா
  பற்றலர் புரஞ்செற்றவா
மாமேவு வடமேரு வில்லாய் வளைத்திட்ட
  மாபரா பரவரதனே
மண்ணாதி யைம்பூத மானவடி வங்கொண்ட
  மாதேவ யென்னையாழ்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்றமிழ்ப் போதகாசிரியரும் வித்துவானுமாகிய
திரு. த நாகமுத்துப்பிள்ளை யவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமேவு கற்பகக் கையனே துய்யனே
கழனிவளை நனிபொலிந்த
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே.

தற்பரஞ் சோதியே சாதிகுண மில்லாத
தலைவனே சாந்த மலையே
சதுர்வேத வாகம புராணங்க ளறியொணுச்
சச்சிதா னந்தசிவமே
அற்புதா னந்தவருள் பொழிகின்ற மேகமே
அறிவினுக் கறிவானவா
ஆதியே சோதியே யம்பலந் தன்னிலே
யரியநட மாற்று முதலே
சிற்பர வியோமசிந் தாமணிக் குவியலே
தேனே நெடுஞ்சலதியே
தெள்ளமுத மேசென்ம மாற்றுதற் கடியார்கள்
தேடியலை யருமருந்தே
கற்பகச் சோலையே யென்றடிய னுன்றனைக்
கவிமாலை சூட்ட வருளாய்
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே.

பொல்லாத தீயரொடு கழகந் தனிற்சேர்ந்து
போதகலை யூட்டுபாவி
போந்தவா துலர் மிடியர் தங்களுக் கன்னநீர்
போற்றியீ யாதபாவி
இல்லாத சொல்லியே கயவரைக் கவிகளில்
எடுத்துப் புகழ்ந்தபாவி
யானெனு மகந்தைதா னெள்ளளவு மகலா
திருந்திட்ட கொடியபாவி
வல்லாள கண்டனுய்ப் படுவழக் குப்பேசி
வஞ்சித்த பெரியபாவி
வம்பர்க ளுடன்சேர்ந்து பஞ்சமா பாதகம்
வையத்தி யற்றுபாவி
கல்லாத பாவியேன் பொல்லாத குணநீக்கிக்
காத்திரட் சித்தல்வேண்டும்
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேச பதியே.

அருமையுட னேபெற்ற தாயும்பி தாவுநல்
லாசானு மிகவு மேன்மை
யானகுல தெய்வமும் பிறவிப் பெரும்பிணிக்
கருமருந்துஞ் சுற்றமும்
பெருமைமிகு குறைவற்ற செல்வமுந் துணைவியும்
பிரியமக ரரியநட்பும்
பேசரிய பரகதிகொ டுத்தருள்செய் வள்ளலும்
பிழையனைத் தும்பொறுக்குந்
தருமதுரை யானவனு நீயென்று வந்துநின்
சரணமே சரணடைந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவாக வேமன மிரங்கிநிர் மலமுத்தி
தந்தெனையு மடிமைகொள்வாய்
கருமைமயி லேறிவரு கந்தனைத் தந்தவா
கற்றவர் விழுங்குகனியே
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே.

வஞ்சியர்க ளிளமதி முகத்திலே யவர்கண்
மருட்டிலே மைப்பொட்டிலே
மானொத்த விழியிலே தேனொத்த மொழியிலே
வண்டனைய கார்குழலிலே
கொஞ்சுகிழி போற்பயிலு மிங்கிதந் தன்னிலே
குஞ்சிரிப்பின் நகையிலே
கொப்புச் சிமிச்கிபொன் னோலையணி காதிலே
கோத்தமுத் தணிமார்பிலே
சஞ்சீவி மலையைநிகர் முலையிலே இடையிலே
சர்ப்பபட தடமடுவிலே
சங்கவளை கொங்கைக் குலிக்கிலெளி யேன்மனஞ்
சாராம லருள்புரிகுவாய்
கஞ்சனுயி ரைக்கொன்ற மாயவன் மைத்துன
கருணைநிதி யெனையாளவா
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே.

அரிதான மானிடப் பிறவியைப் பெற்றுமென்
னறியாமை நீங்கவில்லை
அன்பென்று சொல்லவும் கேட்டதிலை யானெனு
ளகந்தைசற் றகர்வதில்லை
பெரிதான வெஞ்சின மடங்கவிலை யைம்புலப்
பிழைவழி யொதுங்கவில்லை
பேராசை தீரவிலை நல்லோ ரிணக்கமென்
பிறவியிற் கேட்டதில்லை
பரிதாவல் போலெங்க ளுந்தாவு பாழ்மனப்
பதைபதைப் படங்கவில்லை
பசுபாச பதிவினவி யெவ்வாறு நின்பதப்
பங்கயத் தடைவதம்மா
கரியமா றங்கையுமை யம்மையார் பாகனே
கருணாகரக் கடவுளே
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே.

திருநாவ லூரில்வரு சுந்தரர் முனஞ்சென்று
திருமணம் புரிபோதினிற்
சிறுவனீ நமதடிமை யென்றொரு பொய்யாவணஞ்
செங்கைமலர் கொண்டுகாட்டிப்
பெருநாவின் வல்லமறை யோர்களவை முன்புமெய்ப்
பித்தவரை வலிதிழுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தவென நந்தமைப் பாடுகென வருளியிரு
    பேதையர்கள் காதல்பூட்டி
ஒருநா ளிராப்போது தூதுசென் றும்பரவை
    யூடலையு மெளிதின்மாற்றி
உணவுநிதி நெல்லாதி யுந்தந்து முதலைவா
    யுறுமதலை வரநல்கியுங்
கருமாய் மலர்க்கழ லளித்தவா றெம்மையுங்
    கடைக்கண்வைத் தருளல்வேண்டும்
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
    கதிசுந்த ரேசபதியே.

வாதமுதன் முப்பிணியில் விளையுமெப் பிணியுநினை
    மனதினி னினைக்குமுன்னே
வந்தவழி தெரியாம லோடுமே பொல்லாத
    வஞ்சனை வருத்தபில்லி
ஏதமுறு சூனியம் முதலான கர்மங்கள்
    யாவையும் நீராக்குமே
இருளனெடு முனிகறுப் படல்வீர மாடனு
    மிடாகினியு மாகாளியும்
பூதவே தாளவிற லேமனுட னவனேவல்
    புரிகின்ற காலபடரும்
பொய்யாத நின்பெயருரைத்திடி னடுங்கிவாய்
    பொத்தியே யோடிவிடுவார்
காதலாய் நின்பெருமை யறிவதற் கெளியதோ
    காமனைக் காய்ந்த நிமலா
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
    கதிசுந்த ரேசபதியே.

மாயமாய் மதாவ யிற்றிலுரு வாகிமிகு
    மலமூத்தி ரத்துழன்று
மாநிலந் தன்னிலே சேயெனத் தோன்றுசிறு
    மதலையாய்த் தானிருந்து
காயம்வ ளுத்தபின் நானென்ற கங்கொண்ட
    காளையாகத் திரிந்து
காமாதி நோயால் மெலிந்துடல் வருந்தியொரு
    கன்னியைம ணந்துபின்னும்
தேயமதி லெங்கெங்கு மோடியெந் நாளுநிதி
    தேடிப்பு தைத்துவைத்து
தேகியென் போர்தமக் கீயாமல் வீணிலே
    தினமுங்க ளிக்குமிந்த
காயனெவ் வாறுனக் காளாவெ னருளுவாய்
    கங்கைபிறை யணிபிரானே
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
    கதிசுந்த ரேசபதியே.

பதிகம் முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவையாருண்மை

வித்துவான ஸ்ரீமத் ந. சுப்பையா பிள்ளை

பரம் பொருளாகிய இறைவனைப் பத்தி பரவசத்தாற் பாடியானந்தமுற்ற அடியார்கள் அப்பரமனையும் தம்மையும் முறையே அம்மையப்பர் சேய், நாயக நாயகி, ஆண்டானடிமை என்றின்னோரன்ன தன்மைகளால் தொடர்பு படுத்திப் பாடியன்பு செய்தனர். **"ஈன்றாளுமாயெனக்கு எந்தையுமா யுடன்றோன்றினராய்......** தோன்றாத் துணையா யிருந்தனன் றனடி யோங்களுக்கே" — "அப்பனீ யம்மைநீ ஐயனும் நீ........" எனத் திருநாவுக்கரசு நாயனாரும், "மறைகலந்த ஒலி பாடலோடாடலராகி மழுவேந்தி. **இறை கலந்த இன வெள்வளை சோர என் உள்ளங் கவர் கள்வன்"** [நாயக நாயகி பாவம்] - எனத் திருஞான சம்பந்த சுவாமிகளும், "பித்தா பிறை சூடி...... **அத்தா உனக் காளாயினி** அல்லேனெனலாமே" - **"ஆயா வுனக் காளாயினி** அல்லேனெனலாமே" - **"அடிகேளுனக் காளாயினி** அல்லேனெனலாமே" - **"அண்ணா வுனக் காளாயினி** அல்லேனெனலாமே" - **"மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே...... ஆளாயிருக்கும் அடியார்** தங்கள் அல்லல் சொன்னக்கால், **வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே"** [ஆண்டானடிமையோடு தோழமைத் தன்மையால் உதாசின வார்த்தையும்] - "பறக்குங் கிள்ளைகாள் பாடும் பூவைகாள், அறக்கண் என்னத் தகும் **அடிகளாரூரரை, மறக்ககில்லாமையும் வளைகள் நில்லாமையும், உறக்கமில்லாமையும் உணர்த்தவல்லீர்களே"** [கைக் கிளைத் திணைப்பொருள் பற்றிய நாயக நாயகி பாவம்] எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருவாசகப் பதிகங்களில் [ஆண்டானடிமைத்தன்மை] திருவாதவூரடிகளும் பாடியவற்றை உதாரணமாகக் காணலாகும். இங்ஙனமே ஆழ்வார்களும் நாலாயிரப் பிரபந்தப் பாசுரங்களிற் பாடிய பாடல்கள் பலவுள.

திருக்கோவையாரில் திருவாதவூரடிகள் இறைவனை நாயகியாகவும் பக்குவான்மாவாகிய தம்மை நாயகனாகவும் கொண்டும், தமது பேரின்ப அனுபவப் பொருளை வரிசைப்படுத்தி உள்ளுறைப் பொருளாகக் கொண்டும் அகப்பொருட்கிளவிப் பொருளாகிய சிற்றின்பப் பொருள் வெளிப்படையாய்த் தோன்றப் பாடினர் என்பர் பெரியோர். திருக்கோவையாருக்கு உரையெழுதிய பேராசிரியரும் பேரின்பத் துறைப்பொருள் அமைந்துள்ளது அந்நூல் என்றார்.

அவ்வகையான பேரின்பத் துறைப் பொருளை விளக்குவது திருக்கோவையாருண்மை என்ற நூல் அதனை இயற்றிய பெரியார் பெயர் அறியப்படவில்லை. ஏடுகளிலிருந்து பரிசோதித்து அச்சிட்டவர் வண்ணை நகர்ச் சுவாமிநாத பண்டிதர் என்னும் புலவர். அவர் வித்துவ சிரோமணி ஸ்ரீமத் ந. ச. பொன்னம்பல பிள்ளை அவர்களின் மாணாக்கர். அப்பதிப்பிற்கு அக்குரவரும், சுன்னாகத்து ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவர் முதலாயினோரும் சிறப்புப்பாயிரம் வழங்கியிருக்கின்றனர்.

திருக்கோவையாருண்மை என்ற நூலில் பேரின்பத்துறைப் பொருளாகிய சில விஷயங்கள் பின்வருமாறு:-

"தத்துவாதீத தற்றரிசன சுத்த சாக்கிரத்தானமே குறிஞ்சி நிலம். போதாதீதத திருவருட்டரிசன சுத்த சொப்பனத்தானமே பாலைநிலம். அருளாதிக்கந்தானேயான சுத்த சுழுத்தித்தானமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை நிலம். அருளுருவ பேத சுத்த துரியத்தானமே மருத நிலம் பரமசிவவின்பச் சுத்தாதீதமே நெய்தல் நிலம்" இப்படி ஐந்து நிலமுஞ் சுத்தாவத்தைத் தானங்களாகவும் பஞ்ச சத்தி யதிட்டானத்தானங்களாகவும், நாயகி பரமபொருளாகவும், நாயகன பக்குவான்மாவாகவும், தோழி திருவருளாகவும், தோழன் ஆனம போதமாகவும், செவிலித்தாய் திரோதாயியாகவும், நற்றுய் பரையாகவும் கொள்ளப்படும்.

"துறைகளெல்லாம் நாயகியை ஆன்ம நாயகியாகச் சொல்லியிருக்க இவ்விடத்தில் [ திருக்கோவையாரில் ] நாயகியைச் சிவமாகச் சொல்லலாமோ எனில், இது தனியே ஒவ்வொரு துறைகளைச் சொல்லாது முழுவதுங் கோவையாக [ கோவை பொருந்த ]ச் சொல்லுதலானும, பெறுவான் நாயகனும் பேறு நாயகியும் இன்பம் நாயகியும் இனப சுகத்தைப் பெறுவான் நாயகனும்; இரசமும் நாவும்போல இருத்தலானும, முழுவதும் முற்றுவமையாகிய பெருமையுஞ் சிறப்பும் 'சிற்றம்பலம் போலும்' - 'சிவானந்தம் போலும' என்னும் மேன்மையும் [ நாயகிக்கு உவமையாகச் சொலத்தக்க தகுதிச சிறப்பு சிவமாகிய நாயகிக்குப் பொருந்து மன்றி ஆன்மாவை நாயகி எனக் கொண்டால் அவ்வான்மாவுக்கு திருக்கோவையில் இவவாறு கூறப்படும் உவமை பொருந்தாது என்றபடி ] ஆகியவை யெல்லாம் நாயகிக்கே பெறுதலானும் நாயகியே பரம் பொருள். [ஆனல்] மேற் சில சில துறைகளில் நாயகி சொல்லும் வார்த்தையும் தொழிலும் வருத்தமும நாயகன் சொல்லும வார்த்தையும் தொழிலும் வருததமும் வணக்கமாகவும் நிகழும்; எதனுலென்னில், அபேத வின்பமாகப் பெற்ருனந்த மனுபவிக்குங்கால் நிகழும் நிகழ்ச்சி யெல்லாம் அருட்கருவியாகலான், நாயகன கூற்றெல்லாம சிறிதிடத்து நாயகி கூற்ருகவே நிகழும் அவ்விடங்களில் அறிந்து பயன் பெறவேண்டும்."

திருக்கோவையாரில் வரும் அகப்பொருட் கிளவிக் கொத்துக்கள் இருபத்தைந்தாகும். அந்த இருபத்தைந்து கிளவிக் கொத்துக்கும் பேரின்பத்துறைப் பொருள் இருபத்தைந்து திருக்கோவையாருண்மையிற (25) சூத்திர வடிவில் இயற்றப்பட்டுள்ளன. அக்கிளவிக் கொத்துக்களின் பெயரும் அவற்றிற்குப் பேரினப வகையான கருத்து விளக்கமும பின்வருமாறு:-

**அகப்பொருட் கிளவிக்கொத்தின் பெயரும், உட்பிரிவாகிய கிளவிகளின் தொகையும்:.**

**கிளவிக்கொத்துக்குப் பேரின்ப வகையான உள்ளுறைப் பொருள் விளக்கம்:-**

1. இயற்கைப் புணர்ச்சி (18-கிளவி) — பக்குவான்மாவுக்குச் சத்திநிபாதம் பொருந்துங் காலத்து நிகழும் ஞானகுரு தரிசனம். ஆன்மா தற்போதங்கண்டு அகலுதல்.

2. பாங்கற்கூட்டம் (18-கிளவி) — ஞானகுரு தரிசனத் தன்பு மிகுதியாற் பேரானந்தம் பெற்று அனுபவித்தல்.

3. இடந்தலைப்பாடு (13-கிளவி) — குரு அறிவித்த திருவருளைச் சிவத்துடன் கலந்து தரிசனம் புரிதல்.

4. மதியுடம்படுத்தல் (20-கிளவி) — சிவமும் உயிரும் கூடியதைத் திருவருளுணாந்திடல்.

5. இருவருமுள்வழி அவன்வர உணர்தல் (2-கிளவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | சிவமுயிர் கூடலை அருள் வினவியது. |
| 6. முன்னுறவுணர்தல் (1-கிளவி) | சிவமுயிர் கலத்தலை அருள் பணியாற் காண்டல். |
| 7. குறையுறவுணர்தல் (1-கிளவி) | அருள் உயிர்ப்பக்குவமறிந்து வியந்தது. |
| 8. நாண நாட்டம் (5- „ ) | சிவம் உயிரிடத்துக் கருணையுடைய தென்று அருள் நோக்கல் |
| 9. நடுங்க நாட்டம் (1- „ ) | |
| 10. மடற்றிறம் (9- „ ) | சிவத்திடை மோகமுற்ற உயிர் இன்புறு தபடேக அருளோடுரைத்தது. |
| 11. குறை நயப்புக்கூறல் (8- „ ) | சிவத்தோடு உயிரைச் சேர்க்கவேண்டி உயிர்ப் பரிவினை அருள் எடுத்தறிவுறுத் தல் |
| 12. சேட்படை (26-கிளவி) | கிடையாவின்பங் கிடைத்தலால் உயிர்க்கு அருள் அவ்வின்பத்தின் அருமை காட்டி அறியாள்போலப் பலப்பல அருமை பற்றி யுரைத்து பின் சிவத்தோடு சேர்க்க உளங் கொளல். |
| 13. பகற்குறி (32-கிளவி) | இயற்கைபோற் சிவத்தோடு சேர உயி ரைக் கூட்டிப் பிரிதல். |
| 14. இரவுக்குறி (35-கிளவி) | அருளே உயிரைச் சிவத்தோடாக்கி அவ் வருமை தெரிய வற்புறுத்தி சிவனது கருணைபலவு மெடுத்துக்காட்டியது. |
| 15. ஒருவழித்தணத்தல் (13-கிளவி) | சிவனது கருணையை அருள் தெரிவித் தது. |
| 16. உடன்போக்கு (56-கிளவி) | அருளுயிர்க்கருமை அறியவுணர்த்தலும், ஆனந்தத்திடையழுத்தலும், திரோதை பரை வழியாகப் பண்புணர்த்தலும. |
| 17. வரைவு முடுக்கம் (16-கிளவி) | சிவனது கருணை தெரியவுரைத்து அவ் வின்பம பெற அருள் எடுத்தியம்பியது. |
| 18. வரை பொருட் பிரிதல் (33-கிளவி) | கருணை தோன்ற அருளேயுணர்த்த லும் திரோதையும் பரையுந் தெரிசன மாகித் திவ்விய இன்பங் கூடுங்குறியுங் குலவியுணர்த்தல். |
| 19. மணஞ் சிறப்புரைத்தல் (9-கிளவி) | உயிர் சிவமணம் பெற்று உண்மையின் பாகி பரைகடந்தின்பப் பண்பாய் நிற்றல். |
| 20. ஓதற் பிரிவு (4-கிளவி) | ஆனந்தபூரண வின்பத்திறம் பாராட்டல் |
| 21. காவற் பிரிவு (2-கிளவி) | இன்பத்திறத்தை எங்குங் காண்டல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. பகைதணி வினைப்பிரிவு (2-கிளவி)
23. வேந்தற்குற்றுழிப்பிரிதல் (16-கிளவி)
24. பொருள் வயிற்பிரிவு (20-கிளவி)
25. பரத்தையிற் பிரிவு (49-கிளவி)

இன்பக்கனமன்றி வேறிலையுல கென்றல்.

ஆனந்தம் பெற்ற ஆராமை முற்று முரைத்தல்.

உயிர் ஆனந்தமாகி அதுவே தானுய்த் தானேயது வாகுந்தன்மை.

உயிர் எல்லாப் பதங்களையும் உயிர்களையும் உலகங்களையும் காணத்தக்க சர்வஞ்ஞத்துவம்பெற்று அளவிலாப்பேரின்ப மெய்தி நின்றதனமை.

இவ்வாறு கிளவிக் கொத்து இருபத்தைந்துக்கும் வெவ்வேறு சூத்திரங்களாற் பேரின்பத்துறைப் பொருள கூறி, பின்னர்க் கோவைச் செய்யுட்களின் தலையங்கமாய் வரும கிளவி (துறை)ப் பெயருக்கும் விளக்கமாயுள்ள அகப்பொருட் கிளவிக்குரிய கொளுச்சூத்திரங்களுடன் பேரினபத்துறைப்பொருள் விளக்குங் கொளுச்சூத்திரங்களையுங் கூறிச் செல்லுகின்றது. திருக்கோவையாருண்மை ஆனல் இப்பேரினபத்துறை பற்றிய கொளுச்சூதிரக் கருத்துக்கள திருக்கோவைச் செய்யுட்களில் அமைந்து தோனறும் விதத்தை எடுத்து விளக்கும படியான உரைவிளக்கம எழுதப்படவில்லை. அவ்விளக்கம் ஞானசாத்திர அறிவு முதிர்ச்சியும் சிவானந்த (பேரின்ப) அனுபவஞானமுமுடையார்க்கே புலனுவதன்றி ஏனையோர்க்கு உணர்தலும் உணர்த்துதலும் அரிதாதல்பற்றி, இந்நூலாசிரியராலும் பிறரெவராலும் எழுதப் படவில்லைபோலும் திருக்கோவையாரின் உரையாசிரியராகிய பேராசிரியரும் இவ் விஷயத்தைத் தமது உரையிற் குறிபபிட்டுச் சென்றுர்.

இனி, இப்பேரின்பத்துறைப் பொருளாகிய உள்ளுறைப் பொருள் (தத்துவார்த்தம்) ஒவ்வொரு திருக்கோவைச் செய்யுளினும் அமைந்துள்ளவாற்றைக் கொள்ளும் நெறிமுறை யாதோ எனில், குறிப்புப் பொருளாகிய (வியங்கியார்த்தமாய்த் தோன்றும்) தொனிப்பொருள் வகையால் பெறப்படக்கிடந்தனவாகக் கோடல்சாலும். அஃது எங்ஙனமோ எனில், உதாரணமாக ஒன்று காட்டலாம்: திரிபுரசங்கார வரலாற்றுக்குத் திருமூலநாயனர் "அப்பணி செஞ்சடை யாதி புராதனன், முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள், முப்புர மென்பது மும்மல காரியம், அப்புர மெய்தமை யாரறிவாரே" எனத்தத்துவார்த்தங்கொண்டு விளக்கிக் கூறியது போல, கோவைச் செய்யுளுள்ளே வெளிப்படையாகக் காணப்படும். உலகியற் பொருளின் நிகழ்ச்சியோடு பேரின்பத்துறைப் பொருளாகிய சிவானந்த அனுபவ நிகழ்ச்சிக் கிரமவரிசைப் பொருள்களையும் ஞான சாத்திர அறிவின் துணைகொண்டு ஒப்பிட்டு நோக்கி விளங்கிக்கொள்ளல் சாலும் என்றறிக.

ஆகவே, திருக்கோவையார்ச் செய்யுட்களின் தத்துவார்த்தமாகிய உள்ளுறைப் பொருளின விரிவு ஞானசாத்திரஙகளின் அறிவு முதிர்ச்சியும் சிவானந்த (பேரின்ப) அனுபவஞானமுமுடையார் தத்தம் அறிவின் தரத்துக்கேற்ப உணர்தற் பாலதாகலின், ஞானசாத்திர அறிவு முதிர்ச்சியில்லாத ஏனையோர் 'திருக்கோவையாருள் சிற்றின்பப் பொருளன்றிப் பேரின்பத் துறைப்பொருள் உண்டென்பதும் கொள்ளல் இயலுமென்பதும் யாங்ஙனம் பொருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்? அக்கூற்று பொருளற்ற புனைந்துரையே' என்று புறங்கூறுவர். அவர் அக்கூற்றையொழிந்துய்யுமாறு அதற்குச் சாதனமாகத் திருக்கோவையாருண்மை என்ற நூலை அன்னார்க்கு அறிமுகப் படுத்துதலே இக்கட்டுரையின் நோக்கமும் பயனுமாம்; மற்று, அது கூறும் பொருளையெல்லாம் விரித்து விளக்குதலன்று என்பது கூறி இக்கட்டுரையை இவ்வளவில் முடிக்கின்றேம.

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ!
மனநின் றுருக்கு மதுர வாசக!
கலங்குறு புலனெறி விளங்குறு வீர!
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
னொருகலையேனு முணரா னஃதான்று
கைகளோ முற்படுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னென்று விழிப்பி னெரியு
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வென்பணிவானே.

மணிவாசக சுவாமிகள் திருவடிகள் வாழ்க!

திருச்சிற்றம்பலம்.

# திருவாசகத்தின் அன்புநிலை

சிவஸ்ரீ கு. பூர்ணனந்தா B. A. (Hons.)

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு." —திருக்குறள்

"அகரவுயிர்போல் அறிவாகி யெங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து."
—திருவருட்பயன்

"ஈதலறந் தீவினை விட்டீட்டல் பொருள் [எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொரு மித்தாதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந் [திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு." —ஔவையார்

என்பன பண்டைச் சான்றோர் வாக்குக்களாம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற பாகுபாடு பண்டைக் காலந்தொடங்கி நிலவி வந்துளது. இவற்றின் உண்மையினையே மேற் கூறியாங்கு வகுத்துள்ளார். அறம் என்பது தவிர்வன தவிர்ந்து ஆவன ஆற்றி உயிர் வாழ்தலாகும். பொருள் அறத்தையும் இன்பத்தையும் நல்க வல்லது. அஃதும் தீவழி தவிர்த்து ஈட்டப்பட வேண்டியதேயாகும். இல்லறத்தி லிருந்து சுற்றம் புடைசூழ வாழ்தல் இன்பமாகும். இவற்றில் வெறுப்புத்தோன்றி எம்மை ஆட்டியருளும் பரம் பொருளை அடைதலே உடம்பெடுத்ததன் பயனாகும். வீட்டனுபவம் யார்க்கும் எடுத்துரைக்க ஒண்ணாத தாதலின் எவரும் விவரித்திலர். அனுமான வகையாலறி யப்படுவதேயன்றி வேறு வகையான் அறியப் படுதலின்று. திருவள்ளுவ நாயனாரும் அறத் துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என உரைத்தனரே தவிர வேறு வீட்டுப்பாலென ஒன்று கூறிற்றிலர் என்பதும் நோக்கற்குரியது.

முன்னைய மூன்றனைப்பற்றியும் கூறும் நூல்கள் பலவுளவேனும் இறுதியாய வீடு பேற்றைப்பற்றி அறிய உதவுவன வீடடைந் தார் வரலாறுகளும், அவர்கள் திருப்பாடல்களு மேயாகும். இவைகளே திருமுறைகள் எனப் படுவன.

எவற்றையும் உணர்வதற்குக் கல்வி ஞானம் வேண்டும். கல்வியின்றேல் இறை வனை யடைதலும் சாத்தியமாகாதன்றே. இது பற்றியே,

"கல்லார் நெஞ்சில் — நில்லான் ஈசன்
சொல்லாதாரோ — டல்லோம் நாமே".
—சம்பந்தர்

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை"
—திருமாளிகைத்தேவர்

என்றார் சான்றோரும். எனவே இறைவனை அறியவும், வீடுபேறெய்தவும் கல்வி ஞானம் அவசியமாமென்க.

இவ்வுலகப்பற்று சிறிதுசிறிதாக நீங்கப் பெற்ற அடியார்கள் தமது அனுபவங்களைப் பக்திமிகு பாடல்களாகத் தந்துள்ளார்கள். அவற்றை நாம் உணரவேண்டுமானால் அவர் களது நிலையைக் கற்பனையிலேனும் நாமடைய வேண்டும். இன்றேல் அவர்களை அறிவது சாத்தியப் படாததொன்றாகும். அத்தகைய அன்பர்கள் இவ்வுலகப்பற்றினின்றும் நீங்கி இறைவனை அணுகிய நிலையை எய்தினர். அவர்களுள்ளும் ஒவ்வொருவர் தகைமைக்கு ஏற்ப ஒவ்வொரு தானத்திலேயே நின்றுள்ள னர். சிவபதத்தை அடைந்து தொண்டு செய் தார் பலர்; இரண்டறக் கலந்தார் சிலர்; இவ் விதமாக அடியார்கள்பேறும் வேறு வேறு நிலையையுடையன.

அங்ஙனம் அருள்செய்யப்பட்ட திருமுறை கள் பன்னிரண்டாகும். இவற்றுள் முதல் ஏழும் தேவாரங்களாகும். திருவாசகம், திருக் கோவை எட்டாவதாகும். ஏனையன எஞ்சி யன. இறைவன்மாட்டுப் பேரன்பு பூண்டோர் வரலாறு கூறும் நூல்களும் பல. திருத் தொண்டர் புராணம் என்னும் பெரிய புரா ணம் அடியார் பலரின் வரலாறுகளைக் கூறும். அதன்கண் தலைசிறந்த அடியாருள் ஒருவரா கிய மாணிக்கவாசகர் வரலாறு தரப்பட்டிலது. இதனால் மாணிக்கவாசகர் அக்காலத்து வாழ்ந் திருக்கவில்லை என்ற கொள்கையும் ஒருபுறம்.

திருத்தொண்டர்புராணம் இயற்றினார் சேக்கிழார் நாயனார் ஆவார்கள். அவர் எம் முறையில் அதனை இயற்றினார் என்பது அவர் கவிதையினாலேயே அறிவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்பர் நாயகரடியார் பேரவைக
[ தாமெய்த
நம்பியாரூரர் திருக்கூட்டத்தி னடுவணை ந்
[ தார்
தம்பிரான் தோழர் தாம்மொழிந்த தமிழ்
[ முறையே
எம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்த
[ லுறுகின்றேன்".

என்ற செய்யுள் அதனைத் தெரிவிப்பதாகும். தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்திநாயனார் கூறிய முறைபற்றியே தாமும் கூறுவதாகச் சொல்கின்றார். எனவே நாயனார்கள்பற்றிய ஒழுங்காவது யார் யார் சேர்க்கப்பட்டனர் என்றாவது கொள்வதில் சேக்கிழார் தம் ஆராய்ச்சியான் எழுந்தது எதுவும் இல்லை யென்றே கொள்ளவேண்டும்.

சுந்தரமூர்த்தி நாயனாரும் தமது திருத் தொண்டத் தொகையில் மாணிக்கவாசகரைக் குறிப்பிடவில்லை. அவர் திருத்தொண்டத் தொகை எங்ஙனம் இயற்றினாரெனப் பார்ப் போம்.

அவர் திருவாரூரிலே பரவையாரோடு கூடிவாழும் காலத்தில் ஒருநாள் திருக்கோயிலை அடைந்தபோது தேவாசிரய மண்டபத்திலே சிவனடியார்கள் திருக்கூட்டத்தைக் கண்டு "இவர்களுக்கு நான் அடியனாகும் நாள் எந் நாளோ" என்று நினைத்துக்கொண்டு உள்ளே போனார். அப்பொழுது ஆரூர்ப்பெருமான் நம்பியாரூரது மனக்கருத்தை நிறைவேற்று வாராய் "நீ நம்முடைய அடியார்களை வணங்கி அவர்கள்மேலே பதிகம் பாடு" என்றருளிச் செய்ய, சுந்தரமூர்த்திநாயனார் இறைவரை வணங்கிநின்று "சுவாமீ! அடியார்களது பெருமையின்னதென்றும் அவர்கள் தன்மை இப்படிப்பட்டதென்றும் அறியாத தமியேன் எப்படிப்பாடுவேன்! தேவரீரே அருளிச்செய்ய வேண்டும்" என்று வேண்ட, சுவாமி அதற் கிசைந்து அடியார்கள் பெருமைகளை அவர் அறியும்படிசெய்து தமது அருமைத் திருவாக் கினால் "தில்லைவாழந்தணர் தம்மடியார்க்கு மடி யேன்" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினார். அதுகண்டு, சுந்தரமூர்த்தி நாயனார் தேவாசிரய மண்டபத்தை யடைந்து அடியார் திருக்கூட்டத்தைப் பலமுறைவணங்கி அந்த அடியார்கள் யாவர்க்கும் வெவ்வேறாக அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத் தொகை என்னும் பதிகம்பாடி அவர்களை வணங்கினார்; என்னும் பொருள்படக் கூறு கின்றது பெரியபுராணம்.

இதனால், தேவாசிரய மண்டபத்தில் கூடி
யிருந்த சிவனடியார்களைமட்டுமே கண்டார்
என்றும் அந்த அடியார்கள் யாவர்க்குமே வெவ்
வேறாக அடியேன் அடியேன் என்று திருத்
தொண்டத் தொகை என்னும் திருப்பதிகம்
பாடினார் எனவும் அறியலாகும். திருத்தொண்
டத் தொகையுள் மாணிக்கவாசகர் கூறப்பட
வில்லை ஏனெனில், அடியார் கூட்டத்தில் அவர்
காணப்படவில்லை என்பதே முடிபாகும். ஏன்
காணப்படவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

இறைவன் ஆட்கொள்ளும்வகை பின்வரு மாறு கூறப்பட்டுள்ளது.

"சரியை இயற்றுவார் தமக் கெம்முல
[ களிப்போம்"
"கிரியை யன்புடனே இயற்றவல்ல
[ ரெம்மருங்கிருப்பர்"
"பெருவெளிக்கே புக்கழுந்தின ரெம
[ துருப் பெறுவர்"
"வித்தகரே மேன்மையான நம் மெய்ப்
[ பதம் பெறுவார்".

எனவே சிலர் சிவனுலகெய்துவர். சிலர் சிவ னருகிருப்பர். சிலர் அவருருப்பெறுவர். சிலர் மெய்ப்பதம் சேர்வர் என்பது பெற்றாம். இனி தேவாரம் பாடியருளிய மூவரும் எந்நிலை எய் தினார் என்று சேக்கிழார் கூறுவதையே பார்ப் போம்.

"அன்ன தன்மையி லிருவரும் பணிந்தெ
[ ழுந்தருமலை மேற்கொண்டு
மன்னும் வன்றொண்ட ராலாலசுந்தர
[ ராகித்தாம் வழுவாத
முன்னை நல்வினைத் தொழிற்றலை நின்
[ றனர் முதற்சேர் பெருமானு
நன்மை சேர்கண நாதரா யவர்செயு
[ நலப்புறுதொழில் பூண்டார்."

எனக் கூறப்பட்டுள்ளது. எனவே சுந்தர மூர்த்தி நாயனார் கணங்களுக்குத் தலைவராய் விளங்கினார் எனப் பெற்றோம்.

இனி, திருநாவுக்கரசர் புகலூரர் என்னை இனிச் சேவடிக்கீழிருத்தியிடும் என்று எழு கின்ற ஞானத்தினால் திருவிருத்தங்கள் பல பாடி "எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனே" என்று திருத்தாண்டக மெடுத்துத் திருப்பாட்டி னிறுதிதோறும் "புண்ணியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னடிக்கே போதுகின்றேன்" என்று பாடி சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார் என்பதனை,

"மண்முதலா முலகேத்த மன்னுதிருத்
தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே
னெனப் புகன்று
நண்ணரியசிவானந்தஞானவடிவேயாகி
அண்ணலார்சேவடிக்கீ ழாண்டவரசெய்
தினார்."

எனப் பெரியபுராணம் கூறுகின்றது.

ஞானசம்பந்தரது நிலைபற்றிய வரலாற்றினை, அப்பொழுது கருணாநிதியாகிய சிவபெருமான் "நீயும் உன் மனைவியும் உன்னுடைய விவாகத்தைக் காண வந்தவர்கள் எல்லோரும் இந்தச் சோதியினுள்ளே வந்து நம்மையடையுங்கள்" என்று அருளிச் செய்து திருக்கோயில் உட்ப மேலோங்கிய சுத்த சோதி வடிவாகி அச்சோதிக்கு ஒரு திருவாயிலை வகுத்துக்காட்டினார். கருணைக்கடலாகிய திருஞானசம்பந்தப் பெருமான் சோதி வடிவாய் நின்ற இறைவரை வணங்கித் துதித்து உலகம் உய்யும்பொருட்டு அதனை அடையும் நெறியை அருளிச்செய்யத் திருவுளங்கொண்டு யாவர்க்கும் மெய்ந்நெறி நமச்சிவாய என்கின்ற மந்திரம் என்னும் கருத்தையுடைய "காதலாகிக் கசிந்து" என்னும் திருப்பதிகத்தை யாவருங் கேட்க அருளிச் செய்து இக்கலியாணங் காணவந்த எல்லீரும் உங்கள் பிறவி நோய் தீர இந்தச் சோதியினுள்ளே பிரவேசியுங்கள் என்று அருள்செய்து தம்மோடு உள்ளவர்கள் யாவரும் அச்சோதியினுள்ளே புகுந்தபின் நாயனார் தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக்கொண்டு சோதியை வலஞ்செய்து அதனுட் புகுந்து சிவசாயுச்யமடைந்தார் என்னும் பொருள்பட,

"காதலியைக்கைப்பற்றிக் கொண்டுவலஞ்
செய்தருளித்
தீதகற்றவந்தருளுந் திருஞானசம்பந்தர்
நாதனெழில்வளர்சோதி நன்னியதனுட்
புகுவார்
போதநிலை முடிந்தவழி புக்கொன்றி
யுடனானார்."

கூறுகின்றது பெரியபுராணம்.

ஆனால், மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறுபற்றிக் கூறுகின்ற திருவாதவூரர் புராணம் அவர் நிலைபற்றிப் பின் வருமாறு கூறுகின்றது.

நின்றபுகழ்ப் புலியூரர் நேயமுடன் புடை
சூழச்
சென்றருளுக் கிடமான செம்பொனினம்
பலமெய்தி
ஒன்றியவித் தமிழ்மாலைப் பொருளிவ
ரென்றுரை செய்து
மன்றதனிற் கடிதேகி மறைந்தனரங்
கவர்காண
"செய்காட்டுங் கழகவடிந் தில்லையுளார்
பொருளென்றே
கைகாட்டித் தம்முருவங் காட்டாமன்
மறைந்தாரைப்
பைகாட்டும் பேரரவப் பணியுடையார்
தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவிர நீராக்
கினார்."

பாலுடன் கலந்த நீர்போல இறைவனுடன் இரண்டறக் கலந்தனர் என்பதே பெறப்படுகின்றது.

அடியார்களின் தகுதிக்கேற்ப அவரவர் வேண்டுவதையே இறைவன் அருளிச்செய்கின்றான். நாயன் மூவரும் ஏனையோர் பலரும் சிவபதமடைந்தனர். மாணிக்கவாசக சுவாமிகளே இறைவனுடன் இரண்டறக் கலந்தனர். ஏனையவர் நாயன்மாரென அழைக்கப்பட்டும் மாணிக்கவாசகரை நாயனரென எவரும் அழைத்ததாகத் தெரியவில்லை. வாதவூர் முனிவர் என்றின்னவாறே பெயர் பலவும் தரப்பட்டுள்ளது.

எனவே சுந்தரரும் திருத்தொண்டத்தொகை பாடியபொழுது மணிவாசகர் தனியொருவராய், இறைவனின் வேறாய் இராமையாலேயே பாடாதொழிந்தனர் எனக் கொள்ளலே ஏற்புடைத்தாகக் காணப்படுகிறது.

இங்ஙனம் கொள்ளின் இவர் காலத்தால் முந்தியவர் எனக் கொள்ளலே தக்கதாகத் தெரிகிறது.

இனி, திருவாசகமும் திருக்கோவையாரும் பாடினார் ஒருவராவென்பது எங்கனும் மறுக்கப்படவில்லை. ஒருதனி நூலின் இருபெரும் பிரிவுகளாகவே கொள்ளத் தக்கனவாகக் கூறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. திருக்கோவையார் போன்று முழுதும் அகத்துறை தழுவிப் பாடிய இறைவன் புகழ் கூறிய பாடல்களை வேறெங்கும் காண்கிலேம். அடிகள் மரபு தமிழ் மரபு பாண்டி நாட்டுத் தமிழ்மரபு. தமிழ் மரபு பற்றியே பாடினர்.

அகப்பொருளிலக்கணம் தமிழ் மொழிக்கு எத்துணைச் சிறப்பினை நல்குகின்றது என்பது நன்கு புலனாகும். இருவருள்ளத்தை ஒன்றுபடப் பிணைப்பது அகப்பொருள்.

எழுத்து முதலாகிய ஐவகை இலக்கணங்களுள்ளும் பொருளிலக்கணம் சிறப்புடையது. அப்பொருளிலக்கணத்துள்ளும் புறப் பொருள் இலக்கணத்துள்ளும் அகப்பொருளிலக்கணமே சிறந்தது. அவ் அகப்பொருள் இலக்கணத்துள்ளும் கற்பென்னும் கைகோளினும் களவென்னும் கைகோளே சிறந்தது. இதனைக் கீழ்க் காட்டியவாறு இறையனார் களவியலுரைகாரரும் பாண்டியன் கூற்றாகக் கூறியது கொண்டும் உணர்ந்துகொள்ளலாகும். அது வருமாறு: "எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம்'' (என்பது பாண்டியன் கூற்று.)

" என்னை பாவம் அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையது ஆகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம் " (என்பது இறையனார் கூற்று.)

எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டே என்னும் பாண்டியன் கூற்றால் ஏனைய இலக்கணங்களிலும் பொருளிலக்கணமே சிறப்புடையதாகும் என்பது புலனாகும். பொருளதிகாரமென்பது ஞானப்பொருட் பகுதித்து என இறையனார் கூறுதலினும் அவ்விறைவனார் பொருளதிகாரம் தருதும் என்று களவு கற்பு என்னும் கைகோள் இரண்டினிற்கும் உரிய இலக்கணங்களையே அருளிச் செய்தமையானும் புறப்பொருளிலக்கணம் ஞானப்பகுதிக்குக் காரணமாவதன்றிக் காரியமாகாது என்பதும், அகப்பொருள் இலக்கணமே ஞானவிலக்கணமாவது என்பதும், களவு கற்பு என்னும் இரண்டு இலக்கணங்களையும் இறையனார் தாமருளிய நூலுள்ளே விரித்திருந்தும் அதனுக்குக் களவியல் எனப் பெயரிட்டருளிய காரணத்தான் கற்பென்னும் கைகோளினும் களவென்னும் கைகோளே ஞானப்பகுதியுட் சிறந்த பொருளையுடையது என்பதும் தாமே போதரும்.

இன்னும் இக்கற்பினும் களவே சிறந்ததாகும் என்ற தலைப்பின் வருஞ் செய்யுட்பகுதிகளும் வலியுறுத்தாநிற்கும்.

நான்மறை விரிந்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவிர் கேண்மின் சிறந்தது
காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்புஓர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே அதுதான்
பரத்தை உள்ளதுவே பண்புறு கழறல்
தோள்புதி துண்ட பத்தைஇல்; சிவப்புற
நாளண் துவக்கும் சுணங்கறை யதுவே
கேள்அணங்குற மனைக்கிளந்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனும் ஊடல் உள்ளதுவே அதனால்
அகறலறியா வணியிழை நல்லார்
இகறலைக் கொண்டு துனிக்குந் தவறிலர்இத்
தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழ் ஆய் வந்திலார்
கொள்ளார் இக் குன்று பயன்,

(பரி. 9 ஆஞ். செய். வரி. 12- 26)

மாமயில் அன்னார் மறையிற் புனர் மைந்தர்
காமங்களவிட்டுக் கைகொள் கற்புற்றன
மல்லற் புனல்வையை மாமலை விட்டிருத்தல்
இல்லத்து நீதனிச் சேறல் இளிவரல்

(பரி. செய். 11 வரி. 41—4)

"மக்கள் கூட்டம் களவிற்கில்லை என்றமையால் மக்கள் கூட்டம் கற்புக்குப் பெறப்படுகின்றது'' என யாப்பருங்கல விரித்தியுரை ஆசிரியர் கூறுகின்றார். (யாப், தனி. சூத். 6), உரை) இதனால் இக்களவுக் கூட்டம் கந்தருவக் கூட்டத்தோடு ஒப்புடையதாகி அன்பின் ஐந்திணையாகிய தமிழ் மரபுபற்றிய புனைந்துரைப்பட்டதாகி ஞானத்திற்கு உரியதாகும் என்பது பெற்றாம்.

எனவே திருவாதவூர் அடிகளும் தலைசிறந்த அகப்பொருள் தழுவியே பாடலுற்றார். இதற்காகவே கல்விஞானம் அவசியம் வேண்டுமென முன்னரே கூறினேன்.

ஏனையடியவர்கள் இறைவன்பதம் அடைந்து மகிழ்ந்து வாழவேண்டி அழுதிட அடிகளோ அவனையே பெற விழைந்தனர். திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவையைப் பாடினார் அடிகளெனில் அகப் பொரு ளிலக்கணம் கைவரப்பெற்றூர் என்பது நன்கு புலப்படும். எனவே அவருள்ளமும் அவ் வழியிற் செறிந்திருந்தது.

இதனால் அவர் மனமும் செவ்வி முதிர்ந் திருந்தது.

தந்தையின் வழிபற்றி இயல்பாகவேஇறை வனிடத்துப் பேரன்பு கொண்டிருந்தார். ஊழ் வினை செலுத்திடச் சென்றுகண்டார்; குருந்த நீழலிற் குருமணியை.

"என்றலுமே சிவமேது ஞான மேதிங்
கிலங்கியிடும் போதமே தியம்பு வீரே
லன்றுபட நீழலில்வந் திருந்தார் நீரே
யடியேனு முமக்கடிமை யாவே னென்ன
நின்றசிவ மொன்றதனைத் தேர்தன் ஞான
நிகழ்போதந்தேர்ந்ததனைத்தெளிதலாமென்
றொன்றியநற் பொருள்வினவி நிற்பார்
சிந்தை
யுருகும்வகையுரைசெய்தாருவமையில்லார்'

என்றாங்கு உபதேசஞ் செய்தருளினார்.

வேறு யாரிடமேனும் உபதேசம் பெற வேண்டிய அவசியம் அடிகட்கு ஏற்படவில்லை. அன்றுகண்ட குருமணியின்மேல் மனம் பதி ந்துவிட்டது. எனினும் உலக பந்தம் விட வில்லை. அவர் சீர் விழுங்கவேண்டுமல்லவா?

நரியைக் குதிரையாக்கியும்
பிரம்பால் மொத்துண்டும்

அதிசயங்கள் நிகழ்ந்தன.

இவை இவ்வடிகள் பொருட்டே என்பது வெளிப்படை. அன்று கண்ட குருமணியின் றேல் உயிர் வாழமுடியாது என்று அவர்மேல் பேராசை கொண்டார் அடிகள்.

அழுதால் உன்னைப் பெறலாமே என்று அனுபவத்தை அவரே சொல்கின்றூர். அகப் பொருள் செறிந்த உண்மை அதுபற்றியே பாடல்கள் எழுந்தன. அவை இறைவனுடன் அன்யோன்னியத்தை நெருக்கின. திருக்கோவை யாரில் தலைவன் தலைவி எனக் கொண்டவ ரன்றே. இங்கும் அதனையே கொண்டார். ஆள் வோனும் ஆளப்படுபவனும் என எண்ணினார்.

ஆண்மையோடு இருப்பின் ஆணவம் அக லாது. பெண்மைக்கு வேண்டுவது திண்மை இளகிய நெஞ்சும் தாயுள்ளமாகிய மென்மைக் குணங்கள். தாமும் அவ்விதமே ஆனார் அடிகள். இதனால் பலவிடங்களில் இறைவனைத் தலை மகனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு தலைவனை விழைந்தவளாகவும் பாடியருளினார்.

ஏனைய அடியார்கள் ஆண்டான் அடிமை என்ற முறையில் பயந்தும், ஓரோவழி தோழ மை பூண்டும் பாடினாராக மாணிக்கவாசக சுவாமிகள் பெருமையும் ஐந்திணை அன்புபற் றிப் பாடினார் என்பது உணர்ந்து இன்புறற் குரியது.

திருவுந்தியாருள்ளே தலைவனாகிய இறை வனது வெற்றித் திறன் பேசலும், திருத்தோ ணோக்கத்திலே அவ்வெற்றித் திறன் பூண்ட தலைவனது திருத்தோள்களைப்புணர்ந்தமையான் உவகை எய்திய தலைமகளது ஆனந்தமும் திருப்பொன்னூசலிலே வரையாது களவுவேட் டுச் சிறைப்புறத்தானு வந்திருக்கும் தலைவனே வரைவு கடாவு முகத்தானே தோழி தலைமக ளுடன் ஊசலாடுதும் என்றலும், அன்னைப் பத்துள்ளே காப்பு முதலியவற்றானே தலைவி தலைமகன் திறத்தைச் செவிலி கேட்பக் கலங்கி மொழிதலும், குயிற்பத்துள்ளே குறித்த பரு வம் வந்தும் வந்தெய்தாத் தலைவனை உடன் வந்து எய்துமாறு குயிலைக் கூவுக என்று தலை மகள் கூறுதலும்.

வாழாப்பத்திலே,

"ஊடுவ துன்னோ டுவப்பது முன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி"

எனத் தலைமகனது இன்றியமையாமையைத் தலைமகள் அவனுக்குணர்த்துவதும்,

திருவம்மானையிலே,

"சூடுவேன் பூங்கொன்றைச் சூடிச்சிவன்
திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கிநின்று [கித்
ஊடுவேன்செவ்வாய்க் குருகுவேன்உள்ளுரு
தேடுவேன் தேடிச் சிவன்கழலேசிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேனனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்
மானாய்."

எனத் தலைமகள் தனது கற்பின் திறனையெல் லாம் ஒருங்கு விரித்தலும் திருவெம்பாவைத் திருப்பாக்கள் அனைத்தும் தலைமகனைக்காணற் காவிய தலைமகளிர்கூறுங் கூற்றமும்,திருப் பொற் சுண்ணத்திலே,

கங்கை இரைப்ப அரா விரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே.

[ஈங்கே திருவாதவூரடிகள் தம்மைத் தலைவியாக் குறிப்பிட்டமை நன்கு விளங்கும்.] எனத் தலைமகனை நீராட்டவேண்டித் தலைமகள் தோழியருடன் பொற்சுண்ணம் இடித்துமென் றலும், திருக்கோத்தும்பியிலே,

'கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ' எனத் தலைமகன்பால் வண்டினைத் தலைமகள் தூது விடுதலும், திருத்தெள்ளேணத்திலே தம்மையு மகளிரொடுளப்படுத்திக்கொண்டு தலைமகனாகிய எம்பிரான் தலைமகளாகிய தம்மையாட்கொண்டருளிய திறனையெல்லாம் விரித்துப் பாடித் தெள்ளேணங் கொட்டியாடுதலும், அன்ன பிறவும் உற்று நோக்கப்பெறின் திருவாசகத்துள்ளே தம்மைத் தலைமகளாகவே அடிகள் பாவித்துப் பரவிப் பாடிப் பசந்துருகினாரன்றித் தம்மைத் தலைமகனாகவும் எம்பெருமானைத் தலைமகளாகவும் யாண்டும் பாவித்தாரில்லை என்பது செவ்வனே புலனாகும்.

இவ்வாற்றால் அடிகள் அன்பு நெறியையே கைக்கொண்டார் என்பது பெற்றாம். அருட் சிறப்பும் தோன்றிற்று. இதனாலே இறையனார் அகப்பொருள் தோன்றிய காலத்தே திருவாசகந் திருக்கோவையாரும் தோன்றின எனக் கொள்ளற்கு மிடனுண்டு.

---

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
யோதுவார் மனமெஅு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குற முத்தி மெய்ப்பயன் றருமே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன

நயமிக்க நகைகளுக்கு
நம்பிக்கையான
இடம்

# பொ. அம்பலவாணர்

119, கஸ்தூரியார் தெரு,

யாழ்ப்பாணம்

---

**MANUFACTURING JEWELLER**

AND

**DIAMOND IMPORTER**

# P. Ambalavanar,

119, KASTURIAR ROAD,

**JAFFNA**

கிளை :-

**யாழ்ப்பாணம் ஜுவலறி ஸ்ரோர்ஸ்,**

114, செட்டியார் தெரு,

கொழும்பு 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S. P. SUBRAMANIAM

CIRCULAR ROAD,

**KARAINAGAR**

*Agent for Pearl Assurance Co. Ltd., London*

WHOLESALE & RETAIL DEALER IN

STATIONERY,
TOILET GOODS,
MILK FOOD,
BISCUITS,
LANTERN & PARTS,
THREADS,
TORCHES,
BULBS,
BATTERIES,
PADLOCKS,
VARNISH,
PAINTS,
HARDWARE,
CEMENT,
& FANCY GOODS,
ETC., ETC.

AT COMPETITIVE RATES.

எம்மிடம்

பள்ளிக்கூடப் புத்தகங்களும், உபகரணங்களும்,
பாலுணவுகளும், லாம்புவகைகள்,
பூட்டுவகைகள், சீமேந்து, பெயின்ட்,
வீட்டுக்கட்டடத்திற்குரிய இரும்புச்சாமான்களும்

தொகைக்கும் சில்லறைக்கும்

மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**S. P. சுப்பிரமணியம்**

சேக்குலர் ரேட், : காரைநகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A. K. S. & SONS

## JEWEL HOUSE

The Reputed Name Connected with

# JEWELLERY

FOR OVER 43 YEARS

நாணயமிக்க நகைவியாபாரிகளாய்

43 வருட நற்சேவையால் அமோக ஆதரவுபெற்ற

நகை வியாபாரிகள்

# ஏ. கே. எஸ். அன் ஸன்ஸ்

நகை மாளிகை

## A. K. S. MAGUDHOOM MOHAMED & SONS

JEWEL HOUSE

63-65, KANNATHIDDY, :: JAFFNA.

Dial: 519


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெடிக்கல் ஹோல்

224, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

எங்களிடம்

சகலவிதமான இங்கிலீஸ் சாய்ப்பு மருந்துகள் கலவைகளும்

சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

T'phone: **575.**

# THE MEDICAL HALL

Wholesale & Retail Druggists & Dispensing Chemists

**224, Hospital Street, :: JAFFNA.**

Telephone: **575.**

---

உங்களுக்குத் தேவையான

★ தங்க

★ வைர

நகைகளுக்கு

**"நவகல்யாணிக்கு" விஜயம் செய்து**

ஓடர் கொடுத்தும் உடனாகவும் பெற்றுக்கொள்ளவும்

உரிமையாளர்: மு. இரத்தினசிங்கம்

# நவகல்யாணி ஆபரண மாளிகை

68 H, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம் மூலமும் ஆராய்ச்சிப் பேருரையும்

உரையாசிரியர் :

உலகியல் விளக்கம், பாரதீயம், புத்திளஞ் செங்கதிர் முதலிய நூல்களின் ஆசிரியர்

பாலைபாடிய வெண்ணெய்க்கண்ணனர்


**பண்டிதமணி க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள்**

இஃது அறிஞர் பலராலும், பத்திரிகைகள் பலவற்ருலும் புகழ்ந்து பாராட்டப்பட்டது.

பழைய நல்லாசிரியர்களுடைய போக்கைத் தழுவியும் திண்மையும் வளமும் பொருந்த ஆக்கப்பட்டுள்ளது. அறிஞர்தம் சிந்தனைக்கோர் செல்வமாக அமைந்துளது.

பக்கம்: 1192 — சில பிரதிகளே உள்ளன — விலை ரூபா 15/-

---



உ

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்

# K. P. லிங்கம் நல்எண்ணெயை

உபயோகித்து

## ஆனந்தத்தை அடையுங்கள்

தயாரிக்கும் இடம்:- நீலிப்பந்தனை, காரைநகர்

விற்கும் இடம்:- **க. பரமலிங்கம்,**
26, மானிப்பாய் ரோட்,
யாழ்ப்பாணம்.

தந்தி: "சோதி"
தொலை பேசி: நம். 457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# K. K. Sangarappillai

★

**Importer**

**&**

**General Merchant**

**114, Hospital Road, :: JAFFNA.**

---

# K. K. சங்கரப்பிள்ளை

★

## பலசரக்கு வியாபாரம்

சகல சாமான்களும்

நிதானமான விலைக்குப்

பெற்றுக் கொள்ளலாம்

114, ஆஸ்பத்திரிரோட், :: யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SOLE DISTRIBUTORS FOR:-

**ROYAL WALL CLOCKS**

AND

**ROYAL BRAND HAIR WIGS**

*Visit:-*

# FANCY PALACE

*The Leading House for:-*

Sheaffer, Parker and other Fountain Pens,

Gent's, Ladies' and Children's Shoes.

Wrist Watches,
Groceries,
Fancy Goods,
Sundries,
Cutlery,
Toys,
Suitcases,
Umbrellas.
Dinner Sets,
Tea Sets,
Lemonade Sets,
Falks & Butter Fly,
Kerosene Cookers,

Ladies' & Gent's Presentation Articles,

AND

IMITATION JEWELLERIES.

பென்சி பெலஸ் 27, மெயின் ஸ்றீட், யாழ்ப்பாணம்.

**27, Main Street, Jaffna.**

*Telegrams:* **"FANCYWARE"**

*Telephone No.* **239.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*For*

# JEWELS

**DISTINCTIVE IN DESIGNS**

AND

**DEPENDABLE IN QUALITY**

*Visit*

# A. S. MAHADEVA

JEWELLER & DIAMOND MERCHANT,

**65, Main Street, JAFFNA**

T'Phone: **421.**

தற்கால



நவீன

தங்க

வைர

நகைகளுக்கு

சிறந்த இடம்

# அ. ச. மகாதேவா,

நகை வியாபாரம்,

போன்: 421 65, மெயின் ஸ்றீற், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நதியான் ஸ்டோர்ஸ்

Prop: வே. ஆறுமுகம்

எம்மிடம் உங்களுக்குத் தேவையான

சகலவிதமான புடவைகளும்,

சித்தவைத்தியத்திற்கு வேண்டிய

மருந்து மூலிகளும்

சகாயவிலைக்குக் கிடைக்கும்.

சர்க்குலர் றேட் :: காரைநகர்

புதிய எழுத்துக்கள், அழகான வேலைப்பாடு, நவீனயந்திரம்,
அனுபவம் மிகுந்த வேலையாட்கள், தவணைதவருத தன்மை. மலிவு
இவையெல்லாம் எங்கள் அச்சகத்தின் தன்மைகளில் சில

இம்மலரின்
அச்சும் அமைப்பும் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?
அதற்குப் பொறுப்பாளிகள்

# எங்கள் அச்சகம்

துண்டுப்பிரசுரங்களானுலும்சரி, பாடபுத்தகங்களானுலும் சரி,
ஆண்டு மடல்களானுலும் சரி
உங்கள் அச்சு வேலைகளை எம்மிடம் ஒப்படையுங்கள்

# ஸ்ரீ சண்முகநாத அச்சகம்

இல. 336-340, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்
டெலிபோன் இல: 416


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடத்திலும்,

தரத்திலும் தேர்ந்தது

**தாமரைப் "பூ" மார்க் கலிக்கற் ஓடுகளே**

பொதுசனங்களாலும், அரசாங்கத்தாலும்

விசேடமதிப்புப் பெறுவது

**தாமரைப் "பூ" மார்க் கலிக்கற் ஓடுகளே.**

இலங்கை, இந்தியா, மலாயா,

அவுஸ்திரேலியா முதலிய தேசங்களில்

சுகாதார வசதிக்காகவும் அமோகமாகப்

பாவிக்கப்படுவது

**தாமரைப் "பூ" மார்க் கலிக்கற் ஓடுகளே.**

அழகும், அழுத்தமும், படிவும், கசிவின்மையும்,

மலிவும், மிருதுவும், மேன்மையும் உள்ள

தெனப் பலராலும் மெச்சப்படுவது

**தாமரைப் "பூ" மார்க் கலிக்கற் ஓடுகளே.**

அத்துடன்

உலகப் பிரசித்திபெற்ற

**மோகன் ஸ்டோம் புறூவ் (Storm Proof)**

மங்களூர் ஓடுகளும்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

**ஒருமுறை விஜயம் செய்து வாங்கி வீடுகளுக்குப் போட்டு பரீட்சித்துப் பாருங்கள்**

இவை விற்குமிடம்

# N. S. தாசன் அன் கம்பெனி

**2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

ரெலிபோன் இல. **661.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Galgamuwa Stores

HEAD OFFICE:-

84, 85 & 86, MAIN STREET, GALGAMUWA

BRANCHES:-

91, 92 & 93. MAIN STREET, GALGAMUWA

26, KASTURIAR ROAD, JAFFNA.

## கல்கமுவா ஸ்ரோர்ஸ்

41, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்

---

பலவகையான

சாய்ப்புச் சாமான்களும்,

நவதானியங்களும்,

இலகுவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

FOR YOUR

**TEXTILE REQUIREMENTS**

*Visit*

## A. Veluppillai & Sons,

**26, KASTURIAR ROAD,**

JAFFNA.

T'phone : 237

Donated by:-
Mr. K. C. KULARATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்: 281

தந்தி: ஜுவல்லர்ஸ்

மதிப்பிற் சிறந்த வைரங்கள்!
அழகிற் சிறந்த ஆபரணங்கள்!!

யாவற்றிற்கும்

ஈழத்திருநாட்டில் இணையற்ற ஸ்தாபனம்

எல். கே. எஸ்.

தங்க மாளிகை

யாழ்ப்பாணம்

★ ★ ★ ★

நம்பிக்கை! நாணயம்! நயம்!

மிக்க நவநாகரீக தங்கநகைகளை
30 வருடங்களாகச் செய்தளித்து
அமோகப் புகழ்பெற்ற

நகை வியாபாரிகள்

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்
5658. 49. 2321. 3 & 4.

UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES

249904

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUBRAMANIAN'S

BABY  BRAND



## DRINK
## BABY Brand Special

| | |
|---|---|
| Orange Special | Summer Drink |
| Lanka Apple | Grape Fruits |
| Fruit Crush | Tonicto |

## "TONICTO"

A SPECIAL PREPARATION
FOR
**Cold, Headache, Fever & Stomach Troubles**

**Prepared by:**
SUBRAMANIAN
AERATED WATER MANUFACTORY
VALVETTITURAI.

**Branch:**
RAJU STORES,
2/B, STANLEY ROAD,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YAPPAN'S

A HOUSEHOLD NAME FOR JEWELLERY
AND DIAMONDS

**Yappan's Culture Diamonds**



**Yappan's Rising Star Diamonds**

THEY ARE AS LUSTROUS AS THE REAL DIAMONDS

Gems, Real and Cultured Pearls specially imported from World's Best and Cheapest Markets in assorted sizes and various qualities at prices customers will be pleased to pay.

**Special Wholesale and Retail prices to the Trade and Manufacturing Goldsmiths.**

*A TRIAL ORDER WILL CONVINCE YOU!*

**PROMPT DELIVERY!** **SATISFACTORY SERVICE!**

# Yappan Jewellers,

DIAMOND MERCHANTS & MANUFACTURING JEWELLERS.

**163, New Chetty Street,**
**COLOMBO 13.**
Phone: **5489**

**64, Kannathiddy Road,**
**JAFFNA.**
Phone: **518.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
249904
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org